
கலையின்
விலை!
பாஸ்
நாட
கம்

1142 — 7/96

A/655

# கலையின் விலை

எம். ஏ. அப்பாஸ்
எழுதியது

•

விலை ரூபாய் ஒன்று.

இந்தியா, பர்மா, மலாயா விற்பனையாளர்கள்:

**சுகுமாரிப் பதிப்பகம்,**

சன்னதித் தெரு, : : : : சென்னை—26.

இலங்கை விநியோகஸ்தர்கள்

**மோகன் & கம்பெனி லிமிடெட்**

74, டாம் வீதி, த. பெ. 964, கொழும்பு.

தந்தி "GRINPIC" போன்: 5739

பிரசுரித்தோர்:

கணேஷ் பிரசுரம்,

சென்னை—1.

முதற் பதிப்பு : 14–1–55

(பொங்கல் வெளியீடு)

A2
A2

அச்சிட்டது : பாரதி பிரிண்டர்ஸ், பிராட்வே, சென்னை–1.

# பெருமைப்படுகிறோம்

மகத்தான மக்கள் எழுத்தாளரான அறிஞர் அப்பாஸ் அவர்களை மக்களுக்கு அறிமுகப் படுத்த வேண்டிய அவசியம் என்றோ மறைந்து விட்டது. ஆம்; தமிழன்பர்களுக்கு அவருடன் நீண்டநாள் உறவு உண்டு.

சத்திர சிகிச்சை செய்யும் ஸர்ஜனின் கத்தி போல் சமுதாய—அரசியல் ஊழல்களை தயை தாட்சண்யமின்றி அறுத்தெறியும் அற்புத ஆயுதம் அவரது இலக்கியப் படைப்புகள்.

தமக்கே உரித்தான தனிநடையிலே, ஜீவன் ததும்பும் சொற்களிலே, மக்களின் எதார்த்த வாழ்வைப் படம் பிடித்துக் காட்டும் அவருடைய நூல்கள் ஒவ்வொன்றும், வெளிவந்து ஓரிரு மாதங்களுக்குள்ளேயே இரண்டாம், மூன்றும் பதிப்பை எட்டிப்பிடித்து விடுவதை தமிழகம் பெருமையுடன் பார்த்து மகிழ்கிறது.

அவருடைய 'கலையின் விலை' என்ற இந்த நாடகத்தை வெளியிடுவதில் நாங்கள் பெருமையும் பேரானந்தமும் அடைகிறோம்.

வணக்கம்,

கணேஷ் பிரசுரம்.

சென்னை—1.

# ஒரு சொல்!

'கலையின் விலை' காலத்திற்குத் தேவையானது எனக் கருதினேன். வெளிபிடுகிறேன். "கீரையோ கீரை" என்று கூவி விற்பதுபோல், கலையைக் காசுக்காக கீழ்த்தரமான நோக்கங்களுக்குப் பயன்படுத்தும் கயவர்களை மககள் மன்றத்தில் நிறுத்துகிறது 'கலையின் விலை'. படித்துப் பார்த்துத் தீர்ப்புக் கூறுங்கள்.

வணக்கம்,

**எம். ஏ. அப்பாஸ்.**

கொழும்பு,
25-12-54.

ஆசிரியரின் பிற நூல்கள்:

1. இவளைப் பார்! (2-ம் பதிப்பு)
2. கட்டுங்கள் மூட்டை! (2-ம் பதிப்பு)
3. கள்ளத் தோணி (4-ம் பதிப்பு)
4. துரோகி (2-ம் பதிப்பு)
5. மூன்று பிரேதங்கள்!
6. சாபக்கேடு

# கலையின் விலை

**காட்சி: 1.]** **[நாடக மண்டபம்.**

[பண்டிட் ஜனார்த்தனம் பிள்ளையின் ' மறுமலர்ச்சி நாடக மன்ற'த்தின் 25 வருட கலா சேவையைக் குறிக்கும் வெள்ளிவிழாக் கொண்டாட்டம் வெகு விமரிசையாக நடைபெறுகிறது. விசேஷ அழைப்பின் மீது ஏராளமான அபிமானிகளும், பிரபலஸ்தர்களும், கலைஞர்களும் குழுமி இருக்கிறார்கள், மேடைமீது விழாத் தலைவர் திவான்பகதூர் சேதுராமலிங்கத் தேவரைச் சுற்றி மறுமலர்ச்சி மன்ற முக்கியஸ்தர்கள் அமர்ந்திருக்கிறார்கள்.]

திவான்பஹதூர்: (எழுந்து நின்று கனைக்கிறார். இருபது ராத்தல் எடையுள்ள மலர்மாலை ஒன்றை அவருக்கு அணிவிக்கிறார் ஜனார்த்தனம் பிள்ளை. திவான் பஹதூர் மாலையைக் கழற்றாமலேயே, மலர்ந்த முகத்துடன் கூட்டத்தை நோட்டம் பார்த்துவிட்டு) லேடீஸ், அன்ட் ஜென்டில்மென்......!

கூட்டத்தில் ஒருவர்: தமிழில் பேசுங்கள்! தமிழில் பேசுங்கள்!!

பலர்: ஆங்கிலம் வேண்டாம்; தமிழில் பேசுங்கள்!

தி. பஹதூர்: ஐ ஆம் ஸாரி. (கூட்டத்தில் சிரிப்பு) கனவான்களே, கனவாட்டிகளே! எனக்கு ரொம்ப சந்தோஷம், இந்த வெள்ளி விழாவில் எனக்குத் தலைமை வகிப்பது பற்றி... (கூட்டத்தில் பலத்த சிரிப்பு) 'ஐமீன்'... இந்த வெள்ளி விழாவுக்கு நான் தலைமை வகிப்பது பற்றி. நாடகக் கலையையே தனது 'புரபஷ'னாகக் கொண்டு அதற்கே 'ஸெர்வ்' செய்கிறார் பண்டிட் ஜனார்த்தனம் பிள்ளை. அவர் மட்டுமல்ல, அவருடைய 'ஹோல் பேமிலி' யும் இந்த 'ஆர்ட்'டுக்கே தங்கள் 'லைபை'—அதாவது ஜீவியத்தை—'டெடிகேட்' செய்திருக்கிறது. 'ஹீரோ' வேஷம் போட்டு மிஸ்டர் ராஜன் நடிக்கையில் 'ஹீ ஸ்டீல்ஸ் அவர் ஹார்ட்ஸ்'! வில்லன் மிஸ்டர் கேசவன் 'ஸ்பிளண்டிட்'! இந்த 'ஸாக்ரிபை'ஸுக்கு இவர்கள் உலகத்திற்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள். (கூட்டத்தில் சிரிப்பு) 'ஐ ஆம் ஸாரி'... உலகம் இவர்களுக்குக் கடமைப் பட்டிருக்கிறது.

இந்த 'ஹானர்' எனக்குத் தந்ததற்காக இவர்களுக்கு நான் நன்றி சொல்லுகிறேன். இவர்களது சேவையைப் பாராட்டி இவர்கள் சார்பாக இந்த மாலையை உங்களுக்கு (பலத்த சிரிப்பு) 'எக்ஸ்கியூஸ் மி'... உங்கள் சார்பாக இந்த மாலையைப் பண்டிட்டிற்குச் சூட்டுகிறேன். (கரகோஷம்.)

ஜனார்த்தனம்: கண்ணியமிக்க கலாபிமானிகளே, வணக்கம். நமது திவான் பஹதூர் அவர்கள் மிகவும் தெளிவாக சில வார்த்தைகளில் எங்களது சேவையைப்

பாராட்டி பேசினார்கள். எத்தனையோ தவிர்க்க முடியாத வேலைகளிருந்தும் எங்கள் வேண்டுகோளை அங்கீகரித்து இங்கே அவர்கள் சமுகம் தந்தது, அவர்களுக்கு நாடகக் கலை மீதும், தமிழ் மீதும் இருக்கும் ஆர்வத்தையும் அபிமானத்தையுமே காட்டுகிறது...

கூட்டத்தில் ஒருவர்: தமிழ் மீதுள்ள அபிமானம் தான் அவர் பேசும்போதே தெரிந்ததே. (கூட்டத்தில் பலமான சிரிப்பு.)

ஜனார்த்தனம்: ஆங்கிலத்திலேயே பேசும் பழக்க முடைய திவான் பஹதூர் அவர்கள் இவ்வளவு அழகாகத் தமிழில் பேசியது உங்களில் பலருக்கு ஆச்சரியமாகவே இருந்திருக்கும்.........

திவான் பஹதூர்: (குறுக்கிட்டு) 'ஹியர் ஆப்டர்' நான் 'டமிலி'ல்தான் 'லெக்சர்' செய்வேன்.

ஒருவர்: ஆஹா! இனி 'டமிலை'ப் பற்றி நமக்கென்ன 'வொர்ரி' (கூட்டத்தில் கேலிச் சிரிப்பும், கூப்பாடும், கரகோஷமும்.)

ஜனார்த்தனம்: இந்த நாடகக் கலையையே என் வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டு இன்றோடு இருபத்தைந்து ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. கலாதேவியின் கடாட்சம் எனக்குக் கணக்கிட முடியாதபடி கிடைத்திருக்கிறது. ஆகவேதான் இந்தக் கலா சேவையை என்னோடு மட்டும் நிறுத்திக்கொள்ளாமல் எனது இரு கண்கள் போன்ற ராஜனையும் கேசவனையும் இந்தப் புனித சேவைக்கே அர்ப்பணித்துவிட்டேன். (கரகோஷம்) ராஜன் பி. ஏ. பரீட்சையில் மாகாணத்திலேயே முதல்வனாகத் தேறியவன் என்பது உங்களில் பலருக்குத் தெரிந்திருக்காது. அவன் மட்டும் விரும்பியிருந்தால் வெகு சுலபமாக ஒரு சர்க்கார் உத்தியோகத்தைத் தேடிக் கொண்டிருக்க முடியும். ஆனால் கலா சேவைக்காக அவன் அதைக் காலாலுதைத்துத் தள்ளிவிட்டான். (கரகோஷம்.)

இப்படி என் குடும்பமே கலா சேவையில் ஈடுபட்டு மேலும் மேலும் உழைக்கக் காரணம் நீங்கள் தரும்

ஆதரவும், காட்டும் அபிமானமும்தான். ஆகவே வெள்ளி விழா கொண்டாடும் இந்த வெற்றி தினத்திலே உங்கள் எல்லோருக்கும் எனது நன்றியையும், எங்கள் மறுமலர்ச்சி நாடக மன்ற அங்கத்தினர்களுடைய நன்றியையும் உள்ளன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (கரகோஷம்)

கூட்டத்தில் பலர்: ராஜன் பேசட்டும்...ராஜன் பேசட்டும்.

ராஜன்: (எழுந்து கரங்கூப்பி வணங்கி) கலையன்பர்களே, வணக்கம். நீங்கள் காட்டும் அபிமானத்திற்கும் ஆதரவிற்கும் என் நன்றி.

உயர்கல்வி கற்ற ஒருவனுயிருந்தும் நான் ஏன் இப்படி கூத்துத் தொழிலுக்கு என் வாழ்வை அர்ப்பணித்துவிட்டேன் என்பது பற்றிப் பலரிடையே பலவிதமான அபிப்பிராயங்கள் இருந்து வருவதை நான் ஓரளவு அறிவேன். இது குறித்து எனக்கு எத்தனையோ கடிதங்களும் கிடைத்திருக்கின்றன. ஆகவே, இந்த அரிய சந்தர்ப்பத்தில் அது குறித்து ஒரு சிறு விளக்கம் சொல்லிவைப்பது பொருத்தமாயிருக்கும் என்றே நம்புகிறேன்.

(கரகோஷம்)

அறிஞர்களும், சீர்திருத்தவாதிகளும் தங்கள் கருத்துக்களையும் நோக்கங்களையும் மக்களிடையே பரப்புவதற்கு தங்கள் தங்கள் மொழிகளில் மூன்று முறைகளைக் கையாண்டார்கள். அவைதான் இயல், இசை, நாடகம்.

இயல் என்ற வசன நடையில் ஒரு கருத்தை வெளியிடும்பொழுது அந்தக் கருத்து மக்களுக்கு அறிமுகமாகிறது. இசை மூலம் அதை வெளியிடும்போது அந்தக் கருத்து மக்களுக்கு அறிமுகமாவதுடன் அதைச் செயலில் காட்டவேண்டும் என்ற ஆசையும் மக்கள் மனதிலே தோன்றுகிறது. ஆனல் நாடகமோ இந்த இரு படிகளையும் தாண்டி இன்னும் ஒருபடி மேலேறிவிடுகிறது. ஆம், ஒரு லட்சியத்தை, படித்தவனுக்கும் பாமரனுக்கும் ஏககாலத்தில் விளக்கிக்காட்டி, அதைச் செயலில் காட்டவேண்டும் என்ற ஆசையையும் தூண்டி, உடனே

செயலிலும் இறக்கிவிடும் அதியற்புத ஆற்றல் நாடகக்கலை ஒன்றிற்குத்தான் இருக்கிறது. ஒவ்வொரு சம்பவத்தையும் நீங்கள் கண்களால் காண்கிறீர்கள், காதால் கேட்கிறீர்கள், சிந்தனை செய்கிறீர்கள், சீறி யெழுகிறீர்கள், அங்கலாய்க்கிறீர்கள், அலறித் துடிக்கிறீர்கள். ஒரு உயர்தர நடிகன்—குணச்சித்திர நடிகன் ஒரே சமயத்தில் உங்களை எத்தனையோ உணர்ச்சி அலைகளில் சிக்கித் தத்தளிக்க வைத்துவிடுகிறான். இன்ப ஏணியில் ஏற்றிச் செல்வான், துன்பக் கேணியிலே பிடித்துத் தள்ளுவான். பக்திச் சிகரம், பாசாங்குப் பள்ளம், தாயின் பாசம், பேயின் கோஷம், மழலைப் பேச்சு, மங்கையர் கண்வீச்சு... அப்பப்பா, உலக சம்பவங்களையே ஒரு சில மணி நேரங்களில் உங்கள் கண் முன் கொண்டுவந்து நிறுத்திவிடுகிறது நாடக மேடை! அரிய கருத்துக்களைப் பரப்பவும், நம்பிக்கையிழந்து, நாடி தளர்ந்து, வாழும் வகையறியாது சோம்பி, கூம்பி, அழுத்தப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டுக் கிடக்கும் மக்களின் உடம்பிலே குளிர்ந்து, சில்லிட்டு, உறைந்து போன ரத்தத்திலே சூடேற்றி, சுறுசுறுப்பை, உத்வேகத்தை உண்டாக்கி, செயல்புரியச் செய்து அவர்களின் விதியையே மாற்றியமைக்கும்படி செய்து காட்டவும் நாடகக் கலை சக்தி பெற்றிருக்கிறது—சரித்திரத்தில் செய்து காட்டியுமிருக்கிறது.

நாடகக் கலையால் முன்னேறி இன்று உலகின் நடு நாயகம் போல் ஒளிவிட்டு மனித வர்க்கத்தின் சுபீட்சப் பாதைக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கின்றன ரஷ்யா, சீனா போன்ற நாடுகள். மேனாடுகளிலுள்ள பேரும் புகழும் பெற்ற கலைஞர்கள் எல்லாம் நன்றாகப் படித்துப் பட்டம் பெற்றவர்கள், கௌரவமான குடும்பங்களில் பிறந்தவர்கள். ஒரு காலத்தில் நம் நாட்டிலும் மக்கள் நாடகக் கலைஞர்களை அகௌரவமாக நடத்தினார்கள்; அலட்சியப்படுத்தினார்கள். ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. பெரிய பெரிய தேசியத் தலைவர்களை, மதக் குருக்களை யெல்லாம் கண்ணெடுத்தும் பார்க்கப் பிரியப்படாத மக்கள், கலைஞர்களைக் கௌரவிக்க, கண்டு களிக்கக் கணக்கின்றிக்கூடுகின்றார்கள், கண்ணியப்படுத்துகிறார்கள் என்றால் நாடகக் கலையும், கலைஞர்களும் மக்கள்

மனதை அவ்வளவு தூரம் கவர்ந்து கொண்டதுதான். தங்களுக்காக, தங்களின் அன்றாடப் பிரச்னைகளை அலசி ஆராய்ந்து, அக்குவேறு ஆணி வேறாகப் பிரித்து, அதன் அடிப்படைக் காரணத்தைக் காட்டி, அந்த அநீதியை—அக்ரமத்தை—சுரண்டலை—துரோகத்தைத் தீர்த்துக்கட்டும் சிறந்த மார்க்கத்தையும் தெள்ளத்தெளிவாக உள்ளத்தில் பதியும்படி நடித்துக்காட்டும் கலைஞனை மக்கள் குலம் தக்கபடி மதிப்பதில் தவறென்ன இருக்க முடியும்?

மருந்து கசக்கிறது. குழந்தை அதை உட்கொள்ள மறுக்கிறது. குழந்தைக்கோ நோய். எப்படியும் மருந்து கொடுத்தாக வேண்டும். நோய் குணமாக வேண்டும். புத்திசாலியான வைத்தியன் அந்தக் கசப்பு மருந்தை சர்க்கரையில் குழைத்துக் கொடுத்துவிடுகிறான். குழந்தையும் கும்மாளம் போட்டுக்கொண்டு சாப்பிடுகிறது. அதுபோலவே உண்மை கசக்கிறது. உலகம் அதை ஏற்க மறுக்கிறது. அறிஞர்களும் சீர்திருத்தவாதிகளும் அந்தக் கசக்கும் உண்மையை நாடகம் என்ற சர்க்கரையில் பொதிந்து கொடுத்துவிடுகிறார்கள். மக்கள் அதை விழுங்குகிறார்கள்; விழித்துப் பார்க்கிறார்கள்; விளங்கிக்கொள்கிறார்கள்; கிளர்ந்தெழுகிறார்கள்; வாகை சூடுகிறார்கள்—அவ்வளவுதான்.

இத்தனை மகத்துவம் பெற்ற இந்தப் புனித கலா சேவை என் மனதைக் கவர்ந்தது. என்னை அர்ப்பணித்தேன். அன்பர்களே! உங்களை வெகுநேரம் தாமதிக்கச் செய்துவிட்டேன். பொறுமையுடனிருந்து எம்மைக் கௌரவித்ததற்காக மீண்டும் ஒரு முறை எங்கள் மன்றத்தின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*[ஆரவாரமான கரகோஷங்களுடன் விழா முடிவடைகிறது.]*

**காட்சி: 2.]** **[மஞ்சுளாவின் தனியறை.**

*[மஞ்சுளா ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறாள். நாடகாசிரியன் ராமனாத் மெதுவாக வந்து அவள் கண்களைப் பொத்துகிறான்.]*

மஞ்சுளா: யார்......?... யார் இது?.. உப்... ய

ராம்னுத்: (குரலை மாற்றிக்கொண்டு) உம்...... சொல்லு...நீயே சொல்லு......

மஞ்சு: (திகைப்பும் ஆனந்தமும் தொனிக்க) யார்!...என்...என்...

ராம்: உம்...சொல்லு...சொல்லு...சரிதான் உன்...

மஞ்சு: (கொஞ்சம் உறுதியுடன்) என்னுல் நம்பவே முடியவில்லையே! என் பிரார்த்தனை... என் உள்ளத் துடிதுடிப்பு...... இன்பக் கனவு... நனவாகிவிட்டதா, ராஜன்!

ராம்: (கோபத்துடன் கைகளை எடுத்துவிட்டு, சுயக் குரலில்) மஞ்சு, நினைத்தேன்... 'சந்தேகத்தோடு சதா சஞ்சலப்பட்டுக் கொண்டிருப்பானேன்? சோதித்தே விடுவோமே' என்றும் துணிந்து பார்த்தேன். உன் சூது வெளிப்பட்டது!

மஞ்சு: நீயா!......

ராம்: வேறென்ன, பேயா? மஞ்சு, என்னைத் தவிர வேறெவரையும் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை என்று உறுதி கூறிய நீ, காரியார்த்தமாக கேசவனைக் கைக்குள் போட்டுக்கொள்ள வேண்டும் என்று சொன்னுய். நானும் ஒத்தாசை செய்தேன். இன்று உன் மனதை நீயே திறந்து காட்டிவிட்டாய்!

மஞ்சு: ராம்னுத்!

ராம்: சீ, பேசாதே. எனக்கு நன்ருகத் தெரியும் உன் மனதிலே எனக்கோ கேசவனுக்கோ கொஞ்சமும் இடமே கிடையாது. நீ வலை வீசுவதெல்லாம் ராஜனுக்கே தான். அவனைச் சந்திக்கும்போதெல்லாம் நிலைகொள்ளாமல் தத்தளிக்கும் உன் உடல், அவன் செல்லும் திசை யெல்லாம் தேடியலையும் உன் வேல்விழிகள், அவனேடு பேசும்போதெல்லாம் உன் குரலில் தொனிக்கும் அந்தக் குழைவு, அவனுடன் நடிக்கும்போதெல்லாம் நீ அடைந்து

நிற்கும் அந்தப் பரவச நிலை...... உம்...ம்... எல்லாம் நானறிவேன். ஏன். இந்த நாடக மன்றமே அறியும்.

மஞ்சு: ராம், இதையெல்லாம் நீ உண்மையென்று நம்பிக்கொண்டாய் ? (சிரித்து மழுப்ப முயற்சிக்கிறாள்.)

ராம்: அய்யே! பாசாங்கு என்று நினைத்து பல்லிளிக்கச் சொல்லுகிறாயோ? மஞ்சு, உணவுக்கும் உடைக்கும் உடலையும் மானத்தையும் விற்றுக்கொண்டிருந்த உன்னை உல்லாசபுரியில் குடியேற்றினேன். காமச் சாக்கடை என்று ஊரார் காரி உமிழ்ந்த உன்னை கலாராணி என்ற லட்சிய ஏணியின் உச்சிப் படியில் ஏற்றிவைத்தேன். 'தாசியாயிருக்கிறேன் தஞ்சமளியுங்கள்' என்று தாழ் பணிந்து கெஞ்சினாய்; நானே உன்னை ராணியாக்கி வைத்து ராஜாவாக வாழத் திட்டமிட்டேன். வெற்றியும் பெற்றேன். உன் காதலுக்காக என்னிடத்திலிருக்கும் கதை எழுதும் திறனை, கலையை விலையாகக் கொடுத்து உனக்குப் புகழ் தேடித் தந்தேன். ஆனால்...

மஞ்சு: போதும், ராம். இதையெல்லாம் நீ சொல்லிக் காட்டத்தான் வேண்டுமா? மல்லிகை யென்றால் மணக்கும் என்றும் சொல்ல வேண்டுமா? என்னை நம்பு, ராம், எனக்காக நீ மேற்கொண்ட சிரமங்கள், செய்த தியாகங்கள்...... அப்பப்பா, கொஞ்சமா? நீ இருக்க எனக்கேன் கவலை. நீ எனக்காகச் செய்திருக்கும் தியாகத் துக்கெல்லாம் நான் எப்படிக் கைமாறு செய்வது என்பது ஒன்றுதான் என் கவலை. நம்மை ஏழை என்று எள்ளி நகையாடிய உலகத்திலே நாம் செல்வந்தர் என்ற செறுக்குடன் வாழவேண்டாமா? இதற்கெல்லாம் இன்று உடனடித் தேவை பணம். அது நிறைய இருக்கிறது— ஜனார்த்தனம் பிள்ளையிடம். அதை அடைவதற்குத்தானே நாம் கேசவனை அடுத்துப் பார்த்தோம்.

ராம்: அதுதான் தெரிந்துபோச்சே. கேசவன் பாச்சா ஜனார்த்தனம் பிள்ளையிடம் பலிக்காது.

மஞ்சு : புத்திசாலி !... அதைத்தான் நானும் சொல்ல வந்தேன். கேசவன் கையாலாகாதவன். ஜனார்த்தனம் பிள்ளை எதிரே அவன் செல்லாக் காசு! ராம், ஜனார்த்தனம்

ஒரு பணத்தோட்டம்; ராஜன் அதன் திறவுகோல்! நமக்கு வேண்டியதெல்லாம் ராஜனின் சிநேகமும் ஆதரவும்தான். இப்போ என்ன சொல்கிறாய்?

ராம்: (மலர்ந்த முகத்துடன்) சபாஷ், மஞ்சு! சோழியன் குடுமி சும்மா ஆடுமா? உன் திட்டத்தைப் புரிந்து கொள்ளலாமல்லவா ஆத்திரமாகப் பேசி விட்டேன்.

மஞ்சு: அது கிடக்கட்டும், ராம்! என்னைக் கோபிப்பதற்கு உனக்கில்லாத உரிமை வேறு யாருக்காம்! திட்டம் எப்படி என்று கேட்டால், நீ எதெதையோ சொல்கிறாயே.

ராம்: திட்டத்துக்கென்ன; அதை நிறைவேற்றத் தான் இந்தக் கதாசிரியன் ராம்நாத்தின் கலை இருக்கிறதே. ஆனாலும், கேசவனையும் வெறுப்பதுபோல் பட்ட வர்த்தனமாகக் காட்டிக்கொள்ளாதே. அது ஆபத்து.

மஞ்சு: சேச்சே... கேசவனிடமும் என்றும்போல் பாசாங்குப் புராணம் பாடித்தான் தொலைக்கணும். (தூரத்தில் கேசவன் வருவதைப் பார்த்துவிட்டு) ராம்! அதோ கேசவனே வருகிறான்.

ராம்: (நடிப்புடன்) மஞ்சு, நீ நிச்சயமாக நம்பு. கேசவன் உன்மீது உயிரையே வைத்திருக்கிறான். நீ அவனை சந்தேகிப்பது மகா பாவம். அவன் மனம் எனக்குத் தெரியும். சதா உன் எண்ணம்தான்.

[உள்ளே நுழையவிருந்த கேசவன், நின்று ஒட்டுக் கேட்கிறான்.]

மஞ்சு: ராம், நான் எப்படி நம்புவது? கேசவனோ நமது முதலாளியின் மகன். அதிலும் மூத்த மகன். நமது நாடகக் கம்பெனியின் வருங்கால முதலாளி. நானோ ஒரு சாதாரண ஏழை நடிகை. என்னை எப்படி அவர் மணந்து கொள்ள சம்மதிப்பார்? (இருவரும் கண் சிமிட்டிக் கொள்கின்றனர்.)

ராம்: மஞ்சு, கேசவன் படித்தவன்; பகுத்தறிவுவாதி பரந்த நோக்கமுள்ளவன். பலமற்ற இந்தச் சமுதாயக் கட்டுப்பாடுகளுக்கு பல்லக்குத் தூக்குபவன் அல்ல. அவன் வரட்டும் நானே அவனை நேரில் கேட்கிறேன். என்ன பதில் சொல்கிறான் என்பதை நீயே உன் காது களால் கேள்.

கேசவன்: (வந்துகொண்டே) ராம்னாத், கரும்பு தின்னக் கூலி கேட்கும் கருத்திழந்தவனல்ல இந்த கேசவன். என் இதய ராணியை ஏற்றுக்கொள்ள எள்ள ளவும் தயங்கமாட்டேன்.

மஞ்சு: நான் அவ்வளவு பாக்கியசாலியா, கேசவன்?

கேசவன்: மஞ்சு, என் இருதயத்தைத் திறந்து காட்ட தக்க சந்தற்பம் தேடிக் கொண்டிருந்தேன். அதை இன்று ஏற்படுத்திவிட்டார் அன்பர் ராம்னாத்.

ராம்: நான் சொன்னபோது ஏதோ நம்பமாட்டேன் என்றாயே, மஞ்சு. இதோ உன் இஷ்ட தேவதையே பேசுகிறதே, என்ன சொல்கிறாய் ?

மஞ்சு: (நாணமுற்றவள்போல்) போங்கோ ஸார். உங்களுக்கு எப்பவும் கேலிதான்.

[வேலைக்காரன் வேதாந்தம் வருகிறான்]

வேதாந்தம்: ஆண்டவனே, உங்கள் பெரிய ஆண்டவன் கூப்புடுராங்க.

கேசவன்: (எரிச்சலுடன்) அடப்போடா, இதோ வர்ரேன். ஆண்டவன் கூப்புடுராருன்னு அழைச்சிட்டுப் போக இந்த எமதர்மன் வந்துட்டாரு. சரியான சமயத் திலே கூப்புடுவாரு, இந்த அப்பா. மஞ்சு, நான் இதோ ஓடி வர்ரேன். உன்னிடம் ஏராளம் பேசவேண்டும்...... உம்... வர்ரேன், மிஸ்டர் ராம்னாத். (போகிறான்)

ராம்: ஹஹ்ஹஹ்ஹாஹா......! இவ்வளவு ஏமாளியா யிருக்கிறானே நமது வில்லன்!

மஞ்சு: ஹாஹாஹா...... சிலந்தி வலையில் சிக்கிய கொசுதான் நமது வில்லன்!

[இருவரும் மனம்விட்டுச் சிரிக்கிறார்கள்.]

**காட்சி: 3.] இரவு [ராஜனின் அறை.**

*[ராஜன் படித்துக்கொண்டிருக்கிறான். மஞ்சுளா வாசலில் வந்து நின்று திடீரென்று ஏதேதோ பேசுகிறாள்.]*

மஞ்சுளா: தங்கள் அதிரூப லாவண்ய எழிலிலே என் அன்பு இதயம் மலர்ந்தது. தாங்கள் வாய்ச் சொல் மகுடியிலே நான் வகை தெரியாமல் ஆடினேன். தாங்கள் என் அருகில் வந்து நிற்கும்போதெல்லாம் என் தேகத்திலே ஒரு காந்த சக்தி நீந்தி விளையாடுகிறது. பெண்மையின் நாணம் என்ற கட்டைத் தறித்துக் கொண்டு தங்கள் கரங்களிலே விழ—தங்கள் மார்பில் முகம் புதைத்துப்—புரள என். உடல் துடியாகத் துடிக்கிறது. தங்கள் அமுத வாயிலிருந்து ஒரு வார்த்தைத் துளி சிந்தாதா என்று அல்லும் பகலும் ஏங்கி நின்றேன்......

*[ஏற்கனவே சந்தேகத்தாலும், வெறுப்பாலும் புழுங்கிக் கொண்டிருந்த ராஜன் படித்துக்கொண்டிருந்த புத்தகத்தை வீசி யெறிந்து விட்டு கனல் பறக்கப் பார்க்கிறான்.]*

மஞ்சுளா: ......இனி என்னால் பொறுக்க முடியாது. என் யௌவன மென்மலரை இன்று எப்படியும் தங்கள் பாத கமலங்களிலே அர்ப்பணித்து விடுவதென்ற தீர்மானத்திற்குத் துணிந்து வந்துவிட்டேன். அதைத் தாங்கள் ஆசையுடன் எடுத்து முகர்ந்து அனுபவித்தாலும் சரி, அல்லது வெறுப்புடன் கசக்கி எறிந்தாலும் சரி. இதோ, பிரபோ! (ஓடிப்போய் ராஜனின் காலில் விழுகிறாள்.)

ராஜன்: (உதறித் தள்ளிக்கொண்டே) சீ. காமப் பிசாசே! கலையை விற்றுக் காமத்தை வாங்கும் கள்ளி!

மஞ்சு: ராஜன், அத்துமீறிப் பேசாதே. உன் மோகன ரூபத்தில் இங்கே யாரும் மயங்கிவிடவுமில்லை, மனதைப் பறிகொடுத்துவிடவுமில்லை. மமதை காட்டாதே.

ராஜன்: சீ, கழுதை. காரியம் கைகூடாவிட்டால் கலாவதி வேஷமோ! திராட்சை புளிக்கத்தான் செய்யும் உன் கபட நாடகம் அரங்கேருது இந்த மேடையிலே.

மஞ்சு: உளருதே... உன் முன் நிற்பது மஞ்சு!

ராஜன்: இல்லவே இல்லை. ஆலகால நஞ்சு...... மஞ்சு, ராம்னுத்திடம் மிஞ்சு, உன் ஆசைக் காதலர்களிடம் கொஞ்சு; ஆனல் இந்த ராஜனைக் கண்டால் எப்பொழுதும் அஞ்சு.

மஞ்சு: ஹூம்...நஞ்சு! ஆம் ராஜன்! உன் வாழ் விற்கும் உயிருக்கும் இனி என்றுமே நஞ்சுதான் இந்த மஞ்சு...... அதிகார மமதையால் என்னை அவமானப் படுத்திவிட்டாய். (கண்களைக் கசக்கிக்கொண்டே) நான் என்ன குற்றம் செய்துவிட்டேன்? ஆசிரியர் ராம்னுத் எழுதித் தந்த 'அன்பும் அதிகாரமும்' என்ற நாடகத்தின் வசனங்களைத்தானே பேசிப் பார்த்தேன்......

ராஜன்: (பதறிப்போய்) ஆ! .. மஞ்சு!

மஞ்சு: நான் ஒரு வேஷக்காரி. எனக்கென்ன அந்தஸ்திருக்கிறது ஒரு நாடகக் கம்பெனி முதலாளியின் மகனைக் காதலிக்க? என் வேலையை நான் செய்தாக வேண்டும். கொடுக்கப்பட்ட வசனங்களைப் பாடமாக்கி னேன். 'ஏதோ, ஹாயாக இருப்பானே கதாநாயகன், பாடத்தை ஒப்பித்துப் பார்த்தால் என்ன' என்ற சபலம் தட்டியது; வந்தேன். அதற்காக இப்படியா விஸ்வரூபம் எடுக்க வேண்டும்? (விம்முகிருள்)

ராஜன்: என்னை மன்னித்துவிடு, மஞ்சுளா. நெடு நாள் சந்தேகம் என்னை நேர்மை தவறச் செய்துவிட்டது. நீ பேசியவை நாடக வசனங்கள் என்று தெரியாமல் ஆத்திரப்பட்டுவிட்டேன். அழாதே, மஞ்சு. நான் பேசியவைகூட நாடக வசனங்கள் என்றே நினைத்துக்

கொண்டுவிடேன். நாடகங்களில் நான் இதைவிடக் கொடுஞ் சொற்கள் பேச நீ சகித்ததில்லையா? மஞ்சு... அழாதே... மன்னித்துவிடு...

[மஞ்சு கண்களைத் துடைத்துக் கொண்டே நடையைக் கட்டுகிருள்.]

காட்சி: 4.] [ஒத்திகை ஹால்.

[சில்லறை நடிகர்கள் பாகங்களைப் பாடமாக்கிக் கொண்டிருக்கிருர்கள்.]

பொருமை: டேய் அவசரம், எம் பாடத்தை கொஞ்சம் கேளுடா. ஐயா கோவிச்சுக்கப் போறார்டா. அதோ பாரு, ஆத்திரம் பாடம் சொல்ரத்தை.

அவசரம்: டேய், ஆத்திரம் பாடம் பண்ணிப்புட்டானேன்னு நீ ஏண்டா ஆத்திரப் படரே? ஒனக்குத்தான் எண்ணிக்குமே பாடம் வராதே.

பொருமை: ஒஹோஅண்ணும், அப்படியா நெனச்சிப்புட்டே. இந்தா கேளு: 'எசமான், பஞ்சபாண்டவங்களுக்கு பதிபக்தியோடு சேவுகம் செஞ்சு கருப்பு அழியாம இருந்த சீதா பிராட்டி போல, நம்ம எசமானியம்மாவும்... ...... (எல்லோரும் சிரிக்கிருர்கள்.) ஏன்டா சிரிக்கிறீங்க ஏமாளிப் பசங்களா? சோலியைப் பாருங்கடா சோதாப் பசங்களா...

அவசரம்: சோலியப் பாப்பாங்க. கொட்டகையிலே இருக்கிறவங்க ஓம் பல்லை எண்ணிப்பாத்துடுவாங்க. பஞ்சபாண்டவரு பொண்டாட்டி சீதையாமுல்லே! (மறுபடியும் சிரிக்கிருர்கள்.)

பொருமை: உம்ம்... சிரிங்க, சிரிங்க. நல்லா மொயர்ச்சி செஞ்சி இந்தக் கம்பெனியிலேயே ஒரு நாளைக்கு ராஜபார்ட்டு கட்டுரேன் பாருங்க.

அவசரம்: மொயலு, மொயலு.

பொருமை: சீ, கழுதே. ஆரைப்பாத்துடா முயலுங்கிறே? நீ தாண்டா நாயி, பண்ணி, ஆந்தை, கோட்டான்.

அவசரம்: அடே, மொயலுண்ணு மொயர்ச்சி செய்யிண்ணு அர்த்தண்டா. ஒனக்கு என்ன மண்ணுறுங் கட்டி தெரியப்போகுது.

*[முதல்மணி அடிக்கிறது. நடிகர்கள் வந்து சேர்கிறார்கள்.]*

மஞ்சு: (வந்துகொண்டே) வணக்கம் மிஸ்டர் ஹீரோ... நமஸ்தே மிஸ்டர் கேசவன்... குட் ஈவினிங் மிஸ்டர் மேனேஜர்...

மேனேஜர்: வந்ததுல்லே பாடம்; எல்லாருக்கும் வந்ததுல்ல?

எல்லோரும்: பாடந்தான், ஸார். பாடந்தான், ஸார்.

*[இரண்டாவது மணியோசையுடன் ஜனார்த்தனம் பிள்ளை வருகிறார். எல்லோரும் எழுந்து நின்று மரியாதை செய்கின்றனர்.]*

ஜனார்த்தனம்: முதல்லே அந்த ஏழாவது காட்சியை ஒரு தடவை பார்த்துவிடுவோம். எங்கே, மஞ்சுவும் கேசவனும் இப்படி வாருங்க. உம்... மஞ்சு, உனக்கு என்ன குறிப்பு தரப்பட்டிருக்கிறது?

மஞ்சு: (படிக்கிறாள்) ராணி, காலை எட்டுமணியாகியும் எழுந்திராமல் படுக்கையில் புரண்டுகொண்டே கிடக்கிறாள். பக்கத்து மேஜை மேலிருக்கும் காப்பி ஆறிப் போகிறது. எழுப்புவதா வேண்டாமா என்ற யோசனையோடு அவள் கணவன் சேது தயங்கிக்கொண்டு நிற்கிறான்.

ஜனார்த்தனம்: சரி. கேசவன், எங்கே, தயாராக நின்று கொள்... மஞ்சு, அந்த கட்டிலே படுத்துக்கோ. ரைட். ஆரம்பி......

கேசவன்: (தயங்குவது போல் நடித்துக்கொண்டே ராணி...... ராணி...... (மெதுவாகத் தொட்டு) ஓ...... ரா...ஆ...ஆ...ணி...!

மஞ்சு: (துள்ளியெழுந்து) ஷட்டப். நான்ஸென்ஸ். அதிகாலையிலேயே இந்தத் தொல்லையா? ஏன், நான் நிம்மதியா தூங்குறதுலே கூடவா பொறுமை?

கேசவன்: மணி எட்டு ஆயிட்டுது, ராணி. காப்பி ஆறிப்போவுது. (கோப்பையை நீட்டுகிறான்.)

மஞ்சு: (காப்பியை அலட்சியமாக, படுத்தபடியே வாங்கி, வாயில் வைத்துசுவை பார்த்துவிட்டு, அவன் மேல் வீசி எறிந்துகொண்டே) காப்பியா இது? நான்ஸென்ஸ்! அதிகாலையிலேதான் ஐஸ் காப்பி குடிக்கிறதோ—ஒங்க அப்பன் ஊட்டுலே?

ஜனார்த்தனம்: ஸ்டாப்...... இப்படி மஞ்சு பேசிக் கொண்டிருக்கும்போது, கேசவன்! நீ உன் முகத்திலே பலவித பாவங்களைக் காட்ட வேண்டும்... இதோ, கவனி, நான் செய்து காட்டுகிறேன். மஞ்சு, எங்கே, பேசு...

*[மஞ்சு மறுபடியும் பேசுகிறாள். ஜனார்த்தனம் பிள்ளை நடித்துக் காட்டுகிறார். வாசலில் ஒரு குரல் 'ஐயா! தர்மம் போடுங்க, பிரபு' என்று கேட்கிறது. ஜனார்த்தனம் பிள்ளையின் கவனம் ஒத்திகையிலிருந்து வாசலுக்குத் திரும்புகிறது. மீண்டும் அதே குரல் கேட்கிறது. பிள்ளை வாசல் பக்கம் ஓடுகிறார். நடிகர்களெல்லாம் ஒன்றும் புரியாமல் விழிக்கிறார்கள். சில நிமிஷங்களில் ஜனார்த்தனம் பிள்ளை ஒரு பிச்சைக்காரப் பெண்ணின் கையைப் பிடித்துக் கரகரவென்று இழுத்துக்கொண்டு வருகிறார்.]*

ஜனார்த்தனம்: ஆஹாஹா!...என்ன இனிமை! என்ன கனிவு! என்ன குழைவு! மீட்டிக்கொண்டிருந்த யாழை மறந்துபோய் விழுங்கிவிட்டாளோ! அதுதான் தொண்டையில் சிக்கிக்கொண்டு பேசும்போதெல்லாம் இப்படித் தீங்குரலை எழுப்புகிறதோ!.........எங்கே, இன்னொரு தடவை சொல்லம்மா.

பிச்சைக்காரப் பெண்: என்னத்தங்க சொல்ரது?

ஜனார்த்தனம்: ஆ ஹா! ராம்னுத், கேட்டீரா இந்தக் குயிலிசையை! நான் எத்தனையோ காலமாகக் கனவு கண்டு கொண்டிருந்த குணசித்திர நடிகை கிடைத்துவிட்டாள். குரல், அழகு, அங்கஅமைப்பு, நடை, விழி....அப்பப்பா, சாமுத்திரிகா லக்ஷணத்தின் சாட்சாத் அவதாரமே என் கண் முன் வந்து நிற்கிறதே!

ராம்னுத் : உன் பெயரென்ன, குழந்தே ?

பி. பெண் : ரசனிங்க.

ஜனார்த்தனம் : என்ன ?

பி. பெண் : ரசனிங்க. (எல்லோரும் சிரிக்கிறார்கள் பெண் மருண்ட விழிகாட்டுகிறாள்.)

ஜனார்த்தனம் : ஓ, ரஜனியா......(சிரிப்பு.)

ரஜனி : ஆமாங்க.

ஜனார்த்தனம் : சபாஷ் ! பெயர்கூட எவ்வளவு பொருத்தம் ! ரஜனி !—ரஜனி ! நாளைய நாடக உலகிலே ரஸிகர்களின் நாவிலே நர்த்தனம் புரியப்போகும் நடிகை ரத்தினம் ரஜனி !......ரஜனி, உனக்கு அப்பா அம்மா இருக்கிறார்களா ?

ரஜனி : கொஞ்ச நாளைக்கு முந்தி இருந்தாங்க, தனியா பிறகு விட்டுட்டு எங்கயோ போயிட்டாங்க.

ஜனார்த்தனம் : ரொம்ப நல்லதாப் போச்சு. ஆமா உங்க அப்பா அம்மா என்ன வேலை செய்தாங்க ?

ரஜனி : அவுங்களும் பிச்சைதான் எடுத்தாங்க.

ஜனார்த்தனம் : அப்பாடி, ஒருவேளை எங்கே உன்னைத், தேடிப்புடிச்சிடுவாங்களோ என்ற கவலை இருந்தது அதுவும் போச்சு

[மஞ்சுவும் ராம்னுத்தும் கண்ணடித்துக் கொள்கிறார்கள்.]

ஜனார்த்தனம் : ஆமா, ரஜனி, உனக்குப் பாடத் தெரியுமா ?

ரஜனி : பாடுவேனுங்க. அம்மா கொஞ்சம் ஆடக் கூடச் சொல்லித் தந்துச்சு.

ஜனார்த்தனம் : சபாஷ் ! எங்கே, பாடு, கேட்கலாம்.

[கொஞ்சமும் கூச்சமின்றி காலையும் கையையும் ஆட்டிக்கொண்டு 'ஐயா சிறு பெண் ஏழை என் பால் மனம் இரங்காதா' என்ற பாட்டை பல ராகங்களில், பல சுருதிகளில் பாடுகிருள். எல்லோரும் சிரிக்கிருர்கள். ஆனல், அந்தக் குரலில் இழைந்து வரும் இனிமையும், குளுமையும், நாதமும், லாவகமும் அவர்களை மெய்மறக்கச் செய்கிறது. மற்றவர்கள் சிரித்ததும் இல்லாத வெட்கமெல்லாம் வருகிறது ரஜனிக்கு. அவள் பாடுவதை நிறுத்துகிருள். அவளுடைய ரோஜாக் கன்னங்கள் ரத்தம் கக்கிவிடும் போல் பயமுறுத்துகின்றன. ஜனர்த்தனம் பிள்ளையோ இவை ஒன்றையும் 'கவனிப்பதாகத் தெரியவில்லை. கண்களை மூடிக்கொண்டு அப்படியே லயித்துப் போய் நிற்கிருர். சற்று நேரத்திற்குப் பின் உணர்வு பெற்று திறந்த அவர் கண்களிலிருந்து இரண்டு சொட்டு ஆனந்தக் கண்ணீர் சொட்டுகின்றன.]

ஜனர்த்தனம்: ராம்ஞத், நமது 'அன்பும்—அதிகாரமும்' நாடகத்தில் அன்புள்ள மனைவியின் பாகத்தை ரஜனிக்குக் கொடுக்கலாமே.

ராம்ஞத் :—(திடுக்கிட்டு—ஆனல் சமாளித்துக் கொண்டு) மன்னிக்கணும். திடுதிப் பென்று ஒரு நாடோடிப் பெண்ணுக்கு அவ்வளவு முக்கிய பாகத்தைக் கொடுத்தால்......

ஜனர்த்தனம்: அதைப்பற்றி கவலைப்பட வேண்டாம். நானே நேரில் விசேஷ கவனம் செலுத்தி அவளைத் தயார் செய்துவிடுகிறேன்.

ராம்ஞத்: தங்கள் இஷ்டம்.

ஜனர்த்தனம்: ராஜன், உன் அறைக்கு எதிர்த்த அறையை ஒழித்து ரஜனிக்குக் கொடுக்க ஏற்பாடு செய். அவளுக்குவேண்டிய சௌகரியங்களைக் குறைவில்லாமல் நீ தான் கவனிக்கவேண்டும்.

ராஜன்: ஆகட்டுமப்பா.

ஜனார்த்தனம் : மானேஜர்! ரஜனிக்கு வேண்டிய ஆடை ஆபரணங்களுக்கு உடனே ஏற்பாடு செய்யும்.

மானேஜர் : உத்தரவு, ஐயா.

[ரஜன் ரஜனியை அழைத்துச் செல்கிறன். மஞ்சுவும் ராம்னுத்தும் பொருமையால் கருவிக் கொண்டே போகிறர்கள். கேசவன் ரஜனி செல்வதை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டே நிற்கிறன்.]

காட்சி 5] [நாடகமேடை.

[சுவரொட்டிகளில் விண்ணளாவ வர்ணிக்கப்பட்டு, கவர்ச்சிகரமான படம் போட்டு, பிரமாதமாக விளம்பரப் படுத்தப்பட்டிருந்த புது முகம் ரஜனியைக் காணும் ஆர்வத்தோடு ரஸிகர்கள் துடிதுடித்துக்கொண்டிருக்கிறர்கள். திரை விலகுகிறது. கரகோஷம் காதைச் செவிடாக்குகிறது.]

மஞ்சுளா: (துரைமாதிரி ஆண் உடை அணிந்து டென்னிஸ் மட்டையைச் சுழற்றியபடி மாடியிலிருந்து இறங்கி வருகிருள். கடைத் தெருவிலிருந்து மூட்டை முடிச்சுகளைச் சுமந்துகொண்டு உள்ளே நுழைகிறன் சேகவன்.) ரொம்ப நியூஸென்ஸாப் போச்சு. கடைத் தெருவுக்குப் போயிட்டு வர 'டு அவர்ஸ்'! நான் வெளியே போறதா, இல்லே, கட்டுப் பெட்டியாட்டமா வீட்டுக்குள்ளேயே முடங்கிக்கிடக்கிறதா ? சீக்கிரம் டீ தயாராகட்டும்....உம்.

கேசவன் : ராணி!...ஓ...ரா...ஆ...ணி...!

மஞ்சுளா : (கிண்டலாக) என்ன என் ராஜா.

கேசவன் : ராணி, அம்மாவைப் பாத்து ரொம்ப நாளாச்சு......

மஞ்சு : ஓஹோ! அதுக்குத்தான் இந்த ரா...ஆ... ஆ...ணி...யோ ? ரொம்ப நாளாச்சேன்னு மகனைப் பாக்க ஓடிவந்துட்டாளில்லே.

கேசவன் : ஒன்னக் கண்டாத்தாம் பயப்படுராளே. நான் இன்னிக்குப் போயி பாத்துட்டு வாரேன்.

மஞ்சு : 'யூகாண்ட்' முடியாது. ஏன், காலையிலேயே போயிட்டு வந்திருக்கக்கூடாது ?

கேசவன் : காலையிலேதான் 'அதைக் கொண்டா, இதைக் கொண்டா'ன்னு உசுர வாங்கிறியே.

மஞ்சு : 'ஷட் அப்' 'வைப்' (Wife) ண்ணு அடிமைண்ணு நெனச்சிக்கிடரதோ ? எங்கேயும் போகக் கூடாது.

—காட்சி மாற்றம்

ரஜனி : ஆமா, எங்கேயும் போகக்கூடாது. உம், தெரிஞ்சுதா ?

ராஜன் : அடேயப்பா, மகாராணியின் உத்தரவு ரொம்ப கண்டிப்பா இருக்கே. (சிரிக்கிருன்) ஆமா ரஜனி !......ரஜனி ! ஓ... அதுக்குள்ளே எங்கே துள்ளியோடி விட்டது என் புள்ளிமான்......

ரஜனி : (உள்ளே இருந்து) கொஞ்சம் பொறுங்கோ ராஜா சாஹிப், இதோ பலகாரம் எடுத்து வருகிறேன்.

ராஜன் : (தனிமையில்) ஹூம். இப்படிப்பட்ட அன்புத் தேவதை வீட்டிலிருக்கும் பொழுது வெளியே போய் சுற்ற எப்படி மனம் வரும் ?

ரஜனி : (பலகாரத் தட்டுடன் வந்துகொண்டே) எந்த சாம்ராஜ்யத்தின் மீது படையெடுக்க இவ்வளவு பலமான யோசனை நடக்கிறதோ?

ராஜன் : ஆம், தேவி. உன் இதய சாம்ராஜ்யம் எவ்வளவு அகலமானது, அதைக் காவல் புரிய கண்கள் என்ற பெயரால் இரு வேல்கள்; சடை என்ற பெயரால் ஒரு கருநாகம்......அப்பப்பா, அதை எப்படிப் படையெடுப்பது என்றுதான் சிந்தனையைத் தீட்டுகிறேன்.

ரஜனி : (அல்வாத் துண்டை ராஜனின் வாயில் திணித்துக்கொண்டே) என் இதயக் கோட்டைதான் தங்கள் காதல் படைக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் என்றோ வீழ்ந்து சரணுகதியடைந்துவிட்டதே, ஸ்வாமி. (அவன் மார்பிலே சாய்ந்துகொள்கிருள்.)

ராஜன் : (அவள் தலையை வருடியபடி) ரஜனி, உன் கன்னக் கதுப்பிலே நெளியும் அழகுக் கோட்டிலே, உன் மான் விழிகளில் துள்ளி விளையாடும் மருட்சிப் பார்வையிலே, உன் தேன் மொழிகளிலிருந்து தெறிக்கும் தேவாமிர்தத் துளியிலே நான் என்னையே இழந்து விட்டேன். இனி இன்பமும் துன்பமும் நம் இருவருக்கும் பொதுவுடமை, கண்ணே !

*[திரை விழுகிறது. கூட்டத்தில் பலத்த கரகோஷம்.]*
*நாடகம் முடிகிறது.*

**காட்சி: 6]** **[நந்தவனம்.**

*[ஆழ்ந்த யோசனையோடு பூப்பறித்துக்கொண்டே வந்த ரஜனி, ஒரு பெஞ்சின் மேல் உட்காருகிருள்.)*

ரஜனி : (தனக்குள்) உம்ம்.........அது உண்மையா யிருக்குமா? அவர் அந்த வார்த்தைகளை சும்மா நாடகத்தில் நடிப்புக்காகவா சொன்ஞர் ? இல்லை. அப்படி இருக்க முடியாது. அந்த வார்த்தைகளைச் சொல்லும் பொழுது அவர் என் கையைப் பிடித்தபிடி ! — அந்த இதயம் ஒன்றிய இன்ப அணைப்பு !—ரஜனி, நீ அவ்வளவு பாக்கிய சாலியா ? அவ்வளவு அழகியா ? அவர் சொன்ஞரே "உன் கன்னக் கதுப்பிலே நெளியும் அழகுக் கோட்டிலே, உன் மான் விழிகளில் துள்ளி விளையாடும் மருட்சிப் பார்வையிலே, உன் தேன் மொழிகளிலிருந்து சிதறும் தேவாமிர்தத் துளியிலே, நான் என்னையே இழந்து விட்டேன். இனி இன்பமும் துன்பமும் நம் இருவருக்கும் பொதுவுடமை, கண்ணே !" —ஆஹா ! எவ்வளவு ஆர்வத்துடன், ஆசையுடன், வாத்ஸல்யத்துடன், இதய நகிழ்ச்சியுடன் அந்த வார்த்தைகளை உச்சரித்தார்! ரஜனி–ஜன் !...ரஜனி—ராஜன்! அப்படீண்ணு?...அப்படீண்ணு

......மன்மதன்—ரதி! இல்லை யில்லை, ரதி—மன்மதன்! (சிரிக்கிருள்.)

ராஜன்: (செடி மறைவிலிருந்து எழுந்து வந்து கொண்டே) தப்பு, தப்பு, தப்பு! மன்மதனும் ரதியும் அழகுத் தெய்வங்களாக மதிக்கப்பட்டது அந்தக் காலம். இன்று முதல் உலகுக்கு ஒரு புதிய அழகு ஜோடி கிடைத்துவிட்டது உவமை சொல்ல. (ரஜனியின் அருகில் நெருங்கி காதுக்குள் சொல்வதுபோல்) ஆம், அதுதான் ராஜன்—ரஜனி ஜோடி!

*[ரஜனி நாணத்தால் சிவந்த முகத்தை கவிழ்த்துக் கொண்டுநிற்கிருள். ராஜன் மெதுவாக அவள் தாடியைப் பிடித்து உயர்த்துகிருன்.*

ராஜன்: (நாத்தழுதழுக்க) ஆஹா. இந்தக் கார் முகில் கூந்தலுக்குள்ளே வானத்து முழுமதியல்லவா ஒளிந்து கொண்டிருக்கிறது! உலகத்துப் பொதுச் சொத்தாகிய மதியை இப்படி உன் கூந்தலுக்குள்ளே மறைத்து வைப்பது நியாயமா?......அடேயப்பா, எத்தனை ஜால வித்தைகள் காட்டுகின்றன இந்த விசித்திர வேல்விழிகள்! ......ரஜனி! என் அன்பே! மௌனம் கலையாதா?

ரஜனி: அதுதான் என் கண்ணுக்கும் கருத்துக்கும் கடுமையான வேலை கொடுத்துவிட்டீர்களே! நாவிற்கு சக்தி ஏது, பேசுவதற்கு?

ராஜன்: அப்பப்பா! கற்பனையின் பொற் குவியலை யல்லவா கொட்டுகிருய்.

ரஜனி: ராஜன்!

ராஜன்: பேசு, கண்ணே, பேசு.

ரஜனி: யாராவது இந் நிலையில்......

ராஜன்: ......பேசிக்கொண்டு வீண்காலம் கடத்து வார்களா? இன்ப புரியின் எல்லையையல்லவா தாண்டிச் சென்றிருப்பார்கள் என்று கேட்கிருயா?

ரஜனி: ஊஹூம். பார்த்து விட்டால்......?

ராஜன் : பரவசமடைவார்கள் — பாராட்டி மகிழ் வார்கள்.

ரஜனி : எனக்கு என்னவோ பயமாக இருக்கிறது.

ராஜன் : என்னை என்ன புலி, சிங்கம் என்று நினைத்து விட்டாயா ?

ரஜனி : மஞ்சுவின் நஞ்சுப் பார்வை ?

ராஜன் : அஞ்சுகிருயா, அதற்கு ? உன் ராஜன் உயிரோடிருக்கும் வரை அச்சம் என்ற சொல்லிற்கு உன் அகராதியிலேயே இடம் இருக்காது, ரஜனி.

கேசவன் : (வந்துகொண்டே) ஹீ. ஹீ. ஹீ. ஹீ...... என்ன சொன்ருய், ராஜன் ? அச்சம் என்ற சொல் அகராதி யில் கிடையாது என்ரு சொன்ருய் ? தப்பு. அச்சம் என்ற குணம் இந்தக்காலத்துப் பெண்களிடம் அணுவளவும் கிடையாது என்று நீ சொல்லியிருக்க வேண்டும். (ரஜனி யைக் குறும்பாகப் பார்த்துக்கொண்டே) உம்ம்... ராஜன், ரஜனி ரொம்ப நல்ல பொண்ணுல்லே ?

ராஜன் : அதில் என்ன சந்தேகம், அண்ண. இவளு டைய அழகும், சாமர்த்தியமும் நமது கம்பெனிக்கே மாபெரும் புகழைத் தந்து விட்டன. அப்பாவுக்கு ரஜனி ஜீவ கீதமாகிவிட்டாள். அவர் ஏதாவது என்னிடம் பேசுகிருரென்ருல் அது ரஜனியைப்பற்றித்தான்.

கேசவன் : ரஜனியின் அருங்குணம் யாரையும் கவர்ந்துவிடும், ராஜன்! இவள் நிச்சயமாக ஓர் உயர்குடிப் பெண்ணுகத்தான் இருக்க வேண்டும். நீ என்ன சொல் கிருய் ?

ராஜன் : ஆமாண்ண. இல்லாவிட்டால் இவ்வளவு பெருந்தன்மையான குணம் எப்படி இருக்க முடியும் ? குலத்தளவே யாகும் குணம்' என்றுதானே சொல்லப் படுகிறது.

கேசவன் : ஹீஹீஹீ......குணம்மட்டுமா ? இந்தக் குறும்புப் பார்வை, அரும்புச் சிரிப்பு, ஒய்யார நடை....!

ராஜன், இப்படிப்பட்ட ஓர் அருங்குணவதி உனக்கு அண்ணியாக வாய்த்தால் ?......

[ராஜனும், ரஜனியும் திடுக்கிடுகிறார்கள்]

ராஜன் : அண்ணா !

கேசவன் : ஏன், உனக்கு அண்ணியாகும் அந்தஸ்து ரஜனிக்கு இல்லை என்று நினைக்கிறாயா ?

[ரஜனி அங்கிருந்து மெல்ல நழுவி விடுகிறாள்.]

ராஜன் : (பேச்சை தந்திரமாக மாற்றிவிட நினைத்து) நம்முடைய 'அன்பும்—அதிகாரமும்' நாடகத்திற்கு அபார கிராக்கியிருக்கிறது, அண்ணா, அப்பாவிடம் சொல்லி இன்னும் ஒரு வாரத்திற்கு அதையே நடிக்க ஏற்பாடு செய்யனும்.

கேசவன் : (விஷயம் விளங்கி, சிரித்துக்கொண்டே) அதற்கென்ன, அப்படியே நடத்திட்டால் போச்சு. மக்களைத் திருப்திப்படுத்துவதுதானே நமது லட்சியம்.

[இருவரும் போகிறார்கள்.]

**காட்சி : 7] [மஞ்சுளாவின் அறை**

[மஞ்சுகட்டிலில் குப்புறப் படுத்துக்கொண்டு தலையைஉயர்த்தி, கையால் நாடியைத் தாங்கிக் கொண்டு, கவலையோடிருக்கிறாள். ராம்நாத் அறை யில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டே பேசுகிறான்.]

ராம்நாத் : ......மானமும், மரியாதையும் பெறுவதல்ல நமது லட்சியம். வஞ்சம் தீர்ப்பது! ஆம், வஞ்சம் தீர்ப்பது! மஞ்சு, நேற்றுவரை மறுமலர்ச்சி நாடக மன்றத்தின் முடிசூடா ராணியாக விளங்கியவள், நீ. கதாசிரியன் ராம்நாத் உன் காலடிகளிலே! வில்லன் கேசவன் உன் தாசானுதாசன்! கம்பெனி மானேஜர் உன் அன்பிற்காகத் தவம் கிடப்பவன்! மேக்கப்மென் மேகநாதன் எப்பொழுதுமே உனக்குப் பக்க பலம்! தக்க

சமயம் மட்டும் கிட்டியிருந்தால் ராஜனும் உனக்கு அடிமையாகாமல் தப்பியிருக்க முடியாது.

உன் சொல்லுக்கு ஒரு தனிச்சலுகை. உன் இஷ்டத்திற்கு என்றுமே பிறந்ததில்லை தடை. ஆஹா, உன் சர்வாதிகாரத் தாண்டவம் கண்டு தலைகால் தெரியாமல் கர்வத்தில் ஆழ்ந்திருந்தேனே. ஆனால்.........நேற்றைய சம்பவம் ......?

மஞ்சு, பற்றி எரிகிறதே என் நெஞ்சு. கேவலம் ஒரு பிச்சைக்காரச் சிறுக்கிக்காக என் மஞ்சு அவமதிக்கப்படுவதா ? சீறிவிழுந்தானே சின்னப் பயல் ராஜன். சிந்தித்துப் பார்த்தானா? நேற்றுவரை யார் அவனுடைய நாடக மேடையை சோபிக்கச் செய்தது ? நன்றி கெட்ட நாய்.

மஞ்சு : ராம்......

ராம் : கலங்காதே, மஞ்சு. உன் வாழ்வை வளப்படுத்துவதற்கென்றே அர்ப்பணித்து விட்டேன் இந்த ஜீவனை. பிச்சைக்கார நாயின் மேல் கண் வைத்திருப்பவர்கள் யார்யார் என்பதை நினைத்துப்பார், நீ கண்கலங்க மாட்டாய், களிநடம் புரிவாய். பண்டிட் ஜனார்த்தனம் பிள்ளையின் இருகண்மணிகள் போன்ற ராஜனும், கேசவனும் அவளுக்காகப் போட்டியிடுகிறார்கள். எதிலுமே இணைபிரியாத சகோதரர்கள் என்ற பெருமிதத்துடன் இருக்கிறார் பண்டிட். அதுதான் நமக்கு வெற்றி தரும் மந்திரக்கோல், இந்தச் சகோதரர்களின் ஒற்றுமைப் பூங்காவை வேற்றுமைப் போர்க்களமாக்கவேண்டும்.

மஞ்சு : ராம்ஜூத்......!

ராம் : ஆம், அவர்கள் கழுத்தை அறுக்க அவர்களது கையே கத்தியைத் தூக்கவேண்டும்.

மஞ்சு : சரியான யோசனைதான், ஆனால்......

ராம் : திட்டம் எங்கே, அமுல் நடத்துவதற்கு என்று கேட்கிறாயா ? இதோ தருகிறேன். கேசவனிடம் நேச வார்த்தைகள் பேசு.. ரஜனியை நாவாரப்

புகழ்ந்து பாடு. அழகுத் தேவதை என்று அவளை வர்ணித்துவை. அந்தக் கோமளவல்லி கேசவனைத்தான் நினைந்து உருகுகிருள் என்று நாசூக்காக அவன் காதுக்குள் ஊது. இன்ப மலையின் உச்சியிலே நிற்பான் அவன். அங்கு நின்றுகொண்டே அவனுக்கு ஏமாற்றத்தின் கிடுகிடு பள்ளத்தைக் காட்டு. நடுநடுங்கிப் போவான்......

மஞ்சு : அது எப்படி ராம் ?

ராம் : அவசரப்படாதே. நீ ரஜனியைப் பிரமாதமாகப் புகழ்ந்ததும் அந்த அழகுத் தேவதை தனக்குத்தான் கிடைக்கப்போகிருள் என்ற இன்ப நினைவுகளால் இமயத்தின் சிகரத்தில் நிற்பான் கேசவன். 'ஆனால் அந்த சுந்தரியை இன்னொருவன் தட்டிக்கொண்டு போய்விட்டால் ?......' என்ற அணுகுண்டு சந்தேகத்தை மெதுவாகக் கிளப்பு. முதலில் அசட்டை செய்யத் தான் செய்வான்; நீ அதைரியப்படாதே. ரஜனி மேல் ராஜன் கண் வைத்திருக்கிருன், அவளை அடைந்துவிடுவதாகவும் சபதம் செய்திருக்கிருன் என்பதை சாதுர்யமாகச் சொல். சற்று யோசிப்பான். உடனே நீ ஒருபடி மேலேறவேண்டும். ரஜனியைச் சந்தித்து ராஜன் தன் விருப்பத்தைத் தெரிவித்ததாகவும், ரஜனி அதை முற்றும் மறுத்து கோபித்ததோடல்லாமல் தான் கேசவனையே காதலிப்பதாகத் திறந்து சொல்லிவிட்டதாகவும் ஒரு போடு போடு. போதும். அப்புறம் நடைபெறும் நாடகத்தை நாமிருவரும் ஜோடியாகப் பார்த்து ரஸிக்கலாம்.

மஞ்சு : ராம், கதாசிரியன் என்ருல் உன்னைப் போலல்லவா இருக்க வேண்டும் ! கற்பனைக் களஞ்சியத்தின் கதவையே கழற்றி எறிந்துவிட்டாயே !

கேசவன் : (வந்துகொண்டே) அடாடாடா.. கற்பனைக் களஞ்சியத்தின் கதவையே கழற்றி எறிந்து விட்டால் கள்வர்கள் புகுந்து கொள்ளையடித்துக்கொண்டு போய்விடமாட்டார்களா ?

மஞ்சு : வாருங்கோ, மாப்பிள்ளை ஸார், வாருங்கோ.

ராம் : என்ன சொல்கிருய்? மஞ்சு! மாப்பிள்ளையா ?

மஞ்சு : உங்களுக்குத் தெரியாதா ஸார் ? நமது வில்லன் கேசவனுக்கும் கதாநாயகி ரஜனிக்கும் திருமணம் நிச்சயமாகிவிட்டதே.

ராம் : நிஜம்மாவா ?

மஞ்சு : நான்கூட விளையாடுவேனு, ஸார் ?

ராம் : நிஜந்தானு மிஸ்டர் கேசவன் ?

கேசவன் : ஹீ ஹீ, பாதி மெய், பாதிப் பொய்.

ராம் :, (மஞ்சுவைக் கண்ணடித்துக் கொண்டே) எது மெய் எது பொய் ?

கேசவன் : ரஜனியை நான் கல்யாணம் செய்யப் போவது மெய்; ஆனுல் நிச்சயதார்த்தம் ஆகிவிட்டது என்று மஞ்சு சொல்வது பொய்.

ராம் : அதுதானே பார்த்தேன். நமக்கெல்லாம் ஒரு டீ பார்டிகூட இல்லாமலா நிச்சய தாம்பூலம் நடந்து விடும்!

*(சிரித்துக்கொண்டே கலேகிருர்கள்.)*

**காட்சி : 8]** **[ரஜனியின் அறை**

*(ரஜனி கண்ணடி முன் அமர்ந்து தலே வாரிக் கொண்டிருக்கிருள். இமைக்காமல் அவளேயே பார்த்துக் கொண்டிருக்கிருன் ராஜன்.)*

ரஜனி : (குறும்பாக) ஏன் இப்படி என்னேயே பார்க்கிறீர்கள், யாரோ எதையோ பார்த்தமாதிரி.

ராஜன் : பட்டிக்காட்டான் மிட்டாய்க் கடையைப் பார்த்தமாதிரி என்று திறந்துதான் சொல்லேன்.

ரஜனி : சேச்சே. நீங்கள் பட்டிக்காடா ? கொஞ்சம் நாட்டுப்புறம். அவ்வளவுதான். (இருவரும் சிரிக்கி ருர்கள்.)

ராஜன் : ரஜனி, அன்று நந்தவனத்தில் என்னென்ன வெல்லாமோ பேசவேண்டுமென்று ஆசையோடு வந்தேன் ஆனல் அபசகுனம்போல் வந்து அதைக் கெடுத்து விட்டான் அண்ணு.

ரஜனி : என் மனம் என்னவோ சாந்தி பெற மறுக் கிறது, ராஜன். நம்மைச் சுற்றிலும் எத்தனையோ பொரு மைக் கண்கள்—எத்தனையோ வஞ்சக நெஞ்சங்கள்— எத்தனையோ வம்பளக்கும் நாவுகள்......

ராஜன் : ஒன்றுமில்லாததற் கெல்லாம் மாபெரும் சக்தி இருப்பதாக நினைத்து நீ வீணே அலட்டிக்கொள் கிருய், ரஜனி. அந்தக் கையாலாகாத மஞ்சுவிடம்கூட நீ அஞ்சி அஞ்சி ச்சாகிருய்.

ரஜனி : நன்கு சிந்தித்துப் பாருங்கள், ராஜன். மஞ்சு நச்சுடைய நாகம்.

ராஜன் : அவள் நஞ்சுடைய நாகம் என்றல் அதன் நஞ்சுப் பல்லைப் பிடுங்கி எறியும் பாம்பாட்டிச் சித்தன் நான் என்பதை நீயே காணப் போகிருய்.

ரஜனி : மற்ருருபுரம். ராமு த் வேறு நமக்கு எமனுகத் தோன்றி யிருக்கிருர்.

ராஜன் : தோன்றிவிட்டுப் போகட்டுமே. அந்த எமனை எட்டி உதைக்கும் நீலகண்டனேதான் நான் என்பதைத் தெரியச் செய்கிறேன்.

ரஜனி : கேசவன் அண்ணு பேசும் முறைகூட......

ராஜன் : (திடுக்கிட்டு) அண்ணு உன்னிடம் ஏதா வது தப்பாக நடந்து கொண்டாரு ?

ரஜனி : நமக்கிடையே வளர்ந்திருக்கும் தெய்வீகக் காதலை உணராமல் அவர் என்னை நேசிப்பதுபோல் தெரிகிறது.

ராஜன் : ஆம், அப்படித்தான் இருக்க முடியும். நான் உன்னைக் காதலிக்கிறேன் என்பது தெரிந்தால் உடனே மனதை மாற்றிக்கொள்வான்.

ரஜனி ; என்னவோ, ராஜன் எனக்கு ஒரே பயமா யிருக்கிறது. ஒரு செடியில் பூத்த இரு மலர்களைக் கசக்கி விட்டாளே சண்டாளி என்ற அபாவத்திற்கு நான் ஆளாகி விடக் கூடாதே என்பதுதான் சதா என் கவலை. நகமும் சதையும் போலிருக்கும் உங்கள் இருவரையும் நான் ஒருக் காலும் பிரிக்க மாட்டேன். பழையபடி பிச்சை எடுத் தாலும் எடுப்பேன், உங்களிருவரையும் பிரித்தெடுக்க மாட் டேன்.

ராஜன் : ரஜனி !

ரஜனி : (கண்ணீரைத் துடைத்துக் கொண்டே) தங்கள் வாசலைத் தேடி வந்து பிச்சை கேட்டு நின்றேன். ஆனால் என் நிலைமைக்கும் அப்பால் சென்று தங்கள் இச் சையையே பெற்று விட்டேன். யாசிக்க வந்தவனை நேசிக் கத் துணிந்தது தங்கள் கருணை உள்ளம். நாடோடிப் பெண் ணாகிய என்னை நடிகை நட்சத்திரமாக்கி விட்டீர்கள். கஷ்டமில்லாத வாழ்க்கை எம்படியிருக்கும் என்பதை நான் கண்டறிந்தது நாடக மன்றத்தில்தான் இத்தகைய அரச வாழ்வை எனக்குத் தந்த அண்ணலின் மக்களிடையே பகை வளர்வதை—அதுவும் என் பொருட்டு பகை வளர் வதை நான்—எப்படிச் சகிப்பேன் ?

ராஜன் : உனக்கு அறிவு இருக்கிறது ; ஆனால் அனுபவம் போதாது, ரஜினி! துன்பத்தின் இரும்புப் பிடியில் நசுக்குண்ட உனக்கு அற்ப விஷயங்களிலெல்லாம் அச்சம் ஏற்படுவது இயற்கைதான். ஆனாலும் என் பேச்சிலாவது உனக்கு நம்பிக்கை இருக்க வேண்டாமா ?

ரஜனி : என்ன வார்த்தை சொன்னீர்கள்! தங்களி டத்தில் நம்பிக்கையை இழப்பதும் என் உயிரை இழப்ப தும் ஒரே சமயத்தில்தான் நடை பெற முடியும்.

ராஜன் : தப்பாக நினைத்துக் கொள்ளாதே, ரஜினி. நீ வீணாக கவலைப்படக்கூடாது என்பதற்க்காகத்தான் சொல்ல வந்தேன்......உன் துன்பத் தாழ்வு என்று அஸ்த மித்ததோ அன்றுதான் என் இதயவானிலே ஒரு இன்ப சந் திரன் உதயமாயிற்று...

ரஜனி: உதயமாயிற்ருவது. (வான்மதியைக் காட்டி) அதோ பாருங்கள்—வெகு உயரேயும் வந்து விட்டது.

ராஜன்: ஆம், உயரேயும் வந்து விட்டது. மிக மிக உயரே-எந்தப் பொருமைக் கரங்களாலும் தட்டிப் பறிக்க முடியாத உயரத்தில் வந்து விட்டது. அது இனி ஆனந்தமாக பவனி வரும். அமுத நிலவு பொழியும்.

ரஜனி: ஆமாம், இதை யெல்லாம் என் முகத்தையே பார்த்துக் கொண்டு சொன்னுல்...... ?

ராஜன்: என்னுடைய சந்திரனைப் பார்த்துத் தானே நான் சொல்ல முடியும்.

ரஜனி: முழு ஜோதியும் காட்டி குலாவி விட்டு தேய்ந்து, கரைந்து, மறைந்து போகும் சந்திரன் என்று தான் என்னை நினைத்துக் கொண்டீர்களா ?

ராஜன்: அது சந்திரனின் குற்றமா, ரஜனி ? சூரியனுகிய தன் நாயகன் எவ்வளவுக் கெவ்வளவு அன்பு காட்டுகிருனே! அவ்வளவுக் கவ்வளவு பிறைப் பெண்ணின் முகம் பிரகாசமடைகிறது. அவன் அவளைத் தவிக்க விட்டுச் சென்றுவிட்டால்தான் அவள் முகம் கவலையால் தோய்ந்து இருளடைந்து போகிறது. ஆனுல் ஒன்று, இந்தச் சூரியன் மட்டும் தன் சந்திரனை விட்டுப் பிரியவே பிரியாது.

ரஜனி: உங்களுக்கு எங்கிருந்துதான் இப்படிப் பெண்களைக் கேலி பண்ண வார்த்தைகள் கிடைக்கின்றனவோ ?

ராஜன்: [ரஜனியின் கண்களை உற்று பார்த்துக் கொண்டே] ஆழமே காணமுடியாத இந்த ஆழ்கடலின் அடித்தளத்திலிருந்து. நீ இருக்குமிடத்தில் வேறென்ன கவலை குடியிருக்கும் ? கேலியும், கும்மாளமும்தான் கொலு வீற்றிருக்கும்.

கேசவன்: (திடீரெனத் தோன்றி) கேலியும், கும்மாளமும் ! (பற்களைக் கடித்துக் கொண்டு) ஆம், அதுதான் கொஞ்ச நாட்களாகவே இங்கே கொலு வீற்றிருக்கிறது.

ராஜன் : [ஒன்றும் புரியாமல்] அண்ணு !

கேசவன் : .........நானும்தான் பார்த்துக் கொண்டே வருகிறேன். கேலியும் கும்மாளமும் கேள்வி கேட்பாரற்ற கேவலமான இடங்களில் கூட இந்த வரம்பை மீறியிருக்காது. உன் போக்கு எனக்கு அடியோடு பிடிக்கவில்லை ரஜனி நம்மிடத்தில் தஞ்சம் புகுந்தவள்தான் ...ஆனுல் தாசியல்ல !

ராஜன் : (பலமாக) அண்ணு !!

கேசவன் : .........உதவி தேட வந்தவள் தான் ஆனுல் ஊதாரியல்ல ! அவளிடம் நீ கௌரவமாகத்தான் நடந்து கொள்ள வேண்டும்.

ரஜனி : (கெஞ்சும் விழிகளுடன் கேசவனை பார்த்து) அண்ணு, தங்களை மன்ருடிக் கேட்டுக் கொள்கிறேன். எனக்காகவாவது நீங்கள் விவாதத்தை நிறுத்துங்கள். என்னுல் சகிக்க முடியவில்லை.

கேசவன் : எப்படி சகிக்க முடியும், ரஜனி ? நீ ஓர் உத்தம குணவதி என்றதால்தான் இதுவரை இவனுடைய அயோக்ய தனங்களைச் சகித்துக் கொண்டிருந்தாய் வேருெரு பெண்ணுக இருந்தால்......

ரஜனி : அண்ணு !

கேசவன் : கலங்காதே, ரஜனி. எல்லாம் எனக்குத் தெரியும். மரியாதைக்காக நீ என்னிடம் சொல்லாவிட்டால்தான் என்ன, இங்கு நடக்கும் ஒவ்வொரு விஷயமும் எனக்கு உடனுக்குடன் தெரியும்.

ரஜனி : தாங்கள் ஏதோ தப்பாக......

கேசவன் : ...ஒருக்காலும் உன்னைப்பற்றி தப்பாக நினைக்கவே மாட்டேன், ரஜனி. நீ என்ன செய்வாய் ? முதலாளி மகனுச்சே என்று நிஷ்களங்கமாக அவனிடம் பழகிஞய் அது உன் குற்றமா ? அவனல்லவா அதன் கண்யத்தைக் காப்பாற்றவேண்டும்.

ராஜன் : அண்ணு, நீ ஏதோ தப்பபிப்பிராயத்தால் தகாதவார்த்தைகளை உபயோகிக்கிருய்.

கேசவன் : தப்பபிப்பிராயம்! சபாஷ்! தப்பித்துக் கொள்ள உபயோகிக்கும் சாகாய வார்த்தை!

ராஜன் : தப்பித்துக்கொள்ள விரும்புகிறவனு? எந்தக் குற்றத்திலிருந்து? என்ன உளறுகிருய்?

கேசவன் : குதிரை கீழே தள்ளியதுமல்லாமல் குழியும் பறித்ததாம். ராஜன், அம்பலமாகிவிட்டது உன் அயோக்கியத்தனம்.

ராஜன் : கேசவா, ஏதோ அண்ணன் என்ற மரியா தைக்காக......

கேசவன் : அண்ணன்!.........மரியாதை! இந்த எண்ணம் கொஞ்சமாவது இருந்திருந்தால் நாளை அண்ணி யாகப் போகிறவளாயிற்றே என்ற துளி அச்சம் கூட இல் லாமல்இப்படி அத்து மீறி நடந்திருப்பாயா?

ராஜன் : அண்ணு!

கேசவன் : அப்படி அழைக்காதே என்னை. துரோகி

ராஜன் : ஆ! துரோகியா! துரோகி யார்? சிந்தித்துப் பார். ஒரு பெண்ணின் மனதை அறியாமல் பித்துக்குளி போல் பிதற்றும் நீயா, நானு? ரஜனி என்னுடையவள்!

கேசவன் : ராஜன்!

ராஜன் : பேசாதே. அவளுக்காக நான் எத்தகைய தியாகத்திற்கும் தயார்.

கேசவன் : ரஜனி......

ராஜன் : உச்சரிக்காதே அவள் பெயரை. எச்சரிக் கிறேன்.

*(இந்த சமயத்தில் ராம்னுத்தும் மஞ்சுவும் தோன்றி கொக் கரித்து கேசவனுக்கு ஆத்திரத்தை மூட்டுகிருர்கள்.)*

கேசவன் : அயோக்யப்பதரே. இவ்வளவுக்கு வந்து விட்டாயா. இதோ. செய்க......

(பூத்தொட்டியைத் தூக்கி ஆங்காரத்தோடு ராஜன் மீது விட்டெறிகிருன். ராஜன் விலகிக்கொள்கிருன். ஆனல் அதே சமயத்தில் 'கேசவா, இது என்ன ரகளை ?' என்று கேட்டுக் கொண்டே அங்கு வந்தஜனர்த்தனம் பிள்ளையின் தலையில் அது பலமாகத் தாக்கி உடைகிறது. ரத்த வெள்ளத்தில் கிடக்கிருர் பண்டிட். ரத்தத்தைக் கண்டதும் அலறித் துடித்துப்போய் அவரைத் தூக்கி எடுக்கிருர்கள் கேசவன், ராஜன், ரஜனி யாவரும். ரத்தபாசம் தன் கைவரிசையைக் காட்டுகிறது.)

காட்சி : 9.] [விசாலமான ஓர் அறை

(ஜனர்த்தனம்பிள்ளை மரணத்தின் மடியில் தலை சாய்த்துக் கிடக்கிருர். டாக்டரின் முகத்தைப் பார்ப்பதும் கண்ணீரைத் துடைப்பதுமாக அருகே நிற்கிருர்கள் மறுமலர்ச்சி நாடகீ மன்றத்தார். அணையப்போகும் தீபம் சற்று ஜோதி மயமாகப் பிரகாசிப்பதுபோல் ஜனர்த்தனம் பிள்ளையின் முகத்தில் களை தட்டுகிறது. மெல்ல கண்களைத் திறந்து யாவரையும் பார்த்துவிட்டுப் பேசுகிருர்.)

ஜனர்த்தனம் : (நீண்ட பெருமூச்சுடன், கேசவனின் கையைப் பிடித்துத் தன் கையில் வைத்துக்கொண்டு) கேசவா, உன் வயோதிகத் தந்தையின் அந்திக்காலம் நெருங்கிவிட்டதடா. மரணதேவதை என்னை வரவேற்க அதோ மலர்மாலையுடன் நிற்கிருள்.

சேகவன் : (கதறிக்கொண்டே) அப்படிச் சொல்லாதீங்கப்பா. உங்களுக்கு ஒண்ணும் செய்யாதுப்பா.

ஜனர்த்தனம் : அழாதே மகனே. கலாதேவிக்கு இனி என் சேவை தேவை யில்லை. ஆம். அவளுக்கு சேவை செய்யத்தான் கேசவன், ராஜன், ரஜனி ஆகிய மும்மணிகள் கிடைத்துவிட்டார்களே ! உன் செய்கைக்காக நான் வருந்தவில்லை. எனக்கு ராஜன் மேலிருக்கும் அன்பைவிட உனக்கு அவன் மீதிருக்கும் அன்புதான் அதிகம் என்பதும் எனக்குத் தெரியும். ஏதோ ஆத்திரத்தில்

அறிவிழந்து தவறு செய்துவிட்டாய்...நல்ல வேளை நான் குறுக்கே வந்து சேர்ந்தேன். அது ராஜன் மீதே பட்டிருந் தால்.........

ராஜன் : அப்பா ! அப்பா !! (அலறுகிருன்.)

ஜனர்த்தனம் : உம் ம்......ராஜன் மீது பட்டிருந்தால் கலாதேவியின் கண்மணியை கவர்ந்து சென்றிருக்குமேடா. கேசவா. ஈடுசெய்ய முடியாத மகத்தான நஷ்டம் ஏற்பட் டிருக்குமே! என் பொறுப்புக்களை இனி உன்னிடமே நான் ஒப்படைத்தாக வேண்டும். (ரஜனியின் பக்கம் திரும்பி) குழந்தே, இங்கே வாம்மா. (அவள் கன்னத்தில் உருண்டோடும் கண்ணீரை தன் கையால் துடைத்துக் கொண்டே அவளது வலது கரத்தையும், ராஜனின் வலது கரத்தையும் வாங்கி இருகரங்களையும் கேசவனின் கையில் வைத்து) இதைப் பெற்றுக்கொள். கேசவா. இனி இவர் களுக்கு சர்வமும் நீயேதான்...கடமையை உணர்ந்து, தவருமல், தமையனும் தந்தையுமாயிருந்து இவர்களைக் கவனித்துக்கொள்.

கேசவன் : (உணர்ச்சி பொங்க) இனி ஆத்திரப்பட்டு அறிவிழக்கமாட்டேனப்பா.

*[ஜனர்த்தனம்பிள்ளை நிம்மதியாகக் கண்களை மூடு கிருர். யாவரும் கோவெனக் கதறுகிருர்கள்.]*

**காட்சி : 10.)** **(நந்தவனம்**

*(கேசவன் தனியே சிகரட் புகைத்துக்கொண்டிருக் கிருன். அவன் முகத்தில் சிந்தனை நிழலிட்டிருக்கிறது.)*

கேசவன் : பெண் !...ஹூம். ரோம, கிரேக்க சாம் ராஜ்யங்களெல்லாம் இடிந்து தகர்ந்து மண்ணேடு மண்ணுகிப் போனதற்கே காரணகர்த்தாவாயிருந்த வளல்லவா! இதையெல்லாம் ஓரளவு தெரிந்திருந்தும் நான் மதியிழந்துவிட்டேனே. மஞ்சு ஊட்டிய நஞ்சு என் ஆசைத் தந்தையின் உயிருக்கே உலை வைத்துவிட்டதே. ரஜனியைக் காதலிக்கிருன் என் அருமைத் தம்பி ராஜன். அவளும் அவனையே மனமாரக் காதலிக்கிருள். இதை

ஆரம்பத்திலேயே புரிந்துகொள்ளாமல் போனேனே பாவி. சீ. என்ன சபலபுத்தி ! ரஜனி இனி என் சகோதரி. இல்லே. என் மகள் ! ஆம். அவள் ராஜனுக்கே உரிமையானவள்.

**மற்ருேர்புரம்**

ராஜன் : (தனியே) அப்படி ஒருக்காலும் இருக்க முடியாது. பிரிக்க முடியாத எங்கள் சகோதர பாசத்தில் பிளவு உண்டுபண்ணியது ரஜனியா ? அன்பின் அவதார மான என் ஆருயிர்த் தந்தையின் உயிருக்கே எமனுக வந்தவள் ரஜனியா ? சீச்சீ, ஒருக்காலும் இல்லே. அவள் கருணேயின் திருவுரு. எங்கே எனக்கும் அண்ணனுக்கும் தகராறு முற்றிவிடுமோ என்று அவள் எப்படித் துடித் தாள். பாவமறியாத அந்தப் பசுங்கிளி மீது பழி சுமத்துவது துரோகம். ஏன் தான் பிரச்னே இவ்வளவு முற்றிற்ருே எனக்குப் புரியவில்லே. இன்பவானில் இணேபிரியா அன்றில் கள்போல் அன்புச் சிறகடித்து ஒன்ருகப் பறந்து கொண் டிருந்தோம் ரஜனியும் நானும். ஆனுல்......வஞ்சகர் எய்த நஞ்சு தோய்ந்த அம்பு எங்களேக் கிரங்க அடித்துக் கீழே வீழ்த்திவிட்டடதே......சீ, என்ன உலகம் இது ?

ரஜனி : (வந்துகொண்டே) பக்தா. இது தான் கல்லும்.மண்ணும். நீரும், நெருப்பும், காற்றும். மழையும், இடியும், மின்னலும் ஆதிக்கம் செலுத்தும் அசல் உலகம். இப்போ புரிந்ததா ? (சிரித்துக்கொண்டே அவன் தோளில் கைவைக்கிருள். ராஜன் மௌனமாக இருப்பதைப் பார்த்துவிட்டு) ராஜா சாஹேப்......(காதுக்குள் பலமாக) ஓ. ராஜா சாஹேப்... (தன் தோள் மீதிருக்கும் அவள் கையைத் தள்ளிவிட்டு பெருமூச்செறிகிருன் ராஜன்) ராஜ்ன்...ஏன் இந்த மௌனமும் பெருமூச்சும் ?

ராஜன் : ஒன்றுமில்லே, ரஜனி. சிந்தனேப் புய்லில் சிக்கி திக்குமுக்காடுகிறது என் மனம்...ரஜனி இன்று முதல் நான் ஒரு புதிய ராஜன். என் வாழ்க்கைப்பாதையை திசை மாற்றிக்கொள்ளத் தீர்மானித்து விட்டேன். என் உள்ளத்தில் இதுவரையிலும் வரைந்த சித்திரங்களே சுத்தம் செய்து விட்டேன். இனி புத்தம் புதிய

எண்ணங்கள், திட்டங்களுக்குதான் அதில் இடம் கிடைக்கும்,

ரஜனி : அப்படி யென்ருல் ?.........

ராஜன் : பழையன கழிதலும், புதியன புகுதலும்.

ரஜனி : சற்றுவிளக்கமாகச் சொன்னுல்...

ராஜன் : வீரிட்டலறி விடுவாய், நீ.

ரஜனி : ஆ. அவ்வளவு பயங்கரமானதா உங்கள் புதிய திட்டம் ?

ராஜன் : பயங்கரமானதல்ல, பரிதாபத்திற்குரியது.

ரஜனி : திடீரென்று திட்டங்களை மாற்றிக் கொண்டேன் என்று மிக லேசாகச் சொல்லிவிட்டீர்கள். ஆனுல் தங்களைத் தவிர வேறு கதியில்லாத என்னைப்பற்றி.........

ராஜன் : தகுந்த இடத்தில் ஒப்படைத்துவிட்டால் சஞ்சலம் எதற்கு ?

ரஜனி : தகுந்த இடமா ? எனக்குத் தகுந்த இடம் இரண்டே இரண்டு தானிருக்கிறது, ராஜன்.

ராஜன் : அண்ணனையும் என்னையும்தானே சொல்கிருய் ?

ரஜனி : தாங்கள் தானு இப்படிக் கேட்கிறீர்கள் ?

ராஜன் : வேறு எந்த இரண்டு இடம், ரஜனி ?

ரஜனி : எனக்கு நிம்மதி. தங்கள் அரவணைப்பில் கிடைக்கும்; இல்லா விட்டால்.........

ராஜன் : இல்லா விட்டால் .........?

ரஜனி : மரண தேவதையின் அன்பணைப்பில் கிடைக்கும்.

ராஜன் : ரஜனி, நிலைமையைப் புரிந்து கொள்ளாமல் நான் உன்னேடு இவ்வளவு நெருங்கிப் பழகியதே தவறு.

அதுவும் அண்ணன் உன் மீது உயிரையே வைத்திருப்பது தெரிந்தும் அவன் மனம் நோக நடந்து கொண்டது மா பெருந் தவறு. என்னை நீ மன்னித்து விடு. நீ அண்ணா வின்....................

ரஜனி : (அவன் வாயைத் தன் கையால் பொத்திக் கொண்டே) ராஜன் !

ராஜன் : (அவள் கையைத்தட்டிவிட்டு) ஆம் ரஜனி. அண்ணாவின் அன்பிற்குப் பாத்திரமானவள் நீ,

ரஜனி : இருக்கலாம். ஆனால்...............

ராஜன் : வேண்டாம்; வேறொன்றும் சொல்லாதே.

ரஜனி ; ஏன், என் விருப்பு வெறுப்புக்களை வெளி யிடும் உரிமை கூட எனக்குக் கிடையாதா ?

ராஜன் : நிச்சயமாக உனக்கு உரிமையுண்டு, ஆனால் அதை என் காதில் போடாதே.

ரஜனி : (விம்மிக்கொண்டே) என் பேச்சு தங்களுக் குப் பிடிக்கவில்லையா, ராஜன்? துன்பத்தையே துணையாகக் கொண்டு பிறந்த எனக்கு ஆறுதல் தர இரண்டு அன்புச் சொற்களை உதிர்க்கும் தங்கள் மலர்வாய் கூட கொல்லன் உலைவாயாகி விட்டதே.

*[கண்ணீரைத் துடைத்துக் கொண்டே தயங்கித் தயங்கிப் போகிறாள். ராஜனும் கண்களைத் துடைத்துக் கொண்டு கரகரத்த குரலில் அவளை அழைக்கிறான். நிற்கிறாள்.]*

ராஜன் : கோபமா, ரஜனி ? அடி அசடே! அண்ணா உன் மேல் அளவு கடந்த அன்பு வைத்திருக்கிறானே என்றுதான் சொல்ல வந்தேன்.

ரஜனி : இருக்கலாம். ஆனால் எனக்கும் அவர் மீது அதே அன்பு இருக்கவேண்டுமே ?

ராஜன் : இது பெரிய தர்ம சங்கடம். எதற்கும் நீ என்னை மறந்து விடுவதுதான் நல்லது, ரஜனி.

ரஜனி : இல்லை; மறந்துவிடு என்று சொல்வதைவிட இறந்துவிடு என்று சொல்லுங்கள், செய்கிறேன். அது எனக்கு எளிது.

ராஜன்: என் உறுதியைக் கலைக்காதே. எவ்வளவோ சிரமப்பட்டு நான் இரும்பாக்கி வைத்திருக்கும் என் மனம் உன்னைக் கண்டதும் துரும்புபோல் ஊசலாடுகிறது. தயவு செய்து எங்கள் சகோதர பந்தத்தைத் துண்டிக்க விரும்பாதே. இரத்தபாசம்—அற்றுப் போக முடியாது.

ரஜனி : (கண்ணீரைத் துடைத்துக்கொண்டே) ஆம், நான்யார் ? ரத்த பந்தத்தால் பிணைக்கப்பட்ட உங்களை யுத்தகளத்தில் நிறுத்த நான் யார் ? பிச்சை கேட்டு வந்ததை மறந்து தங்கள் மீது இச்சை கொண்டு நிற்க நான் யார் ? வருகிறேன். வணக்கம்.

*(கும்பிட்டு விட்டுப் போகிறாள். கண்ணீர் மல்க அவள் சென்ற திசையையே பார்த்துக் கொண்டு ஸ்தம்பித்து நின்றான் ராஜன் சற்றுநேரத்துக்கெல்லாம் அங்கு கேசவன் வருகிறான்.)*

கேசவன் : கவலைப்படுகிறாயா ராஜன் ? அசடே! கவலையைத்தான் நான் ‘கான்ட்ராக்ட்’ எடுத்துக் கொண்டேனே. ராஜன், என் கெடுமதி நமது ஆருயிர்த் தந்தையையே அபகரித்துச் சென்று விட்டதை நினைத்தால் எனக்குத் தலை சுற்றுகிறது.

ராஜன் : கடந்துபோனது குறித்து கவலைப்படுவதில்லை அண்ணா.

கேசவன் : நீ உத்தமன்; வேறு என்ன சொல்வாய்? ஆனால் அந்த நஷ்டத்திற்கு பிராயச் சித்தம் நான் செய்தே ஆக வேண்டும். ராஜன், ரஜனி இந்தப் பக்கம் வரவில்லையா ?

ராஜன் ; சற்று முன்தான் இங்கிருந்து போனாள்.

கேசவன் : அவளுடைய மென்மலர் இதயம் என் முரட்டு வார்த்தைகளால் வாடிக் கருகிப்போயிருக்கும். அவளுக்கு நீ தான் ஆறுதல் கூறவேண்டும், ராஜன், ஆமாம்...ராஜன்......

ராஜன் : (சட்டென்று குறுக்கிட்டு) அவள்பேச்சை என்னிடம் பேசாதே, அண்ணு. என்மனதை அமைதியில் விட்டு விடு.

கேசவன் : ஓ !...அப்படியா விஷயம் ? ரொம்ப சரி. நான் வருகிறேன்.

[*கபடமாகச் சிரித்துக்கொண்டே போகிருன். வேலேக்காரன் வேதாந்தம் சொல்கிருன்.*]

வேதாந்தம் ; ஆண்டவனே......ஆண்டவனே......

ராஜன் : (எரிச்சலுடன்) டேய். வேதாந்தம்! சும்மா போகமாட்டே...

வேதாந்தம் : கோபிக்க வேண்டாம் ஆண்டவனே. மணி எட்டாயிடிச்சி. சாப்பாடு ஆறிப்போகுது ஆண்டவனே.

ராஜன் : சாப்பாடு வேண்டாம்...வேண்டாமென்று எத்தனே தடவை சொல்வது, போடா. போய் வேலேயைப் பாருடா.

வேதாந்தம் ; ஆண்டவனே, எத்தனே நாளேக்குத் தான் இந்தக் கும்பியைப் பட்டினி போடுவீங்க ஆண்டவனே? ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ ? இது உங்களுக்குத் தெரியாததா ஆண்டவனே.

ராஜன் : டேய், உனக்கு மூளே இல்லே. எனக்கும் பெரிய தொல்லே. வோதந்தம்னு பேரு இருந்துட்டாப் புலேபெரிய வேதாந்தமே பேசிப்புடலாம்னு எண்ணமோ?

வேதாந்தம் : கோபிக்கக்கூடாது ஆண்டவனே. ரஜனியம்மாவும் சாப்பாடு வேண்டாம் வேண்டாம்னுட்டே சொல்லுது ஆண்டவனே. நான் என்ன செய்யட்டும் ஆண்டவனே.

ராஜன் : என்ன ! ரஜனியும் சாப்பிடுகிறதில்லேயா !

வேதாந்தம்: அதற்குத்தானே ஆண்டவனே சொல்ல வந்தேன். பெரிய ஆண்டவன் கூட சாப்புடரதில்லியே ஆண்டவனே.

ராஜன்: அப்படியா! அடடா. நான் எவ்வளவு பெரிய தப்பு செய்துட்டேன். வேதாந்தம், நீ போய் எங்கள் மூன்று பேருக்கும் இலே போடு. அண்ணுவையும் ரஜனியையும் அழைத்துக்கொண்டு நான் இதோ வர்ரேன்

வேதாந்தம்: இப்போதுதான் ஆண்டவனே என் அடிவயிறு குளுருது.

['ஆண்டவனே முருகா—உனே வேண்டினேனே வரந்தா' என்றுபாடி வயிற்றில் தட்டி தாளம் போட்டுக்கொண்டே போகிருன்.]

**காட்சி: 11)** **(ஒத்திகை ஹால்**

(எல்லா நடிகர்களும் கேசவனின் வருகைக்காகக் காத்திருக்கிருர்கள். வேதாந்தம் வேகமாக ஓடி வருகிருன்.)

வேதாந்தம்; ஆண்டவனுக்கு ஆபத்து! ஓடிவாங்க, ஆண்டவனுக்கு ஆபத்து!!...ஆண்டவனுகக்கு ஆபத்து!!!

(எல்லோரும் சிரிக்கிருர்கள்.)

ராஜன். என்னடா இது! ஆண்டவனுக்குக் கூட ஆபத்து வந்துட்டுதா?

மஞ்சு: எவனுவது பிள்ளையாரு பொம்மையைப் போட்டு ஒடச்சிருப்பான். (சிரிப்பு)

வேதாந்தம்: ஐயோ, ஆண்டவனே, நம்ப பெரிய ஆண்டவனுக்கு ஆபத்து!...ஓடிவாங்க. துடியாத் துடிக்கிருங்க. ஓடிவாங்க ஆண்டவனே.

ராஜன்: என்னடா! அண்ணனுக்கு என்னடா உடம்பு?

வேதாந்தம்; அது தெரியாமத்தானே ஆண்டவனே ஓடிவந்துட்டேன். சீக்கிரம் வந்து பாருங்கோ ஆண்டவனே.

(எல்லோரும் ஓடுகிருர்கள்.)

**மாற்றுக் காட்சி**

[கேசவன் முனகிக்கொண்டும். உருண்டு கொண்டும் வயிற்றைப் பிசைந்து கொண்டும் கட்டிலில் உருளு கிருன்.]

ராஜன் : (பதறிப் போய்) அண்ணு ! அண்ணு !!

கேசவன் : ராஜன், கிட்டே வாப்பா......எங்கே ரஜனி ? ஐயோ...ஈரலே அறுக்கிறதே.........குடலேப் பிடுங்குதே.

ராஜன் : திடீரென்று எப்படியண்ணு இப்படி வந்தது......(விஷம் என்ற லேபில் ஒட்டப்பட்ட பாட்டில் ஒன்று பக்கத்து மேஜை மீது காலியாக இருப்பதைப் பார்த்து விட்டு, பதறித் துடித்து) ஐய்யோ ! அண்ணு ! மோசம் செய்து விட்டாயே !

கேசவன் : காரியம் மிஞ்சிப் போய் விட்டது. கதருதே. இனி என்ஞல் வாழ முடியாது.

ராஜன் ; இப்படியும் எங்களே மோசம் செய்யலாமா அண்ணு ? ரஜனியைத்தான் நான் உனக்கே தந்து விட்டேனே. எதற்காக அண்ணு இந்தப் பயங்கரக் காரியம் செய்தாய் ! அண்ணு ! அண்ணு !! (கட்டிலில் தலேயை மோதுகிருன், மற்றவர்கள் தடுக்கிருர்கள்.)

கேசவன் : ரஜனி !

ராஜன் : ரஜனி ! எங்கே அந்தப் பிசாசு ? நாசகாலி ! எந்த முகூர்த்தத்தில் இங்கே நுழைந்தாயோடி பிசாசே ! என் குடும்பத்தையே நாசமாக்கி விட்டாயே ! கிராதகி ! அன்று ஆருயிர்த்தந்தை ! இன்று என் அருமை அண்ணு ! ஐயோ !......நரபலி நாடி வந்த ராக்ஷஸியே ! ஓடிப்போ. என் கண்முன் நில்லாதே. என் பேய்க் குணம் பூரண சொருப மெடுத்து உன் கழுத்தைப் பதம் பார்க்கும் முன் ஓடிப்போய் விடு போ......இங்கிருந்து...[ரஜனி ஏங்கி அழுகிருள்.]

கேசவன் : ரஜனியைப் பழிக்காதே ராஜன். அவள் என் சகோதரி...இல்லே, என் மகள்!...என் மகள்!...உம்ம் ஐயோ...நெஞ்சை அடைக்கிறதே...இங்கே வாம்மா... ரஜனி...சீக்கிரம் வா...உன் வலது கையைக் கொடு... ராஜன், என் அன்புத் தம்பி, உன் வலது கையையும் கொடப்பா...உம்...ம்...சீக்கிரம்...

ராஜன் : அண்ணு !

கேசவன் : ஒன்றும் பேசாதேடா......அன்று அப்பாவின் இறுதி ஆசையைப் பூர்த்தி செய்தேன் நான். இன்று அண்ணனின் கடைசி வேண்டுகோளேப் பூர்த்தி செய்ய வேண்டும் நீ ! கொடு...வலதுகையைக் கொடு... [இருவர் கரங்களேயும் ஒன்று சேர்க்கிருன்] 'பதியும் பத்தினியுமாகப் பல்லாண்டு வாழ்க !'...ராஜன், உன் அன்பிற்கும் அபிமானத்திற்கும் பாத்திரமானவள் ரஜனி. அப்பாவின் அன்பையெல்லாம் கொள்ளே கொண்டிருந்த அருங்குணக் குன்று. அவர் மனம் வாடாமல் பாதுகாக்க வேண்டியது உன் கடமை, பொறுப்பு, எல்லாம் ஹா. !...ஐயோ நெஞ்சை அடைக்கிறதே...அப்பா...கூப்பிட்டீங்களா... இதோ வந்துட்டேம்பா...ராஜன்...ரஜனி...வந்...துட்... டேம்...பா......

*[தலே சாய்கிறது. ராஜன் அவன் மேல் விழுந்து கதறுகிருன். எல்லோரும் குழந்தைகளேப் போல் ஏங்கி ஏங்கி அழுகிருர்கள். திடீரென்று ராஜனின் முதுகில் கையால் தட்டிக் கொண்டே எழுந்து உட்கார்ந்து இடி இடி யென்று சிரிக்கிருன் கேசவன் ! எல்லோரும் ஆச்சரியத்தாலும் ஆனந்தத்தாலும் ஸ்தம்பித்து நிற்கிருர்கள்.]*

ராஜன் : [கண்ணீரினூடாகச் சிரித்துக் கொண்டே] அண்ணு !

கேசவன் : இன்னும் சாகவில்லேயா என்று கேட்கிருயா?

ராஜன் : இது எல்லாம் என்ன நாடகம்!

கேசவன் : தெரியவில்லையா, ராஜன்-ரஜனி திருமண நாடகம் !

ராஜன் : இந்த விஷம் ?

கேசவன்: போத்தலும் காலியாய் இருந்தது. நானும் துடித்து உருண்டதால், நான்தான் விஷத்தைக் குடித்து விட்டேன் என்று நீ நம்பியதில் தவறென்றும் இல்லை. ஆனால் நான்தான் புத்திசாலித்தனமாக விஷத்தை வாங் கியதுமே கீழே கொட்டி விட்டு குப்பியை மட்டும் கொண்டு வந்தேன்.......

வேதாந்தம் : [சிரித்துக் கொண்டே] ஆண்டவனே! ஆண்டவனே...ஆண்டவனே !

கேசவன் : ராஜன், இவ்வளவு சீக்கிரமாகவா நான் செத்து விடுவேன். என் மனோரதம் இன்னும் எவ்வளவோ நிறைவேற வேண்டுமே. உனக்கும் ரஜனிக்கும் பிறக்கும் மணிப்பயலை மடியில் போட்டு மகிழ்ந்த பிறகல்லவா நான் கண்களை மூடுவேன்?

ராஜன் : இருந்தாலும் நீ எங்களை இப்படிப் பயங் காட்டி யிருக்கக் கூடாது, அண்ணு.

கேசவன் : நான் இப்படிச் செய்திரா விட்டால் நீ ரஜனியை ஏற்றுக் கொள்ள முன் வந்திருப்பாயா ? இன் னும் நான் காதலிப்பதாக அல்லவா நினைத்துக் கொண்டி ருப்பாய் ? வில்லனாக நடித்து எத்தனையோ நாடகங்களில் செத்துச்செத்து பழக்கம் பாரு. அதை இங்கே பயன் படுத்திக் கொண்டேன். மேனேஜர் ஸார், எப்படி என் நடிப்பு ?

மேனேஜர் : அபாரம்! கனகச்சிதம் !

வேதாந்தம் ; ஆண்டவனே, நான் நெசம்மா பயந்து போயிட்டேன் ஆண்டவனே !

கேசவன்: பயப்பட வேண்டாம் ஆண்டவனே ! தட புடலான கல்யாண விருந்துக்கு ஏற்பாடு செய்யுங்கோ ஆண்டவனே.

[எல்லோரும் சிரித்துக் கொண்டே செல்கிறார்கள்]

காட்சி 12) (வீதி

*[இருகிராமவாசிகள் பேசிக்கொண்டு வருகிறார்கள். எதிரே வேதாந்தமும் பொறுமையும் மூட்டை முடிச்சுகளுடன் வருகிறார்கள்.]*

மூக்கன்: டேய் குடுமி, அதோ நாடகக் காரங்க வர்ராங்க பாருடா.

குடுமி: அடடே! வேதாந்த முல்ல! ரொம்ப நல்லாப்பாடுவாரு மூக்கா. அவருபெரியவெகடக்காரருடா

*[வேதாந்தமும் பொறுமையும் பக்கத்தில் வருகிறார்கள்.]*

குடுமி: வாங்க...வாங்க, வேதாந்தம் புள்ளே, தண்டமுங்க. ஏது, சாமானெல்லாம் மூட்ட மூட்டயாயிருக்கே

வேதாந்தம்: எங்க சின்ன ஆண்டவனுக்கும் ரசனியம்மாவுக்கும் ஒரு குட்டி ஆண்டவரு பொறந்திருக்காருல்ல, அதுக்கு பாட்டி

மூக்கன்: அது ஆருங்க, பாட்டி ஆண்டவன் ?

பொறுமை: இல்லீங்க, எங்க வேதாந்தம் எல்லாரையும் ஆண்டவனேன்னுதானுங்க கூப்புருடுவாரு, டீ பார்ட்டி.

குடுமி: இருக்கும் இருக்கும், பேரு வேதாந்தமில்லே

மூக்கன்: ஆமா, வெறும் டீப்பாட்டிதானு ? கூத்து ஒன்றுமில்லையா ?

பொறுமை: கூத்து, வெகடக் கச்சேரி எல்லாம் உண்டுங்க,

வேதாந்தம்: கட்டாயம் வந்திடுங்க ஆண்டவனே !

கிராம வாசிகள்: அதுக்கென்ன, வந்துடுரோம்.

காட்சி:13) (மேடை

[ராஜனின் மகனுக்குப் பெயர் சூட்டு விழா நடைபெறுகிறது. பிரமுகர்கள் குழந்தையைப் பாராட்டி ஆசீர்வதிக்கிறார்கள்.)

மேனேஜர்: கன்கிராஜுலேஷன்ஸ் மிஸ்டர் ராஜன். குழந்தை உங்களையே உரித்து வைத்திருக்கிறதே.

ராம்நாத்: பலே...பலே! மேடையில் மட்டுமல்ல, வாழ்க்கை நாடகத்திலும் வெற்றிகரமாக நடிக்க முடியும் என்று நிருபித்து விட்டீர்கள், நீங்கள் இருவரும்.

மேக்கப்மேன்: நமது வருங்கால நடிகரின் லக்ஷணத்தைக் கவனித்தால் இந்த மேக்கப்மேன் மேகநாதரின் கை அவர் முகத்தில் படவேண்டிய அவசியமே ஏற்படாது போலிருக்கே.

சங்கீத வாத்தியார்: குழந்தை அழுவதே ஒரு புதிய ராகத்தை யல்லவா சிருஷ்டிக்கிறது.

ஒரு நண்பர்: தம்பியின் மகனுக்கு என்ன பெயர் வைக்கப் போகிறீர்கள், நண்பர் கேசவன்.

கேசவன்: சண்முகம்.

நண்பர்கள்: சண்முகமா? புதுசா ஒன்னும்.........

கேசவன்: சண்முகம் என்ற பெயர் நாடக உலகத்துக்கு ஒன்றும் புதிதில்லை. தோழர்களே! தமிழ் நாட்டில் தவநடிகர் ஒருவரின் பெயரைத்தாங்கி எங்கள் செல்வனும் அந்த நடிகரைப்போல் நடிப்புக்கலையின் சிகரத்தில் நின்று நர்த்தனம் புரிய வேண்டு மென்பது எமது அவா.

ராஜன்: ஆமாம், ஆறு முகங்களே இருந்தாலும் கூட அத்தனை உணர்ச்சி பாவங்களை முகத்தில் மாறி மாறிக் காட்டிவிட முடியாத ஒன்றை அரைக்ஷணத்திலே அப்படியப்படியே பிரதிபலித்துக் காட்டும் நமது லட்சிய நடிகர் சண்முகத்தின் பெயரை எங்கள் செல்வனுக்குச் சூட்டுவதில் பெருமை கொள்கிறோம்.

எல்லோரும்: வாழ்க சண்முகம் ! வாழ்க நாடகக்கலை!

[*நண்பர்கள் பல அன்பளிப்புகளை வழங்குகிறார்கள்*]

மஞ்சு: (படமெடுத்தாடும் நாகம் பொறிக்கப்பட்ட மோதிரம் ஒன்றைப் பரிசாக வழங்கிக் கொண்டே) இந்த சிறிய பரிசை பெரிதாக மதித்து ஏற்றுக் கொள், ரஜனி.

ரஜனி : (திடுக்கிட்டு—சமாளித்துக்கொண்டு) அன்பு தானே அக்கா பிரதானம். அன்பளிப்பிலே சிறிது பெரியது என்றுகூட உண்டா ?

வேதாந்தம் : (ஒரு பொம்மை நாய்க்குட்டியை நீட்டிக்கொண்டே குழந்தையிடம் பேசுகிறான்) பேபி ஆண்டவனே, இந்த வேதாந்தம் உங்க குடும்பத்துக் கெல்லாம் நாயா உழைச்சிருக்கு. அப்புடியே எங்க பேபி ஆண்டவனுக்கும் இந்த நாய்க்குட்டி மாதிரி நன்றியோட உழைக்கும்.

[*எல்லோரும் சிரிக்கிறார்கள். சிற்றுண்டி வழங்கப்படுகிறது.*]

கேசவன் : கலா ரஸிகர்களே, வணக்கம். இந்த இளம் நடிகனின் உதயத்தைக் கௌரவிக்க நீங்கள் சமுகம் தந்த தற்கும், ஏராளமான பரிசுகளையும், ஆசியையும் வழங்கிய தற்கும் உங்களுக்கு மனப்பூர்வமாக நன்றி செலுத்து கிறேன். இப்பொழுது எங்கள் பிரதான ஹாஸ்ய நடிகர் சர்வ வல்லமையுள்ள வயிற்றைப்பற்றி நடத்தப் போகும் காலட்சேபத்தைக் கேட்டு ரஸிக்கும்படி வேண்டு கிறேன். (கரகோஷம்.)

வேதாந்தம் : வயிறு படைத்த அன்பர்களே, வணக்கம். சர்வவல்லமையுள்ள இந்த சாக்ஷாத் வயிற் றைப்பற்றி அடியேன் செய்யப்போகும் இந்தக் கால க்ஷேபத்துக்கு நமது மகாகனம் தொந்திநாயகம் புரோப் ரைட்டர் பூரண திருப்தி விலாஸ் ஹோட்டல்—அவர்களைத் தலைமை தாங்கும்படி—இல்லை இல்லை. மன்னிக்கணும். இங்கே தலைக்கு ஏது பிரதானம்—வயிறு தாங்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பும்—கரகோஷமும்.)

தொந்திநாயகம்: (தூக்க முடியாத தொந்தியைத் தடவிவிட்டுக்கொண்டே) வயிறன்பர்களே, வணக்கம். மறுமலர்ச்சி நாடகமன்றத்தின் பிரதான ஹாஸ்ய நடிகர் ஸ்ரீலஸ்ரீ வேதாந்தம் அவர்கள் வயிற்றைப்பற்றி இப்பொழுது உங்கள் முன் ஓர் அருமையான காலக்ஷேபம் செய்யப் போகிறார். உதவாக்கரை விஷயங்களைப்பற்றி யெல்லாம் தற்காலத் தலைவர்கள் பேசிப் பேசி வீண்காலம் கடத்தும் இந்தக் காலத்திலே நகையரசு அவர்கள் இவ்வளவு ஓர் அதி முக்கியமான அங்கத்தைப்பற்றி காலக்ஷேபம் செய்ய முன் வந்தது அவர்களுக்கு வயிறு மேலிருக்கும் வற்றாத அன்பையே குறிக்கிறது.

நீங்கள் இந்த வயிற்றுக் காலக்ஷேபத்தை வயிறுகுளிரக் கேட்பீர்கள், வயிறு குலுங்கச் சிரிப்பீர்கள். வயிறாரப் போற்றுவீர்கள் என்று வயிறு பூர்வமாக நம்புகிறேன். வணக்கம். (வயிற்றைத் தடவிக்கொண்டே அமர்கிறார். சிரிப்பும்—கரகோஷமும்.)

வேதாந்தம்: *(பாட்டு)*

*வாழ்க! வாழ்க! வயிறே என்று*
*வாழ்த்துக் கீதம் பாடுவோம்*
*வீழ்க! வீழ்க! பட்டினியென்று*
*வெற்றிச்சங்கை ஊதுவோம்.*

*ஹே வயிறே,*

எண்சாண் உடம்புக்கும் சிரசே பிரதானம் என்று எழுதி வைத்தவனின் வாயில் ஒரு பிடி மண்ணைப்போட்டு விட்டு, (ஓ! அதுவும் வயிறாகிய உன்னுள்தான் வந்து விழுமோ!)—அந்த எட்டுசாண் உடம்பையும் விசித்திரக் குள்ளனைப்போல் ஒரு சாண் வயிறாகிய நீ........அடாடா டாடா......பம்பரம்போல் அல்லவா ஆட்டி வைக்கிறாய்! ஹே, வயிறே! உன்னுடைய வரலாறு சொல்லத் தொலையாதது. உன்னுள்ளே இடியாப்பம்போல் சுருண்டுசுருண்டு கிடக்கும் குடலைப்போல் உன் வரலாறும் சொல்லப் போனால் நீண்டுகொண்டே போகும். நீயே சர்வசக்தி யுடையாய்...மங்களம், பாடு.

கூட்டத்தில் ஒருவர்: என்னுங்க அதுக்குள்ளேயும் மங்களம் பாடச்சொல்லிட்டீங்க?

வேதாந்தம்: இல்லே, இல்லே இவபேரு மங்களம். அதுதான் மங்களம், பாடுன்னு சொன்னேன்.

மங்களம்: (பாட்டு)

*சர்வ வல்லமையுள்ள சக்தியும் நீயே*
*சாதம் சாதமெனத் துடிக்கச் செய்வாயே*
*கர்வத்தைவிட்டு, கதறித்துடித்து*
*கஞ்சிக்காகக் கையேந்தச் செய்வாயே*
*வயிறே! வயிறே! வயிறே! வயிறே!......*

வேதாந்தம்: ஆஹா! என் புரட்சியின் பிறப்பிடமே! நீ செய்த புரட்சியினால் எத்தனை சாம்ராஜ்யங்கள் தவிடு பொடியாயின! எத்தனை சர்வாதிகாரிகளின் தலைகள் தரையிலே உருண்டன! எத்தனைப் பாட்டாளி மக்களின் கொடி பட்டொளி வீசிப் பறக்கிறது!

உன் பெருமையை உணராமல் ஓர் எத்தர் கூட்டம் மானம் மானம் என்று தானம் கேட்கிறது. நீ நிரம்பா விட்டால் மானம் எங்கிருந்து குதிக்கும்? மானம் வேண்டும் என்று சொல்லும் தெம்பைக் கொடுப்பதே நீயல்லவா? உலகின் சகலத்தையும் இயக்குவதே நீயன்றோ?

*கோர்ட்டிலே ஜட்ஜி இருப்பதுவும்—வக்கீல்*
*கொட்டி முழக்கி நின்றாடுவதும்*
*கூட்டிலே கள்ளன் நடுங்குவதும்—இந்த*
*கும்பி செய்யும் செயல் அல்லவோடா!*

ஐயோ! இப்படியாகத்தானே நான் காலக்ஷேபம் செய்து கொண்டிருக்கையிலேயே, வயிறன்பர்களே, இந்த வயிற்றுப்பிசாசு என் அடிவயிற்றைக் கடிக்கிறது...ஊ...ஊ ...ஊ...அதாவது அடியேனுக்குப் பசிக்கிறது!

கூட்டத்தில் ஒருவர்: பரவாயில்லெ. காலக்ஷேபம் நடக்கட்டும்.

வேதாந்தம்: ஐயோ! சாமி, முதுகிலே அடிச்சாலும் வயித்துலே அடிக்காதீங்க! (எழுந்து ஓடிவிடுகிறான். கரகோஷத்துடன் விழா முடிவடைகிறது.)

காட்சி 14] [ரஜனியின் அறை

[கேசவன் சண்முகத்தை மடியில் வைத்துக் கொண்டிருக்கிருன். எதிரே ரஜனி உட்கார்ந்தி ருக்கிருள்.]

ரஜனி: அன்பரே வீணுக என்னைச் சந்தேகிக்கா தீர்கள். என் இதயம் களங்கமற்றது. ஏற்கெனவே, தங்கள் சுந்தர பிம்பம் அங்கே பிரதிஷ்டையாகி விட்டது!

[கடைத் தெருவுக்குப் போய் விட்டு வந்து கொண்டி ருந்த ராஜன் அறைக்குள் ! ரஜனி பேசும் இந்த வார்த்தைகளைக் கேட்டு திடுக்கிட்டு ஒதுங்கி நின்று ஒட்டுக் கேட்கிருன்.]

ரஜனி: எதிர்பார்த்த ஒருதுளி மழைநீர் விழுந்ததும் மூடிக் கொள்ளும் சிப்பியைப் போல், என்று தங்களை என் மனக் கோயிலில் பிரதிஷ்டை செய்து கொண்டேனே அன்றே அங்கே மற்றவர்களுக்கு இடமில்லாமல் போய் விட்டதே, பிரபோ!

கேசவன்: அப்படியானல் ஏன் இன்னெருவனை மணந்தாய் ?

ரஜனி: சரியான கேள்வி. இதை உங்களால் கேட்காமலிருக்க முடியாதுதான். ஆனலும் சற்று யோசி யுங்கள் அன்பரே! ரோஜாவைக் கேட்டிருந்தால் முட்கள் நிறைந்த செடியில் மலர்வதற்கு விரும்பியிருக்குமா ? நன் முத்தை கேட்டிருந்தால் கேவலம் சிப்பியின் வயிற்றுக்குள் விளைவதற்குச்சம்மதித்திருக்குமா? தங்கத்தைக் கேட்டிருந் தால் மண்ணுக்குள் புதைந்து கிடக்க இணங்கியிருக் குமா ? குயில் கருப்பு நிறத்தையும், மயில் கர்ண கடூர மான குரலையும் விரும்பியிருக்குமா ?.........அதே போல் என் உள்ளத்தைக் கேட்டிருந்தால் தங்களைத் தவிர வேருெரு வரை ஏற்றுக் கொள்ள ஒருக்காலும் சம்மதித் திருக்குமா? ஆனல் நம் சமூகத்தில் பெண்களைக் கேட்டுக் கொண்டா விவாகங்கள் நடத்தி வைக்கப் படுகின்றன ? ......இப்போதுதான் என்ன, என் உடலுக்கு வேண்டு மென்ருல் அவர் உரிமை கொண்டாடலாம்! ஆனல் உள்

ளத்தின் உரிமையைத் தங்களுக்கு அளித்து எத்தனையோ வருஷங்களாகி விட்டனவே, ஸ்வாமி !

கேசவன் : பாவம், நீ அவனை உண்மையாக நேசிப்பதாக அவன் நினைத்துக் கொண்டிருக்கிறான்.

ரஜனி : இருக்கட்டுமே. கிளியைத் தங்கக் கூண்டில் அடைத்து, வேளா வேளைக்குப் பாலும் பழமும் தருபவன் அது ஆனந்தமாக இருப்பதாகத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறான். ஆனால் அந்தக் கூண்டிலிருந்து வெளியேறத் துடியாய்த் துடிக்கும் அந்தக் கிளியின் நிலையை அவன் அறிவானா ?

*[பொறுக்க முடியாமல் காதுகளைக் பொத்திக் கொண்டு, தலைமயிரைப் பிய்த்துக்கொண்டே திரும்பி ஓடுகிறான், ராஜன்.]*

கேசவன் : (நாடகப் பிரதியைக் கீழே வைத்துக் கொண்டே) அபாரமான வசனங்கள், ரஜனி. ஆசிரியர் ராமனுக்கு அதிகச்சிரமம் எடுத்துதான் இதை எழுதியிருப்பார். அதுவும் பாரேன் இந்த நாடகத்தை. அவர் எழுதி வருவதாக இன்று வரை நமக்குத் தெரியாதே ?

ரஜனி : 'சந்தேகம்' என்ற இந்த நாடகம் நமது மன்றத்திற்கு அதிர்ஷ்டத்தைக் கொண்டுவரும், அண்ணா.

கேசவன் : சந்தேகமென்ன? (குழந்தை அழுகிறான். வேண்டாண்டா, கண்ணு அழாதே...இந்தா, உங்கம்மா கிட்டப்போ............ஆமா எங்கே இன்னும் ராஜனைக் காணோம் ?

ரஜனி : குழந்தைக்கு 'கவ்அன்கேட்' எடுத்துண்டு வர பஜாருக்குப் போனார். இன்னும் காணோமே...

கேசவன் : வந்துடுவான். நீ குழந்தையின் பசிக்கு ஏதாவது கொடு. நான் வருகிறேன்.

ரஜனி : ஆகட்டும், அண்ணா !

காட்சி: 15.] [சென்னை கடற்கரை

[ராஜன் தனியே சோர்ந்துபோய் ஓரிடத்தில் உட்கார்ந்திருக்கிறன். அவனைத் தாண்டிப் போகும் ஆண்களும் பெண்களும் அவன் ஜனக் கூட்டத்தை விட்டு ஒதுங்கி உள்ளங்குன்றி உட்கார்ந்திருப்பது கண்டு அவனை முறைத்துப் பார்த்துவிட்டுப் போகிறார்கள்.)

கலையழகன் : யார்!......ராஜனு? மகா மோசத்திலும் மகா மோசம்.

ராஜன் : (ஆச்சரியத்துடன்)அடடே நல்ல கண்ணு!

கலையழகன் : நல்லகண்ணு. அதுதான் ஒரு அங்குல கனத்திலே வெள்ளெழுத்துக் கண்ணாடி மாட்டியிருக்கேன். மகாமோசத்திலும் மகாமோசம். கலையழகன்னு பெயரை மாற்றிக் கொண்டேண்டா!

ராஜன் ; நல்லாருக்கு ஒன்கலையும், அழகும்.

கலையழகன் : டேய்: அதிருக்கட்டும் என்ன இப்படி திடுதிப்புண்ணு சென்னையிலே வந்து குதிச்சிட்டே? ஏதடா நம்ப பால்ய சிநேகிதன் ஒருத்தன் இருக்கானே. அவனுக்குக் கேவலம் ஒரு கார்டு எழுதிப் போட்டுட்டுப் போவோமுன்னு தோணலியா உம் மூளையிலே? மகா மோசத்திலும் மகாமோசம். ஸ்டேஷனுக்கே வந்திருப்பேனில்லே?

ராஜன் : டேய், என்னடா, நீ பாட்டுக்கு அடுக்கிக் கிட்டே போறே? யாருக்குடா தெரியும் உன் விலாசம்?

கலையழகன் ; அடடடடேய்! நெசம்மாத்தானு சொல்றே? திராவிடச் சிங்கங்களின் தனிப்பெரும் தளபதி கலையழகனுடைய விலாசமா தெரியாதுண்ணு சொல்ரே? மகாமோசத்திலும் மகாமோசம். பெரிய அவமான மாச் சேடா இது!

ராஜன் : என்னடாது! சிங்கங்களின் தளபதியா? ஏதாவது சர்க்கஸ் கம்பெனி ஆரம்பிச்சிருக்கியோ?

கலையழகன் : மண்ணுங்கட்டி! மகாமோசத்திலும் மகாமோசம். தன்மானத் திராவிடர்களின் தளபதிடா

நான்......அதுதான் போகட்டும். தமிழ் அஞ்சல் நீ வாசிப்ப தில்லையோ ?

ராஜன் : வாசிக்காமலென்ன, எல்லோரும் எனக்கு ஆங்கிலத்திலேயா கடிதம் எழுதுகிருர்கள்?

கலையழகன் : மகாமோசத்திலும் மகாமோசம். அதெச் சொல்லலல்லேடா; 'தமிழ் அஞ்சல்' திராவிடர்களின் தனிப் பெரும் பத்திரிகை. தமிழ் நாட்டிலே, தமிழாசிரியர் களைக்கொண்டு; தமிழர்களுக்காக, தனித்தமிழிலே வெளி யிடப்படும் தமிழ்ப் பத்திரிகை! அதன் ஆசிரியர்தான் இந் தக் கலையழகன் என்ற நல்லகண்ணு.

ராஜன் : ஓஹோ ! எல்லாமே புரட்சிகரமாயிருக்கே?

கலையழகன் : அதை ஏன் கேட்கிறே. மகாமோசத் திலும் மகாமோசம். முன்னே 'தமிழன் உள்ளம்'னு ஒரு பத்திரிகை நடத்தினேன். உண்மையான செய்திகளை உள்ளது உள்ளபடி, சாத்வீகமான முறையிலே எழுதி வந்தேன். ஆயிரம் பிரதிகள் அச்சடித்தால் 700 பழைய பேப்பர் விலைக்குத்தான் போகும். மீதி 300-ல் பாதிக்கு மேல் பணமில்லாத விற்பனை. மகாமோசத்திலும் மகா மோசம்! அப்புறம் திடீர்னு 'தமிழர்களே'ங்கிறதை 'திராவி டர்களே'ண்ணு ஆரம்பிச்சேன். 'அன்பர்களே, அபிமானி களே, நேயர்களே' எல்லாம் மாற்றி 'சிங்கங்களே, தங்கங் களே. தம்பிகளே, கம்பிகளே,ன்னு எழுதினேன். இல்லை தீட்டினேன். அப்புறம் ஏன் கேட்கிறே. இப்போ பத்திரி கையின் விற்பனை பத்தாயிரம் பிரதிகள் ! அது மட்டுமா ? மாநாடுகள் என்ன, மாவட்டநாடுகள் என்ன, மலர் மாலை கள் என்ன. .........உம்ம்.........மகாமோசத்திலும் மகா மோசம்!

ராஜன் : இப்படிப்பட்ட 'யோக்கியர்கள்' கிளம்பு வார்கள் என்று முன்பே தெரிந்துதான் பாரதியார் "நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ சொல் வீர் !" என்று பாடினர்...

கலையழகன் : எத்துவாளித்தனம் பண்ணும் போது தமிழரென நாமம் வைத்துக் கொள்வது சரியல்ல என்று

கருத்தானே அப்பனே திராவிடர் என்று பெயர் வைத்துக்கொண்டோம்? இப்பொழுது நாங்கள் பேசுவது கலை! தீட்டுவது கலை! நடப்பது கலை! நடிப்பது கலை! பணம் சேர்ப்பது கலை! எத்துவது கலை! போராடுவது கலை! சதிராடுவது கலை! எல்லாமே கலை! ஒருவரையொருவர் புகழ்ந்து தள்ளி 'காசு காரியத்தில் கண்வை'ப்பதே எங்கள் கலை!

ராஜன் : 'திறமான புலமையெனில் வெளி நாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்' என்றல்லவா பாரதி பாடினுர்?

கலையழகன் : மகாமோசத்திலும் மகாமோசம். விட்டுத்தள்ளப்பா இந்தப் பாரதியை! தமிழ் நாட்டில் எங்கள் மூக்கை அறுக்கும் ஒரே கத்திதான் இந்தப் பாரதி. சோர்ந்து கிடக்கும் பாமர மக்களிடம் சும்மா 'நீங்க அப்படிப்பட்டவர்களாக்கும், இப்படிப்பட்டவர்களாக்கும்'னு கப்சாவிட்டு, எங்களுக்கு ஒரு கூட்டம் சேர்த்திருக்கோம். 'இமயத்தில் புலிக்கொடியைப் பொறித்தவர் நாம். கனக விசயன் தலையிலே... கல்லேற்றிக் கொண்டுவந்த சேரன் செங்குட்டுவனின் பேரன் நாம். பாண்டியன் பரம்பரை! அப்படி இப்படின்னு ஏமாந்த மக்களுக்குக் கொஞ்சம் டோஸ்கொடுத்துச் சூடுண்டாக்கினுல், அங்கே பாரதிவந்து 'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை'ங்கிருன். நமது தரித்திரத்துக்கெல்லாம் பாப்பான் தான் காரணம்னு நாங்க ஏதோ புதுசா கண்டு பிடிச்சமாதிரி காட்டி, பார்ப்பானைத் திட்டப்புறப்பட்டால் அவன் பாப்பானுகப் பிறந்திருந்தும் கூட எங்களை யெல்லாம்விட ஒருபடி அதிகமாகத்தானே தாண்டிட்போய் பாப்பானை ஐயரென்ற காலமும் போச்சே' என்றும்,

'இந்நாளிலே பொய்மைப் பார்ப்பார்—அவர்
ஏது செய்தும் காசு பெறப் பார்ப்பார்'
'பிள்ளைக்குப் பூணூலாம் என்பான்—நம்மைப்
பிச்சுப்பணம் கொடெனத் தின்பான்
கொள்ளைக்கே சென்றுலும் வஞ்சம்—செய்து
கூசாமல் வாங்கிடுவான் லஞ்சம்.
பேராசைக் காரனடா பார்ப்பான்—ஆனல்,

*பெரிய துரை எனில் உடல் வேர்ப்பான்*
*யாரானாலும் கொடுமை செய்வான்—பணம்*
*அள்ளிவிட வில்லை யெனில் வைவான்'*

என்றெல்லாம் பார்ப்பானைத்திட்டு திட்டென்று திட்டிவிடுகிறான். ஒரு பார்ப்பானாக பிறந்து அவனைத் திட்டும் பொழுது பார்ப்பனரல்லாத நாங்கள் திட்டினால் ஏதோ பொறாமையால் வயிறெரிந்து திட்டுகிறோம் என்று மக்கள் சிரிக்கிறார்கள்.

ராஜன்: உம்ம்......என்னமோப்பா. இலக்கியத்துக்கு இவ்வளவு பெரிய ஆபத்து வந்திருக்குதுன்னு இப்பத் தான் எனக்குத் தெரியுது. இலக்கியத்தைக் கடவுள் காப் பாற்றட்டும்.

கலையழகன்: டேய், அது இருக்கட்டும். ஆமா எப்போ வந்தே ? எங்கே தங்கியிருக்கே ?

ராஜன்: தற்சமயம் இந்த இடத்தில்தான்!

கலையழகன்: மகா மோசத்திலும் மகா மோசம். வாடா வீட்டுக்குப் போவோம்...பெட்டி, படுக்கை யெல் லாம் எந்த ஹோட்டலிலே வச்சிருக்கே ?

ராஜன்: பெட்டியாவது, படுக்கையாவது ? சர்வ மும் இந்த சட்டைப் பைக்குள்ளே தாம்பா அடக்கம்.

கலையழகன்: அப்படீன்னா ?

ராஜன்: அப்படீன்னா...திடீரென்று ஏற்பட்ட பிரயா ணம்னு அர்த்தம்.

கலையழகன்: மகா மோசத்திலும் மகா மோசம். வாடா, வீட்டுக்குப் போவோம்.

ராஜன்: வீட்டுக்கா ? ஏண்டா, அண்ணிக்கும் குழந் தைகளுக்கும் அசௌகரிய மாயிருக்காது ?

கலையழகன்: அண்ணியாவது அவரைக் காயாவது. மகா மோசத்திலும் மகா மோசம். ஆருக்குடா கல்யாணம் ஆகியிருக்கு ?

ராஜன்: ரொம்ப நல்லதாப் போச்சுப்பா. அப்பாடா. நீயாவது இந்தப் பள்ளத்திலே விழாமெ தப்பிச்சியே, நல்ல கண்ணு—மன்னிச்சுக் கோப்பா—கலையழகா, இந்த பொம் பளைங்க சகவாசமே வேண்டாம்!

கலையழகன்: மகா மோசத்திலும் மகா மோசம் ஏண்டா, எவளாவது டிமிக்கி கொடுத்துட்டாளோ ?

ராஜன்: டிமிக்கியா ? என் வாழ்வையே பாழாக்கி விட்டாளேடா, ஒரு பாதகி ! உம்ம்...எல்லாம் உனக்கு விபரமாகச் சொல்லணும்.

கலையழகன்: சரி சரி, எல்லாம் சாவகாசமாகப் பேச லாம். நட.

**காட்சி: 16 ] [ மஞ்சுளாவின் அறை.**

*[மஞ்சுளா கட்டிலில் படுத்துக் கொண்டு, கடிதம் ஒன்றைப் படித்து விட்டு இடி இடியென்று சிரிக்கிறாள்.]*

ராம்னுத் (வந்து கொண்டே): ஏது, ஏது, மஞ்சு! கட்டிடமே இடிந்து விழுந்துவிடும் போலிருக்கே ?

மஞ்சு: ஆம், கட்டிடம் இடியத்தான் போகிறது. செங்கல் சுண்ணும்பால் கட்டப் பட்டிருக்கும் இந்தக் கட்டிடமல்ல, அந்தப் பிச்சைக்காரச் சிறுக்கியின் வாழ்க் கைக் கட்டிடம் இடிந்து, தகர்ந்து, தரைமட்டமாகப் போகிறது, ராம், இதைப்படி.

*[கடிதத்தைக் கொடுக்கிறாள். ராம்னுத் படிக்கிறான்.]*

ராம்: மஞ்சு, என் மூளையில் உதிக்கும் கற்பனைகளை விட அபாரமாக அல்லவா வேலை செய்கிறது, சந்தர்ப்பம் ! (கடிதத்தை உரக்கப் படிக்கிறான்)

*"நான் சென்னையில் இருக்கிறேன். 'தமிழ் அஞ்சல்' பத்திரிகையின் உதவிஆசிரியனாக வேலை பார்க்கிறேன் ....மனம் நிம்மதியடைய மறுக்கிறது. என் நினைவெல் லாம் எனது செல்வச் சிறு கிளி சண்முகத்தைப் பற்றித் தான்...மஞ்சு, எப்படியாவது என் கண்மணியை என் னிடம் சேர்ப்பித்து விடேன். கட்டாயம் இதைச் செய்.*

*இந்த நன்றியை என்றுமே மறக்க மாட்டேன்...யாருக்கும் இந்தக் கடிதத்தைக் காட்டாதே..........."*

ஹஹ்ஹாஹா...மஞ்சு, ஆனந்தப் பள்ளுபாடு. ஆர்ப்பரித்து ஆடு, உன் மனோரதம் ஈடேறப் போகிறது. உன் கனவு நனவாகப் போகிறது......

மஞ்சு: புரியவில்லையே ராம்.

ராம்: புரிய வைக்கிறேன், கேள்! உடனே தந்தி கொடுத்து விடுகிறேன், ராஜனுக்கு. நாளை நள்ளிரவில் குழந்தையை எடுத்துக்கொண்டு நாமிருவரும் சென்னைக்கு ரயிலேறி விடுவோம்!

மஞ்சு: நாடக சபை ?

ராம்: எக்கேடும் கெட்டுப் போகட்டும். கோட்டையின் அஸ்திவாரமே ஆட்டங் காணட்டும்! நாம் கிளம்பி விட்டால், மறுமலர்ச்சி நாடக மன்றத்தின் மூடுவிழா. ராஜனை நீ அடையச் சந்தர்ப்பம், கணவனை இழந்து தவிக்கும் ரஜனி குழந்தையையும் பறி கொடுத்துத் துடிக்கும் பரவசக் காட்சி...ஆஹ்ஹா......

மஞ்சு: அதெப்படி ?

ராம்: இதைப்படி!

மஞ்சு: இதைத் தான் படித்து விட்டேனே!

ராம்: இல்லை, இன்னும் நன்ருகப்படி. ஒவ்வொரு அட்சரத்தையும் நின்று, நிதானித்துப்படி......... ராஜனின் மனோநிலையைப் பார்த்தாயா மஞ்சு? மனைவி துரோகம் செய்து விட்டாள் என்ற ஆத்திரத்தில், ஆவேசத்தில், அவனுடைய ஜென்ம விரோதியான உன் மீதுகூட அவனுக்கு அன்பும் நம்பிக்கையும் ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பொன்னுன சந்தர்ப்பம் என்றுமே வாய்க்காது. சந்தர்ப்பம் உன்னை இந்திர போகத்திற்கு அழைக்கிறது. சூழ்நிலை உன்னை வாழ்த்துக் கூறி வரவேற்கிறது.

மஞ்சு: ராம்......

ராம்: ஆம். பேசிக் கொண்டிருக்க நேரமில்லை, பிரயாணத்திற்கு ஏற்பாடு செய்தாக வேண்டும்!

மஞ்சு: குழந்தை ?

ராம்: உஷ், சத்தம் போடாதே. அது என் பொறுப்பு. நிஷ்களங்கமானது குழந்தை உள்ளம். அதை உபயோகித்துக் கொள்ள வேண்டியது நமது திட்டம்.........சரி. நான் மறுபடியும் உன்னை இரவு 12 மணிக்குச் சந்திக்கிறேன். புறப்படத் தயாராக இரு.........மஞ்சு, மறந்துவிடாதே! உன் வாழ்வும் தாழ்வும் இன்றிரவு நாம் அமுல் நடத்தப் போகும் திட்டத்தின் வெற்றி தோல்வியில் தான் தங்கியிருக்கிறது.

மஞ்சு: உம்ம்.........யோசிக்கிறேன்...

ராம்: என்ன, யோசிக்கப் போகிறாயா ? இதை மலையென்றெண்ணி மலைக்கிறதா உன் நெஞ்சு ? மஞ்சு, இது ஆடிக்காற்றில் பறக்கும் பஞ்சு!...... தைரியமாயிரு. 12 மணி. மறக்காதே.

காட்சி : 17 ] [ ரஜனியின் படுக்கையறை

*[அதிகாலையில் ரஜனி தூங்கியெழுந்து, சண்முகத்தின் படுக்கை காலியாயிருப்பதைக் கண்டு தேடுகிறாள்.]*

ரஜனி : சண்முகம் !......குழந்தே !....சண்முகம் !... ஓடிவாடா...எங்கண்ணுல்லே...வாடா, ஒளிந்து விளையாடினது போதும்...(கதவிடுக்கிலே. அலமாரிக்குப்பின்னே, கட்டிலுக்குக் கீழே...ஸோபா, நாற்காலி....ஊஹூம். காணோம். கதறுகிறாள்) சண்முகம் ! சண்முகம் !!...

வேதாந்தம் : (ஓடிவந்து) ஏம்மா ? ஏனிப்படி அலறுகிறீங்க, ஆண்டவனே ?

ரஜனி : வேதாந்தம், சண்முகத்தைப் பார்த்தாயா ?

வேதாந்தம் : யாரு ? பேபி ஆண்டவன் அதுக்குள்ளே எங்கே போயிட்டுது ?

ரஜனி: ஆமாப்பா. என் கண்மணியைக் காணோம்பா.

[இதற்குள் எல்லோரும் கூடிவிடுகிறார்கள்.]

கேசவன் (ஓடிவந்துகொண்டே): என்னம்மா. குழந்தை அதுக்குள்ளே எங்கே போயிடப்போறான்? டேய், வீட்டிலே. தோட்டத்துலே எல்லாம் தேடிப் பாருங்கடா.

ரஜனி (அழுது புலம்பி): காணோமே அண்ணா! என் கண்மணியைக் காணோமே. (தலையிலடித்துக்கொண்டு) சண்முகம்! சண்முகம்!!

கேசவன்: வேதாந்தம். மஞ்சுவோட ரூமில் பார்த்தாயா? ஓடு.

வேதாந்தம் (பார்த்துவிட்டு வந்து): வேதாந்தம் அங்கேயும் இல்லியே. ஆண்டவனே. ஒருத்தரும் இல்லே! கதவும் தொறந்து கெடக்குது!

கேசவன்: மஞ்சு இல்லையா?

வேதாந்தம்: இல்லீங்க. ஆண்டவனே.

கேசவன்: 9 மணி வரை தூங்கும் மஞ்சு இல்லை!... போ...ராமநாத்தின் அறையைக் கவனிக்கவேண்டும்!

மேனேஜர்: ராமநாத்தும் இல்லே. ஸார். இது நடந்தது அவுங்கரெண்டு பேரும் செஞ்ச சூழ்ச்சியாத்தான் இருக்கும். உடனே போலீஸுக்கு தகவல் கொடுக்கணும்.

[சண்முகம், சண்முகம் என்று அலறிக்கொண்டே எதிரிலிருந்த சுவரில் மோதி, பிரக்ஞை இழக்கிறாள் ரஜனி. வீடே அமளிதுமளிப்படுகிறது.]

**காட்சி: 18] [கலையழகன் வீடு**

[ராஜனின் வரவை எதிர்பார்த்து ராமநாத்,மஞ்சுளா, சண்முகம் மூவரும் கலையழகனின் வீட்டிலிருக்கிறார்கள்.]

சண்முகம் : மாமா, அம்மாவும் இப்போ இங்கே வந்துடுவாளா ?

ராம்னுத் : இப்போ உங்க அப்பா வருவாரு. அவரு வந்ததும் உங்க அம்மா யாருன்னு காட்டுவாரு (மஞ்சு வைக் கண்டிக்கிறுன்.)

சண்முகம் : அப்பா வருவாரா ? வரட்டும். நன்று மண்டையிலே குட்டுவேன். என்னை உட்டுட்டு ஓடிட் டாரே !

ராம் : ஆமா, சண்முகம், உங்க மஞ்சு மாமி ரொம்ப நல்லவதானே ?

சண்முகம்: (பயத்துடன் மஞ்சுவைப் பார்க்கிறுன்.)

ராம் : சும்மா, சொல்லுடா குழந்தை, பயப்படாம.

சண்முகம் : மாமா...மாமா...மஞ்சு மாமியக் கண்டா ......எனக்குப் பயம்மாருக்கு. ஓடி ஒளிஞ்சிடுவேன். கன்னத்தெப்புடிச்சிக் கிள்ளி வச்சிடுவா.

மஞ்சு : அட, போக்கிரிப்பயலே ! சும்மா விளையாட் டுக்கோசரம் கிள்ளுவேண்டா. நீ எங்க தங்க ராசா இல்லே.

சண்முகம்:ஊம்ம்...அம்மாவெக்கூடத் திட்டுவியே...

மஞ்சு : சும்மாணுச்சுக்கும்டா. உங்க அம்மாவைத் தானேடா சதா என் மனசிலேயே வச்சி நெனச்சிக் கிட்டிருக்கேன்.

*[ராம்னுத்தும் மஞ்சுவும் சிரிக்கிருர்கள்]*

சண்முகம் : மாமா, அதோ பாருங்க மாமா; எங்க அப்பா படம் !

ராம் : அட ! அவ்வளவு ஞாபகம் இருக்கா உனக்கு ! எங்கே, கூப்பிடு.

சண்முகம் : (ராஜனின் படத்தின் முன் போய் நின்று) அப்பா !...அப்பா...

ராஜன் : (வந்துகொண்டே) இதோ வந்துட்டேண்டா என் ராஜா, சண்முகம் ! (வாரியெடுத்து மாறி மாறி முத்துகிறுன். சற்று நேரத்திற்குப் பின் மகனைக் கீழே விட்டுவிட்டு. மஞ்சுவையும், ராம்னுத்தையும் பார்த்து) ஓ ! உங்கள் இருவரையும் மறந்தே போயிட்டேனே, என் இன்பக்கிளியைக் கண்ட ஆனந்தத்தில் !

மஞ்சு : இனி நாங்கள் மறக்கப்படவேண்டியவர் கள்தானே ? (சிரிப்பு)

ராஜன் : அதெப்படி முடியும். மஞ்சு ? நீ செய்த உதவியை ஒருக்காலும் மறக்கமாட்டேன் !

சண்முகம் : அப்பா. அம்மா எப்பப்பா வருவா ?

ராஜன்: (மற்றவர்களைப் பார்த்து பெருமூச்சுவிட்டுக் கொண்டே) உம்ம்...சீக்கிரம் வந்துடுவாடா, கண்ணு.

கலையழகன் : (மஞ்சுவையும், ராம்னுத்தையும் குழந்தையும் பார்த்துவிட்டு) மகாமோசம் மாகமோசத்தில் மகா மோசம். . ஏண்டா, அண்ணியும் குழந்தையும் வர்ராங் கண்ணு ஒருவார்த்தைகூட எங்கிட்டே சொல்லலியேடா, பழிகாரா. மகா மோசத்திலும் மகா மோசம். உன்னை இன்னிக்கு ஆபீஸுக்கு வரவேண்டாம்னு சொல்லி ஸ்டேஷனுக்கு அனுப்பிச் சிருப்பேனில்லே !

ராஜன் : (தயங்கி) கலையழகா, வந்து...மஞ்சு......

கலையழகன் : மஞ்சுவா ? மகா மோசத் (சட்டென்று விரலைக்கடித்துக்கொண்டு) மன்னிக்கணும். அது எனக்கு வழக்கமான ஒரு வார்த்தை. மஞ்சு ! ரொம்ப அழகான பெயராச்சே. எல்லாம் நீ 'பெர்பெக்டா'த்தாண்டா பார்த்து 'ஸெலக்ட்' பண்ணியிருக்கே......அடே, தம்பி.

சண்முகம் : எம் பேரு ஒண்ணும் தம்பியில்லே. எம் பேரு சண்முகம்.

கலையழகன் : சண்முகமா ?

ராஜன் : ஆமாண்டா. நாடகக் கலைக்கே அர்ப்பணம் செய்யப்பட்ட ஒரு குடும்பத்திலே பிறந்தவனுக்கு

முத்தமிழ் மன்னன் சண்முகத்தின் பெயரை வைப்பதை விட வேறென்ன பொருத்தம் இருக்க முடியும்?

கலையழகன் : சபாஷ்! இப்படி எந்தெந்தத் துறையிலே நாம் அபிமானம் வைத்திருக்கிறோமோ அந்தந்தத் துறையில் சிறந்து விளங்குபவர்களுடைய பெயரைக் கௌரவிப்பதுதான் திராவிட மக்களின் பண்பு. வாழ்க நமது சண்முகம்!......உம்ம், சண்முகம், உங்கொப்பன் உன்னை விட்டுவிட்டு ஓடி வந்தானில்லே, நான் தான் அவனைப் பிடிச்சி இங்கேயே வச்சிக்கிட்டேன்...... டேய், அஜீர்ணம்!

[எல்லோரும் சிரிக்கிறார்கள்]

ராம்நாத் : என்ன ஸார் அது! அஜீர்ணமா?

கலையழகன் : ஆமா ஐயா. அவன்தான் எங்கள் சமையற்காரன். மகா மோசத்திலும் மகாமோசம், பெயரே அஜீர்ணம்னு சாப்பாடு எப்படியிருக்குமினு சொல்ல வேண்டாமே? மகா மோசத்திலும் மகா மோசம்.

அஜீர்ணம் : (தேனீர் கொண்டுவந்து வைத்துவிட்டு) என்னங்க எசமான், சாப்பிடும்போது மட்டும் 'உன் சமையல்தாண்டா பெரமாதம்'னு சொல்லி, நாக்கச் சப்பிச் சப்பிச் சாப்புடுறீங்க. வெளி ஆளுங்க கிட்டே வச்சி மகா மோசம்கிறீங்களே?

ராஜன் : அட நீ ஒருத்தன். அவன் உன்னைச் சொல்லலேடா.

அஜீர்ணம் : ஓ! அதா! வழக்கமான பேச்சுங்களா?

ராஜன் : ஆமா, ஆமா!

கலையழகன் : அஜீர்ணம். இன்னிக்கிச் சாப்பாடு பிரமாதமாயிருக்கணும். நம்ம ராஜனுடைய கல்யாண விருந்துடா.........சண்முகம். இங்கே வா.........உம்ம். வரமாட்டே? மகா மோசத்திலும் மகா மோசம்!

சண்முகம் : நீதான் மகா மகா மோசம்.

[எல்லோரும் சிரிக்கிறார்கள்]

காட்சி 19 ] [ ரஜனியின் படுக்கையறை

[ரஜனி கட்டிலில் படுத்திருக்கிருள். அழுதழுது கண்கள் கோவைப் பழமாகிவிட்டன. மார்பிலே சண் முகத்தின் படம் கிடந்து மார்போடு விம்மிவிம்மித் தணி கிறது. பக்கத்து மேஜைமேல் ராஜனின் போட்டோ மாலை சூட்டப்பட்டு வைக்கப் பட்டிருக்கிறது. வாரி முடிக்கப்படாத அவள் கூந்தல் கட்டவிழ்ந்து விடப் பட்ட நெல்லிக்காய் மூட்டைபோல் சிதறிக்கிடக்கிறது. வாய் ஓயாமல் எதையோ முணு முணுத்துக் கொண்டே இருக்கிறது.]

ரஜனி : (ராஜனின் படத்தின் பக்கம் தலையைத் திருப்பி) ஸ்வாமி, எங்குசென்றீர்கள், என்ன செய்கிறீர்கள் என்ற தகவல் கூடத்தெரியாமல் பரிதவிக்கும்படி விட்டுச் சென்று விட்டீர்களே இந்தப் பாவியை, நான் என்ன பிழை செய்தேன். மன்னித்திருக்கக் கூடாதா? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே. தங்களைப் பிரித்ததும் அந்தப் பிசாசுகள் மஞ்சும் ராமுைத்தும்தானே என்னவோ தெரிய வில்லையே........உங்கள் மதிவதனம் காட்டும் மாயக் கண்ணுடி போல், எனக்கு மனச்சாந்தியளிக்கும் மருந்தே போல், இருந்த என் செல்வக் களஞ்சியம் சண்முகத்தை யும்... ......ஐயோ! (கதறுகிருள். வாசலில் வந்து நின்று, கண்ணீர் மல்க அவளைக் கவனித்திருக்கிருன் கேசவன்.)

வாருங்கள் பிரபோ, என் சண்முகத்தையும் அழைத் துக்கொண்டு வாருங்கள் ஸ்வாமி. பிச்சை எடுத்துத் திரி யும் பொழுதாவது என்மனதிலே ஏதோ ஒரு சாந்தி தவழத் தான்செய்தது. இச்சை மஞளராகிய தங்களையும், பச்சைக் கிளியாகிய என் செல்வனையும் பறிகொடுத்துவிட்டு, நச் சுப்பொய் கையில் தத்தளிக்கும் என் உள்ளத்திலே பயங் கரப்பூதங்கள் ஊழிக் கூத்தாடுவதைக் காண வாருங்கள், ஸ்வாமி......சண்முகம். அப்பாவையும் அழைத்துக் கொண்டு ஓடிவாடா, ராஜா! (கதறுகிருள்.)

கேசவன் : (பொறுக்க முடியாமல்) ரஜனி, ஏம்மா வீணில் அலட்டிக் கொள்கிருய்? போலீஸில் தகுந்த ஏற் பாடுகள் செய்தாயிற்று. எப்படியும்கூடிய சீக்கிரம் உன்

சண்முகமும், என் ராஜனும் கிடைத்து விடுவார்கள். இப்படியே அழுது கொண்டிருந்தால்.........

மேனேஜர் : (பரபரப்புடன்) மிஸ்டர் கேசவன், ரஜனியம்மா... வந்ததிலே நம்ம கவலையெல்லாம் நீங்கிப் போச்சு.

ரஜனி—கேசவன் : என்ன மேனேசர் ஸார் ?

மேனேஜர் : சண்முகம், வந்ததுல்ல — கிடைத்து விட்டான் !

ரஜனி , கேசவன் :—போலீஸ¬லே கண்டு பிடிச் சுட்டாங்களா !

ரஜனி : எங்கே என் சண்முகம் ! எங்கே என் சண்முகம் ! மேனேஜர் ஸார், சீக்கிரம் காட்டுங்களேன் என் செல்வனை...........அண்ணு, வாருங்களேன் ஓடுவோம். போலீஸ் ஸ்டேஷனுக்கு......

மேனேஜர் : (ஒரு பத்திரிகையைக் கொடுத்துக் கொண்டே) இதோபாருங்கள், நமது மாஸ்டர் சண்முகத்தை !

[கேசவனும்,ரஜனியும் பரபரப்புடன் பத்திரிகையைப் பார்க்கிருர்கள். அதிலே சண்முகத்தின் புகைப்படம் புன்சிரிப்போடு, தத்ரூபமாக—அச்சிடப்பட்டு அதற்கு மேலே "அழகுப் போட்டியில் முதல் பரிசு பெறும் மாஸ்டர் சண்முகம் !" என்ற தலைப்பும், கீழே "நான்கு வயது நிறைந்த மாஸ்டர் சண்முகம் சென்னை கார்ப்பரேஷனல் நடத்தப்பட்ட குழந்தைகள் அழகுப் போட்டியில் முதல்வனகத் தேர்ந்தெடுக்கப் பட்டு தங்கப் பதக்கம் பரிசளிக்கப் பட்டான். மாஸ்டர் சண்முகம், சென்னையிலிருந்து வெளிவரும் 'தமிழ் அஞ்சல்' என்ற பத்திரிகையில் உதவி ஆசிரியரும் பிரபல நடிகருமான திரு. ராஜன் அவர்களின் புதல்வராவார்."—என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அடேயப்பா, அந்தப் படத்திற்கு ரஜனி கொடுத்த முத்தங்கள்! ....பத்திரிகையே கசங்கிப் போய் விட்டது...]

ரஜனி : அண்ணு !

கேசவன் : தாமதிப்பேனு! உடனே புறப்பட வேண்டியதுதான், ரஜனி!

காட்சி: 20 ] [ கலையழகன் வீடு

கலையழகன் : மகாமோசத்திலும் மகாமோசம். எம்பா, என் சண்முகத்தை நான் உலகிற்கு அறிமுகப் படுத்தினுல் அதில் உனக்கென்னப்பா நஷ்டம்? மகா மோசத்.........

ராஜன் : என்ன இருந்தாலும் என்னைக் கேளாமல் நீ சண்முகத்தை அழகுப் போட்டிக்கு அழைத்துச் சென்றிருக்கக்கூடாது. இதனுல் என்னென்ன விபரீதங்கள் விளையுமோ ? கொஞ்சகாலம் நிம்மதியாயிருந்தேன். அதிலும் நெருப்பு வைத்து விட்டாயே !

கலையழகன் : ராஜன்! நீ எதையோ என்னிடம் ஒளிக்கிருய். மகாமோசத்திலும் மகாமோசம். என்னிடம் கூடவா இரும்புத்திரை?

ராஜன் : கலையழகா, நீ என்னை மன்னிக்கத்தான் வேண்டும். உன்னிடம் சொல்லாமல் ஒளித்து வைத்ததால் தான் இத்தனை விபரீதங்கள் நேர்ந்தன. நீ நினைப்பதுபோல் மஞ்சு, என் மனைவியல்ல......

கலையழகன் : என்ன ! என்ன !! என்ன !!!

ராஜன் : சண்முகத்தின் தாயின் பெயர்......

சண்முகம் : (விளையாட்டை நிறுத்திவிட்டு) அம்மா பெயர் ரஜனி !

கலையழகன் : ரஜனியா ! ............எங்கோ கேட்ட பெயராருக்கே.........

ராஜன் : ஆமாம். அவள் பெயர் ரஜனிதான்! எங்கிருந்தோ வந்தாள். எங்கள் குடும்பத்தையே முற்றுகையிட்டாள். அவளுடைய அன்புப் படையெடுப்புக்கு— பணிவுப்பாசறைக்கு எங்கள் குடும்பமே சரணுகதியடைந்தது. அப்புறம். தந்தையின் 'பிரிவு; சகோதரச் சண்டை

சமாதானம், எங்கள் திருமணம், சண்முகத்தின் தோற்றம்— எல்லாம் உனக்கு விபரமாகச் சொல்லவேண்டியவை. ஆனால் எனது திடீர் சென்னை விஜயத்திற்குக் காரணம் அந்த நாசகாரியின் சாகசச் செயல்! —கேசவனின் சகோ தரத் துரோகம்!

கலையழகன் : இன்னும் மூடுமந்திரமாகவே பேசு கிறாயே. ராஜன் கொஞ்சம் விளக்கம்........

ராஜன் : விரியும் நண்பா. சாவகாசமாகச் சொல்கி றேன். ஆமாம். நீ இன்று ஹிந்தி எதிர்ப்புக் கூட்டத் துக்குத் தலைமை வகிக்கப் போகிறதாகச் சொன்னாயே?

கலையழகன் : ஏன், நீயும்தான் வருகிறாய்!

ராஜன் : இல்லை மஞ்சுவையும், ராம்ஜூத்தையும் அழைத்துக் கொண்டு நீ போய் வா நானும் சண்முகமும் வீட்டிலிருக்கிறோம்.

கலையழகன் : சண்முகத்தைப் பற்றிப்பேச நீயார்? அவன் என் ஆள். என்னோடுதான் வருவான்.

சண்முகம் : எங்கே, மாமா?

கலையழகன் : கல்யாண வீட்டுக்கு டம், டம், பீப்பீ எல்லாம் வரும். போவோமா?

சண்முகம் : (சிரித்துக் கொண்டே) அப்பா, நீ?

ராஜன் : அப்பாவுக்கு தலையை வலிக்கிறதுடா, ராஜா. நீ மாமா கூட போயிட்டு வா.

சண்முகம் : சரிப்பா.

*[உள்ளே இருந்த மஞுசுவையும், ராம்ஜூத்தையும், சண்முகத்தையும் அழைத்துக் கொண்டு கலையழகன் கூட்டத்திற்குப் போனபின் ராஜன் நீண்ட நேரம் மௌனமாக சிந்தனையில் மூழ்கியிருக்கிறான். அஜீர்ணம் வெளியே யிருந்து வருகிறான்.]*

அஜீர்ணம் : எசமான், ஆரோ ஒரு அம்மா வந்துருக் குதுங்க. ஒங்களெப் பாக்கனுமாம். வரச் சொல்லவா?

ராஜன் : யாருடா? அம்மாவா? பேரென்னடா சொன்னுங்க?

அஜீர்ணம் : என்னமோ...ரசனியோ...

ராஜன் : (திடுக்கிட்டு) ரஜனியா?.........அடப்பாவி, வந்து விட்டாளே! ரஜனி!......ரஜனி!

அஜீர்ணம் : வாசல்லே நிக்கிருங்க எசமான். நீங்க கூப்புடரது காது கேக்காது. போயி வரச் சொல்லட்டுங்களா?

ராஜன் : சரி...இல்லே....அஜீர்ணம்...வந்து...நானே கூப்புடுறேன்...உம்ம்...இல்லே, நீயே வரச்சொல்லு.

*[அஜீர்ணம் சென்றதும் ராஜன் எழுந்து நின்று, வாசல் பக்கம் முதுகைத் திருப்பிக் கொண்டு நிற்கிருன். அவனைக் கண்ணுரக் கண்ட ரஜனி உணர்ச்சிப் பெருக்கால் கண்ணீரைச் சிந்திக் கொண்டே வந்து காலடியிலே முழங்காலிட்டு நின்று, அவன் கால்களைக் கையால் கட்டிப் பிடித்துக் கொண்டு முகத்தை அவன் வேட்டியில் வைத்துக் கொண்டு விம்முகிருள். சற்று நேரம் ஸ்தம்பித்து நின்ற ராஜன் உதறித்தள்ளுகிருன்.]*

ரஜனி : பிரபோ!

ராஜன் : (அலட்சியமாக) ஹூம். பெரிய பிரபு என்று நினைத்து மறுபடியும் பிச்சை கேட்க வந்து விட்டாயோ?

ரஜனி : நான் என்றுமே பிச்சைக்காரிதானே, ஸ்வாமி. (கண்ணீரைத் துடைத்துக் கொண்டே) அன்று வயிற்றிற்குப் பிச்சை கேட்டுவந்தேன். இன்று வாழ்விற்கு மாங்கல்யப் பிச்சை கேட்டு வந்திருக்கிறேன்.

ராஜன் : எவ்வளவு துணிச்சல் உனக்கு இங்கே வர!

ரஜனி : தன் கணவனிடமும் குழந்தையிடமும் வருவதற்கு ஒரு பெண்ணுக்கு என்ன தைரியம் வேண்டியிருக்கு?

ராஜன் : கணவன் ! குழந்தை ! அந்தப் புனிதமான வார்த்தைகளை உச்சரிக்கக்கூட உனக்கு யோக்யதை இருக்கிறதா ?

ரஜனி : தாங்களா இதைக் கேட்கிறீர்கள் ! தங்கள் ரஜனியைத் தாங்கள் அறியமாட்டீர்களா, ஸ்வாமி ?

ராஜன் : ஓ! நன்கு அறிவேன். தம்பிக்கு தர்மபத்தினி, அண்ணனுக்கு ஆசை நாயகி ! என்பதை வெகு நன்ருக அறிவேன். விபச்சாரி !

ரஜனி : (துடி துடித்து) அடப்பாழும் தெய்வமே, என்னை என்றைக்கும் போல் பிச்சைக் காரியாகவே விட்டிருக்க கூடாதா ? வாழ்வின் வனப்பைக் காட்டி, தாழ்வின் சவக்குழியில் தள்ளி விட்டாயே !

ராஜன் : சீ நிறுத்தடி, நீலி. திருட்டுத்தனம் தெரிய வந்து விட்டால் தெய்வத்தின் மேல் குற்றச் சாட்டோ ? உம்ம்...போ, வெளியே,

ரஜனி : நாதா !

ராஜன் : கேட்காதா. போ என்ருல் போய் விட வேண்டும். இது என் கட்டளை.

ரஜனி : ஸ்வாமி, தன்னுடன் இரண்டறக் கலந்து விட்ட மணத்தை மலர் போ என்று விரட்டுகிறதா? தஞ்சமடைந்த மதியை வான் தட்டிக் கழிக்கிறதா ? தங்களைப் பிரிந்து இந்த ஏழையை எங்கே போகச் சொல்கிறீர்கள், பிரபோ ?

ராஜன் : அதிகப் பிரசங்கி. பிச்சைக்காரி மாத்திரமல்ல பலே பேச்சுக்காரி, கை வீச்சுக்காரி என்று காட்டுகிருயோ குச்சுக்காரி! போ வெளியே.

ரஜனி : எங்கு செல்வேன் ? (கதறி யழுகிருள்.)

ராஜன் : நீ இங்கு வந்ததே தப்பு...

ரஜனி : ...தேனை நாடி வண்டு வருவது தப்பாக இருந்தால், கன்றைத் தேடி பசு வருவது தப்பாக இருந்தால்...

ராஜன்: நாசக்காரி, வேதாந்தம் போதும். வெளியேறு வீட்டை விட்டு.

ரஜனி: விரட்டுகிறீர்களே, ஸ்வாமி. எங்கு செல்வேன் ?

ராஜன் : வேறெங்கு செல்வாய் ? பிச்சை எடுக்க ! எங்கேயாவது இரண்டு ஏமாந்த சோணகிரிகள் இருக்கிருர்களா என்று தேட ! ஒற்றுமையாக வாழும் சகோதரர்களுக்கு உலைவைக்க ! தம்பிக்குத் தர்மபத்தினியாகவும் அண்ணனுக்கு ஆசை நாயகியாகவும் நடிக்க !

ரஜனி: தாங்கள் உண்மை விளங்காமல்......

ராஜன்: ......உழலுகிறேன் என்பாய். ஊதாரி, வேறு என்ன சொல்ல முடியும் உன்னுல் ?

ரஜனி : பேசவாவது சந்தர்ப்பம் கொடுக்கக் கூடாதா ? விஷயம் தெரிந்தால்......

ராஜன்: விஷம் குடித்துச் செத்து விடுகிறேன் என்கிருயா ?

ரஜனி: அதுவும் தங்கள் கையால் தரப்படுமானுல் அமுதென உண்பேன்.

ராஜன்: ரஜனி. இனி நமக்குள் ஒட்டுமில்லை. உறவுமில்லை. என் வாழ்வில் குறுக்கிடாதே,

ரஜனி: இதைத் தாங்கள் இதய பூர்வமாகச் சொல்கிறீர்களா. ஸ்வாமி ?

ராஜன்: உம்ம்......(தயங்கி) ஆ...ம்......ஆம்......நீ போகத்தான் வேண்டும்.

ரஜனி: (கரைபுரண்டோடும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே) நல்லது, என் சண்முகத்தைத் தந்து விடுங்கள். நான் போகிறேன்.

ராஜன்: (திடுக்கிட்டு) என்ன வேண்டும் ?

ரஜனி: என்செல்வன்!

ராஜன்: என்ன துணிச்சலடி உனக்கு ! இன்னொரு தடவை அப்படிச் சொல்லாதே, என் கை......

ரஜனி: அதைத்தான் நான் ஆசையோடு வரவேற்கிறேனே. உயிருக்குப் பயந்து தன்சொந்தக் குழந்தையை தன் செல்வக் குழந்தை என்று சொல்லத் தயங்கும் தாயும் இருக்கிருளா உலகிலே ?

ராஜன்: சொந்தக் குழந்தை—தாய் ! அந்த உரிமை இன்னும் இருக்கிறதா உனக்கு ?

ரஜனி: அதை மறுக்கும் உரிமை அகில உலகத்துக்கும் ஏது ? சித்திரவதைக்கு ஆளாகி சிறுகச் சிறுக இந்த உயிர் துடித்துத் துடித்துப் பிரிவதானுலும் சரி. அப்படிப் பிரியும் ஒவ்வொரு மூச்சும் 'சண்முகம் சண்முகம்' என்ற ஸ்மரணேயோடுதான் பிரியும், ஸ்வாமி. உருட்டல் கண்டு ஒடுங்கி விடுவது. சீற்றம் கண்டு தோற்று ஓடுவது. அதட்டினுல் அடங்கி விடுவது அல்ல தாயின் தன்னலமற்ற அன்பு ! உலகமே ஒன்று திரண்டு எதிர்த்தாலும் ஒரு சிறிதும் குன்ருது. குறையாது. உம்ம்.........அதிகம் பேசி விட்டேன். மன்னியுங்கள். எங்கே என் சண்முகம்?

ராஜன்; (கட்டுப்பட மறுத்தோடும் கண்ணீரை ஓட விட்டு) முடியாது, முடியாது. சண்முகம் என் மகன். ஜஞர்த்தனம் பிள்ளையின் பேரன். கலாதேவியின் திருவடிகளிலே என் குடும்பம் ஏற்றி வைக்க விருக்கும் குத்து விளக்கு. மறுமலர்ச்சி நாடகமன்றத்தின் வருங்கால முதலாளி. இதற்கெல்லாம் உரிய அந்தஸ்துடன்தான் அவன் வளர்க்கப்பட வேண்டும்; ஒரு நாடோடிப் பிச்சைக் காரியின் வயிற்றில் பிறந்தவன் என்ற உண்மை அவனுக்குத் தெரியவே கூடாது. நான் உயிரோடிருக்கும் வரை எக் காரணத்தாலும் அதை அவன் அறிய விடமாட்டேன். ...குபேர சம்பத்தில் கும்மாள மடிக்கவேண்டியவன் தன் தாய் ஒரு நடுத் தெரு நாராயணி என்று தெரிந்தால் எப்படி சகிப்பான்? நண்பர்களின் நடுவிலே எப்படி தலே நிமிர்ந்து நிற்பான்?

ரஜனி: (விம்மலே அடக்கி, சிறிது நேரம் யோசித்து வெற்றுச் சிரிப்புடன்) நல்லது. நான்தான் தரித்திரத்தின்

அபிமான புத்திரி. என் செல்வமாவது நன்ருக வாழட்டும்! ...அவனுடைய நலத்திற்காக என் ஆசையை யெல்லாம் நான் தியாகம் செய்கிறேன். நிச்சயமாக—உறுதியுடன் தியாகம் செய்கிறேன்: (கண்களைத் துடைத்து விட்டு) உம்ம்...சரி எங்கிருக்கிருன், என் இதயக்கனி? ஒரு தடவைப் பார்த்து உச்சி மோந்து விட்டுப் போகிறேன்.

ராஜன்: (தொண்டைகர கரக்க) உம்ம்...வெளியே சென்றிருக்கிருன். சற்று நேரத்தில் வந்து விடுவான். (மீண்டும் யோசித்து) என்ன சொன்னுய்! அவனைப் பார்க்க வேண்டும் என்ரு சொன்னுய்?

ஐயையோ! அதுவும் கூடாது...கூடவே கூடாது

ரஜனி: என்ன! நான் பார்க்கவும் கூடாதா? ஸ்வாமி!......(கதறி, மயங்கி, சாய்கிருள் தரையிலே.)

ராஜன்: (தண்ணீர் தெளித்து, தலையை வருடி, மூர்ச்சை தெளிவித்துக்கொண்டே) ரஜனி!....ரஜனி......

ரஜனி: (கண்களை மெல்லத்திறந்து, ராஜனின் முகத்தைப் பார்த்து) ஸ்வாமி...

ராஜன்: எல்லாம் அவன் நன்மைக்காகத்தான் சொல்கிறேன்! சற்று முன்தானே சொன்னுய் அவன் க்ஷேமத்துக்காக உன் ஆசையை யெல்லாம் தியாகம் செய்வதாக.

ரஜனி: செய்யத்தான் போகிறேன், ஸ்வாமி. ஆனல் ...பெற்ற மனம் துடிக்கிறதே. பிரபோ! சற்று தொலைவிலிருந்தாவது உற்றுப் பார்த்துவிட்டு ஓடிவிடுகிறேன்!

ராஜன்: முடியாது. உன்னைப் பார்த்துவிட்டால் அப்புறம் உன்னை விடவேமாட்டான்! அல்லும்பகலும் அம்மா 'அம்மா. அம்மா' என்றே அரற்றுகிருன். நீ அவனைப் பார்க்கக்கூடாது.

ரஜனி: ஸ்வாமி! (கதறுகிருள்.)

ராஜன்: ஆம். நீ இந்த ஆசையையும் அடக்கிக் கொள்ளத்தான் வேண்டும்.

ரஜனி : துடிக்கும் உள்ளம், அடக்கிக்கொள்ள முடியவில்லை. ஐயோ. வெடித்துவிடக்கூடாதா இந்த வேதனையைத் தாங்குவதைவிட ! கருணை காட்டுங்கள். ஸ்வாமி. அவன் பிடிவாதம் செய்தாலும் எப்படியும் ஏமாற்றிவிட்டு ஓடிப்போய்விடுகிறேன். ஒரே ஒரு தடவை என் இதயக் கனியைக்காட்டிவிடுங்கள். அப்புறம் நிரந்தரமாகவே இந்த உலகிலிருந்து மறைந்து விடுகிறேன்.

ராஜன் : ரஜனி !......

ரஜனி : ஆம், ஸ்வாமி. நான் சாவை நேசிக்கிறேன். ஆனால் அதற்கு முன் ஒருதடவையாவது என் உதிரத்தின் உருவகத்தைக் கண்ணால் காணாவிட்டால் சாவும் எனக்கு நிம்மதி தராது.

ராஜன் : (கவலையுடன் சிந்தித்து) தர்மசங்கடம் ! உன்னை அவன் பார்த்துவிட்டால் அடையாளம் கண்டு கொண்டுவிடுவான். அப்புறம் உன்னைவிட்டுப் பிரியவே மாட்டான். என் திட்டமெல்லாம் குட்டிச் சுவராகிவிடும். (சிறிது கடுமையாக) முடியாது. உன் ஆசையைப் பூர்த்தி செய்ய முடியாமைக்கு வருந்துகிறேன். உன் ஆசை அபாயகரமானது. (கடிகாரத்தைப் பார்த்துவிட்டு) ஹா ! மணி எட்டாகிவிட்டதே. போ. போ. சீக்கிரம் போய்விடு. அவர்கள் வரும் நேரமாகிவிட்டது. உன்னை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். என் எண்ணங்களில் மண்ணைப் போட்டுவிடாதே. கூடுமானால் என்னை மணந்ததையும், சண்முகத்தைப் பெற்றெடுத்ததையும் மறந்து விடு.

ரஜனி : ஸ்வாமி ! (காலில்விழுந்து கதறுகிறாள்.)

ராஜன் : போய்விடு, ரஜனி. போய்விடு. உம்...... சீக்கிரம்.

*[மீண்டும் காலைத் தொட்டுக் கண்களில் ஒத்திக்கொண்டு, தள்ளாடித் தள்ளாடிப் போகிறாள். கண்ணீர் மறைக்கும்வரை அவள் போவதையே பார்த்துக்கொண்டு வாசலில் நிற்கிறான் ராஜன்......வீட்டைவிட்டு சிறிதுதூரம் போன பின் திரும்பிப் பார்க்கிறாள். ஒரு கார் வந்து வாசலில் நிற்கிறது. அதிலிருந்து*

அவளுடைய இதயத்துண்டு — சண்முகம் — புள்ளிமான்போல துள்ளிக் குதித்தோடி வீட்டிற்குள் செல்கிறன். விரல்களைத் தலையில் சொடுக்கி திருஷ்டி கழிக்கிருள். இதையெல்லாம் வாசலில் நின்றபடி கவனித்த ராஜன் அடக்க முடியாத சோகத்தால் விம்மிக்கொண்டே உள்ளே சென்றுவிடுகிறன்...அதுவரை ஹோட்டலுக்குள் இருந்துகொண்டிருந்த கேசவன் ரஜனியைக் கண்டு வெளியே வருகிறன். கலங்கித் தேங்கி நின்ற கண்ணீரே அவள் அவனுக்குச் சொன்ன சேதி !]

**காட்சி : 21 ] [ கலையழகன் வீடு**

[உடையணிந்து பத்திரிகாலயத்திற்குப் போகத் தயாராகி விட்ட கலையழகன், இன்னும் தயாராகாமல் சோர்ந்து உட்கார்ந்திருந்திருக்கும் ராஜனை விசாரிக்கிறன்]

கலையழகன் : என்ன, ராஜன், இன்னும் தயாராகலியா ? மகா மோசத்திலும் மோசம்.

ராஜன் : உடம்பெல்லாம் அசதியாயிருக்கப்பா !

கலையழகன் : உடம்பா, உள்ளமா ?

ராஜன் : இரண்டுந்தான்.

கலைழயகன் : அப்படியானல் இன்று ஓய்வு எடுத்துக்கோ.

ராஜன் : அப்படித்தான் உத்தேசம். மஞ்சுவும் ராம்னுத்தும் இன்று மாம்பலம் போகிருர்கள். நானும் சண்முகமும் எப்படியோ நேரத்தைப் போக்குகிறேம்.

கலையழகன் : சண்முகம் பக்கத்திலே இருக்கப்போ நேரம் போறதெப்பற்றி ஏம்பா கவலை ? நல்லா ஓய்வெடுத்துக்கோ: மகா மோசத்...அப்போ, நான் வர்ரேன்...... திருவாளர் சண்முகம் அவர்களே, நான் சென்று வரட்டுமா ?

சண்முகம் : வணக்கம் !

[கலையழகன் போன சிறிது நேரத்துக்கெல்லாம், மஞ்சுவும், ராம்னுத்தும் மாம்பலத்துக்குக் கிளம்பிவிட்டார்கள். சண்முகம் விளையாடிக்கொண்டிருக்க, ராஜன் மீண்டும் சிந்திக்கத் தொடங்கிவிட்டான்.]

அஜீர்ணம் : எசமான், ஒரு அம்மா வந்திருக்காங்க.

ராஜன் : (அதிர்ச்சியடைந்து) அடப்பாவி ! மறுபடியும் வந்துவிட்டாளா ?

அஜீர்ணம் : அந்தம்மா இல்லீங்க. இது யாரோ ஒரு கிழடு.

ராஜன் : என்ன, கிழவியா ? பிச்சைக்காரியாடா

அஜீர்ணம் : இல்லீங்க. உங்களைப் பாக்கணுமாம்.

சண்முகம் : யாருப்பா, அம்மாவா ? (வாசல் பக்கம் போகுன்.)

ராஜன் : அடப்பாவமே, குழந்தை தாயைத் தேடி எப்படித் தவிக்கிறது...டேய், அஜீர்ணம், அந்தக் கிழவியை வரச்சொல்லு.

அஜீர்ணம் : அதோ. சின்ன எசமானே கூட்டிக் கிட்டு வந்துட்டாங்களே.

*[கிழவியின் கையைப் பிடித்துக்கொண்டு வருகிருன் சண்முகம்.]*

சண்முகம் : ஒம் பேரென்ன, பாட்டி ?

கிழவி : என்னை குப்பி பாட்டின்னு சொல்லுவாங்க

சண்முகம் : (குதித்துக் கொண்டே) குப்பிப்பாட்டி குப்பி பாட்டி !

ராஜன் : தாங்கள் யாரம்மா !

கிழவி : (குழந்தையின் பக்கம் திரும்பி) நான்...... நான்......

ராஜன் : (புரிந்துகொண்டு) ஓ, நீங்களா? தெரிகிறது. எங்க குப்பி மாமிதானே ? வாங்க. வாங்க!

*[கிழவி வேடத்தில் வந்த ரஜனி தன் அருமைச் செல்வணைவாரியெடுத்து மார்போடணைத்து, முத்தினுள். ஆனந்தக் கண்ணீருகுத்தாள். அந்த அன்பு வெள்*

*ளத்திலே திக்கு முக்காடினன் சிறுவன் சண்முகம். ராஜனின்கண்களும் கரை உடைந்த குளங்களாயின.]*

சண்முகம் : நீங்க அம்மாவைப் பாத்திருக்கீங்களா, பாட்டி ?

ரஜனி : (தொண்டை கரகரக்க) பாத்திருக்கேண்டா கண்ணு. உங்கம்மா உன்னைப் பாக்கணும்னு துடிக்கிரு. மொதல்லே என்னைப் போயி பாத்துட்டு வரச் சொன்ன‌ு. அதுதான் வந்தேன்.

சண்முகம் : அப்போ, நீ போயி எங்க அம்மாவை வரச் சொல்லுவியா ?

ரஜனி : சரிடா. ராஜாஉங்கம்மா வந்துட்டா என்னை மறக்கமாட்டியே ?

சண்முகம் : ஊஹூம். ஒன்னை மறக்கமாட்டேன். நீ தங்கப் பாட்டியில்லே. ஏம்பா ?

ராஜன் : (ஏதோ யோசனையுடன்) உம்ம்......... ஆமாண்டா.

சண்முகம் : (அதிருப்தியுடன்) என்னப்பா ஆமாண்டா.........தங்கப் பாட்டியா இல்லியா சொல்லுப்பா ?

ராஜன் : சொன்னேன் சண்முகம். தங்கப்பாட்டிதான்.

*[ரஜனி மீண்டும் குழந்தையை வாரியெடுத்து முத்துகிருள். ராஜன் செய்வதறியாமல் திகைத்து நின்ருன்.]*

ரஜனி : சண்முகம், கண்ணு போயிட்டு வரட்டுமாடா ?

சண்முகம் : ஊஹூம். நீ எங்கேயும்போகக்கூடாது. அப்பா, பாருப்பா பாட்டியே போகவேண்டாம்னு சொல்லுப்பா.

ராஜன் : (மௌனம்—கண்களில் கண்ணீர்.)

சண்முகம் : (ராஜனைக்கெஞ்சி) அப்பா, சொல்லுப்பா......பாட்டி போகக்கூடாதுண்ணு சொல்லுப்பா...

ரஜனி : பிடிவாதம் செய்யக்கூடாதுடா, ராஜா. நீ சமத்துல்லே. நான் போனா தானேடா உங்கம்மா வருவா?

சண்முகம் : அம்மாவை அப்பா போயி கூட்டிட்டு வருவா. நீ போக வேண்டாம்.........பாட்டி, நீயே அம்மாவா யிருக்கியா ?

*[ராஜனும், ரஜனியும் ஏககாலத்தில் ஒருவரை யொருவர் பார்க்கிறார்கள். பொல பொலவென்று இரு ஜோடிக் கண்களும் மழை பொழிகின்றன.]*

ரஜனி : சரிடா. ராஜா அப்போ நான் எங்கேயும் போகாமே ஒங்க வூட்டிலேயே இருக்கட்டா ?

சண்முகம் : ஓ ! சரி பாட்டி !......சரி பாட்டி...

ரஜனி : அப்பு டின்னா நான் ஓடிப்போயி என் மகளேயும் கூட்டிக் கொண்டு வந்துடட்டுமா ?

சண்முகம் : பாட்டி, ஒனக்குப் பொண்ணு இருக்கா?

ரஜனி : ஆமா கண்ணு. அவளும் அம்மா அம்மான்னு உன்னே மாதிரி தேடிக்கிட்டே இருப்பால்லே. அவளேயும் கொண்டுவந்துட்டா உன்னோடு விளையாடுவா. எனக்கும் என் மகளேத் தேடுது.

சண்முகம் : உங்களுக்கு உங்க மகளேத் தேடுது. நீங்க நல்லவங்க. எங்கம்மாவுக்கு என்னெத் தேடவே இல்லியே. பாட்டி.

*[குழந்தை இப்படிச் சொன்னதும் ஏங்கி விம்முகிறாள் ரஜனி. அவனே மீண்டும் அள்ளி யெடுத்தணைத்து முத்துகிறாள்,]*

ரஜனி : (தன்னே மறந்து) உன்னே மறக்கலேடா. கண்ணு: நீ தானே என் உயிர். உனக்காகத்தானேடா இந்த உடலேச் சுமக்கிறேன். சண்முகம், என் ஈரல் குலேயே !

ராஜன் : (நிலைமை விபரீதமாகப் போவதைக்கண்டு) குப்பி மாமி......

ரஜனி : (திடுக்கிட்டு—உணர்வுபெற்று) நான் போய் வரட்டுமா, குழந்தே....

சண்முகம் : கட்டாயம் வந்துடுவியா ?

ரஜனி : கட்டாயம் இன்னும் ஒருமுறை உன்னைப் பாக்காமல் இந்தக் கட்டையைக் கீழே போட மாட்டேண்டா, ராஜா.

*[இச்சமயம் மாம்பலம் சென்றிருந்த மஞ்சுவும் ராம்னுத்தும் வருகிறார்கள். கிழவியை மஞ்சு கூர்ந்து கவனிக்கிறாள். ராஜன் முந்திக்கொண்டு அறிமுகப் படுத்துகிறான்.]*

ராஜா : இவர், எங்க குப்பிமாமி. தஞ்சா வூருலெருந்து வந்திருக்கார்.

மஞ்சு : குப்பி மாமியா ? (கிட்டே நெருங்கி, கவனித்து) இதுவரைக்கும் இப்படி ஒருமாமி இருப்பதாக நீங்க யாருமே சொல்லியே !...ஏன் மாமி, நீங்ககூட இதற்கு முன்னே ஒருநாளும் வரலியே ?

சண்முகம் : (ஓடிவந்து, ரஜனியின் காலைக் கட்டிக் கொண்டு) பாட்டி, நீ இவ கூடப் பேசாதே. இவ எங்கம் மாவைத் திட்டுவா.

மஞ்சு : அடேய்யப்பா அதுக்குள்ளே மருந்து உரைச்சாச்சா?

ராஜன் : சரி, சண்முகம் நீ மாமா, மாமிகூட இருந்துக்கோ. நான் குப்பிப் பாட்டியை ரயிலேற்றிவிட்டு வந்து விடுகிறேன்.

மஞ்சு : என்ன, அதுக்குள்ளேயா மாமி போகப் போறீங்க ? ரெண்டு நான் இருந்துட்டுப் போனு என்ன ?

ராஜன் : இல்லை. அவர்களுக்கு ரொம்ப அவசரமான ஜோலி இருக்கு......வாங்க மாமி-

*[மீண்டும் ஒருமுறை குழந்தைக்கு முத்த மழை பெய்துவிட்டு ராஜனுடன் வெளியே வருகிருள். மஞ்சுவும் ராமனுத்தும் கண்ணடித்துக் கொள்கிருர்கள்.]*

ராஜன் : (தெருவில் நடந்துகொண்டே) ரஜனி !

ரஜனி : வேண்டாம், ஸ்வாமி. குப்பி என்றே அழையுங்கள். ரஜனி இன்ருேடு ஒழிந்தாள். இனி குப்பி தான் உயிரோடிருப்பாள்—தன் பேரனை மீண்டும் காணலாம் என்ற நம்பிக்கையில்.

ராஜன் : குழந்தையின் மனதை நீ பேதலிக்கச் செய்து விட்டாய்.

ரஜனி : ஸ்வாமி, குழந்தை என்னை அடையாளம் கண்டு கொள்வான் என்று பயந்தீர்கள். என் செல்வக் களஞ்சியத்தை அள்ளி எடுத்து ஆனந்திக்காமல் செல்ல என் பேதை மனம் அடம்பிடித்து மறுத்தது. யோசித்தேன். யோசித்தேன். என் கண்ணீர், வேண்டுகோள், அழுகை—எந்த விலையாலும் பெறமுடியாத இந்த ஆனந்தத்தை என் கலையின் விலையால் பெறத் துணிந்தேன். நான் வேஷக்காரிதானே? என் நடிப்புக்கலை ஆயிரக்கணக்கான ரசிகர்களுக்கு இன்பமளித்திருக்கிறதுதானே. இன்று என் மனச் சாந்திக்காக நான் பெற்ற மகனிடமே நடிக்கத் துணிந்தேன், கிழவியாக மாறினேன். என் இருதயத் துண்டை கண்ணுரக் கண்டேன், அவன் குயில் மொழியைச் செவிகளால் பருகினேன், ஆனல் நான் நினைத்தது ஒன்று. நடந்தது வேருென்று. ரத்தபாசம் எப்படியோ தன் வேலையைச் செய்துவிட்டது. குழந்தைக்கு என் பிரிவைத் தாங்கமுடியவில்லை, அவனைத் தேற்றுங்கள். நான் வருகிறேன் !

*[ராஜனின் காலைத்தொட்டு கண்களில் ஒத்திக் கொண்டு, அரும்புமனதை இரும்பாக்கிக் கொண்டு வேகமாகச் செல்லும் அந்த துர்பாக்கிய தாயையே பார்த்துக் கொண்டு பேயறைந்தவன் போல் நின்ருன் ராஜன்.]*

காட்சி : 22] [கடற்கரை

[மஞ்சுவிடம் மற்றொரு சதித்திட்டத்தைத் தருகிறான், ராம்நாத். குழந்தை சண்முகம் விளையாடிக் கொண்டிருக்கிறான்.]

ராம்நாத் : மஞ்சு, மதியிழந்து பேசாதே. கொஞ்சம் யோசித்துப்பார். நேற்றிருந்த ராஜனையா நீ இன்று கண்டாய் ? கிழவி வேஷத்தில் வந்து உளவறிந்து சென்றவள் ரஜனி என்பதை நாமறிவோம்......ரஜனி ! மீண்டும் அதே ரஜனி ! அன்று பிச்சைக்காரியாக வந்தாள். இன்று வேஷக்காரியாக நுழைந்திருக்கிறாள். அவள் வேஷத்தை மாற்றியிருக்கலாம். ஆனாலும் விஷம் பழைய விஷமேதான். மறுபடியும் குறுக்கிடுகிறாள் உன் திட்டங்களைக் குட்டிச்சுவராக்க !

மஞ்சு : இருக்கலாம். அதற்காக...இவ்வளவு பயங்கரத்திட்டமா தீட்டுவது ? பாவம், ஒரு குற்றமுமறியாத குழந்தையின் பாலிலா நஞ்சைக் கலப்பது ? அப்பப்பா... நினைக்கும்போதே நடுங்குகிறதே நெஞ்சு !

ராம்நாத் : மஞ்சு, சஞ்சலிக்கிறதா உன் நெஞ்சு ? 'சந்தேகம்' என்ற நாடகத்தின் மூலம் நாம் செய்த சதியின் பலனாக ராஜன் ராஜனியை அடியோடு மறந்தான்—அவள் பார்வையிலிருந்தே மறைந்தான் ! இன்று திரும்பவும் அவனுக்குச் சபலம் தட்டுவானேன் ? சிந்தித்துப் பார்த்தாயா ? ஏன், மௌனம் ?...பைத்தியக்காரி.. ரஜனி இங்கு வருவதற்கோ, ராஜனுக்கு அவள் மேல் மீண்டும் அனுதாபம் பிறப்பதற்கோ காரணம் யார் ? அதோ பார், அதோ குதித்தோடி வருகிறானே சண்முகம்—இல்லை, உன் அழிவிற்கு அபாயச்சங்கு ! உன் வீழ்ச்சிக்கு விண்ணப்பம் ! உறுதியாகச் சொல்கிறேன் மஞ்சு, இந்தச் சிறுவன் உயிரோடிருக்கும்வரை ஈடேறப் போவதில்லை உன் லட்சியம்.

மஞ்சு : ஈடேறாமலே போகட்டும். என்ன ஆனாலும் சரி. இந்தப் பச்சை ரத்தம் சிந்தும் படுபாதகச் செயலுக்கு நான் ஒருக்காலும் உடந்தையாயிருக்கப் போவதில்லை.

ராம் : ஹஹ்ஹஹ்ஹாஹா: பைத்தியக்காரி. ரத்தம் ஒரு சொட்டுக்கூட சிந்தப்படமாட்டாது. ஒரு துளி விஷம். ரத்தம் உடம்பிலேயேதான் இருக்கும். இப்போ சொல்லு, சம்மதந்தானே ?

மஞ்சு : என் முடிவு மாற்றமுடியாதது. மறந்துவிடு!

ராம் : என்ன ! [பல்லை நரநரவென்று கடித்துக் கொண்டு] மாற்ற முடியாததா ? மண்டுகமே ! அழிவுக்கு ஆரத்தி சுற்றுகிறுய். போ. எக்கேடு கெட்டுப்போ. தொலைந்து போ !

மஞ்சு : ராம், வரம்பு மீருதே. ஒரு காலத்தில் உன் நயவஞ்சக மகுடி கேட்டு வகை தெரியாமல் ஆடத்தான் செய்தேன். உன் தந்திரோபாயங்களுக்கு ததாஸ்து கூறினேன். உன் சூழ்ச்சிக் கயிற்றிலே சுழன்றேன் பம்பரம்போல். இணைபிரியா சகோதரர்களை ஜென்ம சத்துருக்களாக்கினேன். தந்தையைப்போல் என்னைப் பாதுகாத்த பண்டிட்டின் உயிருக்கே எமனுக நின்றேன். அந்தப் பேதை ரஜனியின் உயிருக்குயிரான கணவனை— மைந்தனைப் பிரித்தேன்...இதனுல் எல்லாம் என்ன பலன் கண்டேன் ? என் எண்ணம் ஈடேறியதா ? என் சூழ்ச்சி பலித்ததா ? வஞ்சகர்களாகிய நமது வீழ்ச்சி நெருங்கி விட்டது. நாம் தோண்டிய சதிக் கிடங்குகளிலே நாமே தள்ளப்பட்டு, மண் மூடப்படும் நாள் நெருங்கிவிட்டது... இன்றேனும் நாம் திருந்திடவேண்டும். இல்லையேல் வருந்த நேரிடும். இவ்வளவு பயங்கரமான கொலையைப் பற்றி நீ சதிசெய்யாமலிருந்தால் ஒரு வேளை இன்றுகூட என் கண்கள் திறந்திருக்கமாட்டா. ஆனுல் இப்பொழுது அவை திறந்துகொண்டன !

ராம் : ஹஹ்ஹாஹா......மஞ்சு, இதுவரை உறுதி யோடிருந்த உன் மனம் 'கொலை' என்றதும் நிலைகுலைந்து விட்டதே ! பாவம், என்ன இருந்தாலும் நீ ஒரு பெண் தானே ! மெல்லியலார் என்று பெண்களைக் குறிப் பிட்டது எவ்வளவு பொருத்தம் ! இதைச் சொல்வதற்கு நீ ஏன் சுற்றி வளைக்கிருய் ? குழந்தையைத் தீர்த்துக்கட்ட உனக்கு உறுதி இல்லாவிட்டால் அதை என்னிடம் விட்டு

விடு. இந்தக் கரம் பேனு மட்டுந்தான் பிடிக்கும் என்று நினைத்துக்கொண்டாய்? அவசியம் ஏற்பட்டால் வீர வாளும் ஏந்தும்!

மஞ்சு: பாதகா, என்ன சொன்னுய்? பச்சிளம் குழந்தையிடம்தானு நீ வீர வாள் ஏந்தப்போகிருய்? மனிதப்பதரே! உண்ட வீட்டிற்கும் இதுவரை செய்த இரண்டகம்போதாதா? எந்தப்புண்ணியாத்மாவின் உப்பை இதுவரை சாப்பிட்டாயோ அந்த மகானின் குடும்ப விளக்கை—ஒரே ஜோதியை அணைத்துவிடத் துணிந்தாயா? இந்த மஞ்சு வஞ்சகிதான். ஒரு காலத்தில் வஞ்சம் தீர்க்கத் துடிக்கத்தான் செய்தது இந்த மஞ்சுவின் நெஞ்சு. ஆனுலும் நான் ஒரு பெண். என் உடலிலும் ஒரு உள்ளம்! நான் உயிரோடிருக்கும்வரை உன் எண்ணம் பலிக்காது.

ராம்: ஹஹ்ஹஹ்ஹாஹா.! நீ ஒரு பெண்ணு? அப்படியானுல் நீ இதுவரை ஆடிய பேய்க்கூத்துக்கள்?

மஞ்சு: மறுக்கவில்லை. ஆடத்தான் செய்தேன்—உன் பித்தலாட்டப் பிலாக்கணத்திற்கேற்ப. அந்த மஞ்சு இன்று செத்துவிட்டாள். இவள் புதிய மஞ்சு. இதுவரை செய்த பாவங்களுக்குப் பிராயச்சித்தமாக இனி என் வாழ்நாள் முழுதுமே ராஜனின் குடும்ப சேவைக்கு அர்ப்பணிக்க உறுதிகொண்டுவிட்டேன்.

ராம்: ஓஹோ! இவ்வளவு தூரம் சென்று விட்டாயா! புலிக்குப் புள்ளிமானுடி புத்தி சொல்வது? கள்ளி! வருகிறேன்.

**காட்சி: 23.]** **[கலையழகன் வீடு**

*(ராஜன் கண்ணீர் மல்க 'கவலையே உருவாக நிலை கொள்ளாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிருன். பக்கத்தில் ஒருகட்டிலிலே குழந்தை சண்முகம், 'அம்மா, பாட்டி' என்று அரற்றிக்கொண்டு, கடுமையான ஜுரத்தில் உழன்றுகொண்டிருக்கிருன். மஞ்சுவின் மனதிலே ஏற்கெனவே முளைவிட்டிருந்த மாற்றம் இப் போது இந்த எதிர்பாராத சம்பவத்தால் பெருமர*

*மாகவே வளர்ந்துவிட்டது. குழந்தையை இராப்பகலாக அவள்தான் கண்ணுங்கருத்துமாயிருந்து கவனிக்கிருள். கலையழகன் பத்திரிகாலயத்திலிருந்து வருகிருன்.]*

கலையழகன் : குழந்தைக்கு எப்படி இருக்கிறது, ராஜன் ?

ராஜன் : (மௌனமாகக் கண்ணீரைத் துடைக்கிருன்.)

கலையழகன் : உனக்குத் தெரியாததா, ராஜன்! மகா மோசத்...ஆமா, டாக்டர் என்ன சொன்ருர் ?

ராஜன் : நான் மோசம் போயிட்டேன், நண்பா. டாக்டர்கூட கைவிட்டாப்போல...ஆ ! (அலறுகிருன்.)

கலையழகன் : என்ன ?

மஞ்சு: ஹூம்...நானுந்தான் கவனித்துக்கொண்டே வருகிறேன். விடுகிற மூச்செல்லாம் 'அம்மா. பாட்டி' என்றே குழந்தை முனங்குகிருன்.

*['அம்மா' என்று மஞ்சு சொன்னதும் குழந்தை சிறிது கண்ணைத் திறந்து 'அம்மா வந்துட்டாளா. மஞ்சு மாமி ?' என்று கேட்டுவிட்டு மீண்டும் கண்களை மூடிக்கொள்கிருன். ராஜன் சகிக்க முடியாமல் வாய்விட்டுக் கதறுகிருன்.]*

மஞ்சு : கலையண்ணு, சண்முகத்துக்கு எல்லாம் மன வியாதிதான்,

கலையழகன் : அப்படீன்ரு?

*[மஞ்சு, கலையழகனைத் தனியாக அழைத்துப் போய் எல்லா விஷயங்களையும் விபரமாகச் சொல்லி மீண்டும் அழைத்துக்கொண்டு வருகிருள்.]*

கலையழகன் : ராஜன், நீ மகா மோசத்திலும் மகா மோசம். ஒரு உயிர்—ஆசை மகனின் ஆருயிர்—மதிப்பிட முடியாத மாணிக்கத்தின் உயிர்—பேசும் பொற்சித்திரத்தின் ஆசை உயிர் இதோ ஊசலாடுகிறது !—அதுவும்

பெற்ற தகப்பனுகிய உன் கண் முன்னே ! நீ பார்த்துக் கொண்டு பேசாமலிருக்கிருய். கண்ணீர் விடுகிருய். மகா மோசக்......

ராஜன் : என்னை என்ன செய்யச் சொல்கிருய் நண்பா ? என் உயிரைத் தியாகம் செய்வதன் மூலம் என் செல்வன் பிழைத்துக் கொள்வான் என்ருல் இதோ நான் தயார். (விம்முகிருன்.)

கலையழகன் : மகா மோசத்திலும் மகா மோசம்! காரியத்தை மறந்து கண்ணுப்பின்ஞு என்று கத்தாதே. குழந்தைக்கு இனி எந்த மருந்தும் பலன்தராது......

ராஜன் : (துடித்து) என்ன சொன்ஞய் !

கலையழகன் : பதருதே. மருந்து இனி வேலை செய்யாது. மன மாற்றம் தேவை.

ராஜன் : யாருக்கு ?

கலையழகன் : உனக்கு !

ராஜன் : எனக்கா?

கலையழகன் : ஆம், உனக்கேதான்.

ராஜன் : விளக்கிச் சொல்லப்பா.

கலையழகன் : குழந்தை சீக்கிரம் குணப்பட வேண்டும். அவ்வளவுதானே ?

ராஜன் :— அதுவேதான் என் பிரார்த்தனை ! ஜீவ மந்திரம் ! எல்லாமே !

கலையழகன் : அதற்காக நீ எத்தகைய தியாகத் திற்கும் தயார், இல்லையா ?

ராஜன் : (எரிச்சலுடன்) இதென்னடா கேள்வி ?

கலையழகன் : அப்படியாஞல் உடனே தந்தி பறக் கட்டும்.

ராஜன் : எந்த டாக்டருக்கு ?

கலையழகன்: இயற்கை டாக்டருக்கு!—ரஜனிக்கு!—ரஜனிக்கு !—சண்முகத்தின் தாய்க்கு !—உன் தர்மபத்தினிக்கு !

ராஜன் : கலையழகா !.........

கலையழகன் : பேசாதே....எப்படியும் குழந்தையின் உயிர் காப்பாற்றப்படவேண்டும். அது அந்த அற்புத டாக்டர் ரஜனியால்தான் முடியும்.

ராஜன்: அந்தப் பதித் துரோகிக்குத் தந்தி கொடுப்பதா?

மஞ்சு : துரோகத்தைப்பற்றிப் பேசும் சூழ்நிலையா இது ! வேகமடையக் கூடாது அண்ணா. விவேகத்தால் செயலாற்ற வேண்டும். ரஜனி வந்தாகவேண்டும்—எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரம். ஒவ்வொரு நிமிஷமும் மதிப்பிட முடியாதது.

ராஜன் : நீயா சொல்கிறாய், மஞ்சு !

மஞ்சு : ஆம், நானேதான். ஆச்சரியமாயிருக்கிறதா, அண்ணா ? இவள் புதிய மஞ்சு......கலையண்ணா, உம்ம்... சீக்கிரம் போய் தந்தியை அனுப்பிவிட்டு வாருங்கள். (கலையழகன் போனபின், ராஜனிடம்) தாங்கள் ஸ்நானத்திற்குப் போங்கள் அண்ணா. வெந்நீர் ஆறிப்போகிறது. குழந்தையை நான் கவனித்துக்கொள்கிறேன். நாளை ரஜனி வந்துவிடுவாள். சண்முகம் பூரண சுகமடைந்து விடுவான் போங்கண்ணா...வெந்நீர் குளிர்ந்திருக்கும்

*[ராஜன் ஸ்நானத்திற்குச் செல்கிறான். குழந்தை ஏதோ வாய்புலம்பவே மஞ்சுகட்டிலருகே சென்று குனிந்து கவனிக்கிறாள். 'அம்மா' என்று குழந்தை உச்சரிப்பதைக் கேட்ட மஞ்சுவின் கண்களில் நீர் ததும்புகிறது. பின்னால்காலடிசப்தம் கேட்டு, கண்களைத்துடைத்துக் கொண்டு, திரும்பிப்பார்க்கிறாள். ராம்நாத் கேலிச் சிரிப்புடன் அவளையே பார்த்துக் கொண்டு நிற்கிறான்.]*

ராம்நாத் : (கிண்டலாக) ஆஹாஹாஹா ! என்ன பாசம் ! என்ன பாசம் !! இந்தச் சனியன் இன்னும் சாகமாட்டேங்கிறதே என்றுதானே......

மஞ்சு : சீ, மனிதப்பதரே ! இரக்கம் என்ற சொல் உன் அதிகாரதியிலேயே கிடையாதா ?

ராம் : என்னிடம்தான் அகராதியே கிடையாதே. அன்பின் அவதாரமே! பாசப் பர்வதமே ! இந்தப் பிச்சைக் கார நாய்க்குட்டியின் மீது திடீரென்று தங்களுக்கு எப்பொழுது இவ்வளவு கருணை சுரந்ததோ ?

மஞ்சு : என் மனம் துக்கத்தால் விம்மி நிற்கிறது. ஏற்கனவே ராஜனுக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சியாக பல சம்பவங்கள் நிகழ்ந்து விட்டனவே என்றும் யோசிக் கிறேன். இல்லாவிட்டால்......

ராம் : இல்லாவிட்டால் ? நமது திருமணத்தை உடனே நடத்தி வைக்கும்படி சொல்லிவிடுவாயோ !

மஞ்சு : திருமணம் !......உன் கழுத்தை நெறித்து உன் பிணத்திற்கு இறுதி மணம் செய்து வைத்திருப்பேன். போய்விடு இங்கிருந்து. என் முகத்தில் விழிக்காதே.

ராம் : அப்படியானல் இனி உன்னை இருட்டிலா சந்திக்கச் சொல்லுகிறாய் ?

மஞ்சு : ஆமாம்.—இதையும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு.

*[அவன் கன்னத்தில் பளாரென்று அறைகிறாள். ராம்னுத் பேய்ச் சிரிப்புச் சிரிக்கிறான். அந்த சப்தம் கேட்டு குழந்தை பயந்து அழுகிறான். ராம்னுத்தின் கவனம் குழந்தை மேல் செல்லுகிறது.]*

ராம் : மஞ்சு, எல்லாம் இந்தப் பிச்சைக்காரச் சிறுக்கி மகனுல்தானே வந்தது. இதோ, முதலில் இந்தச் சனியனுக்கு ஒரு முடிவு கட்டிவிட்டு அப்புறம் உன்னைக் கவனிக்கிறேன்.

*(சாடிச் சென்று குழந்தையின் கழுத்தைப் பிடித்து நெரிக்கப்போகிறான். குழந்தை அலறித் துடிக்கிறது. ஆவேசம் வந்த மஞ்சு ஆப்பிள் பழம் நறுக்க வைத் திருந்த பெரிய கத்தியை எடுத்து ஓங்கிக்கொண்டு 'தொடாதே' என்று கர்ஜிக்கிறாள். 'ஆ' வென்றலறு*

*கிருன் ராம்ஞத். இதே சமயம் உள்ளிருந்து குளித்து விட்டு வருகிருன். ராஜன்.)*

ராஜன் : (பதறிப்போய்) மஞ்சு! என்ன செய்யத் துணிந்தாய் !!

*(ராஜனின் குரல் கேட்கவே ராம்ஞத்தின் பிடி தளர்கிறது. மஞ்சுவின் ஓங்கிய கை தணிகிறது. குழந்தை 'அப்பா, அப்பா' என்று அலறுகிருன்.)*

மஞ்சு : என்னைத் தடுக்காதீர்கள், அண்ணு, இந்தத் துரோகியைத் தொலைத்துக்கட்டுவதன் மூலமாவது என்னை என் வாழ்நாளில் ஒரு புண்ணிய காரியத்தைச் செய்ய விடுங்கள்.

ராஜன் : துரோகிகளைக் கொன்றுவிடுவதன் மூலம் நல்ல காரியத்தைச் செய்ய முடியாது, மஞ்சு. அவர்களை மன்னித்து நல்வழிக்குத் திருப்புவதன் மூலம்தான் உண்மையான வெற்றியடைய முடியும். திருந்தும் பொழுது துரோகி ராம்ஞத் இறக்கிருன்—புனிதன் ராம்ஞத் தின் பிறக்கிருன்...........கத்தியை வீசி எறிந்துவிட்டு, ராம்ஞத்தின் புத்தியைத்! தட்டி எழுப்பு. (ராம்ஞத்தைப் பார்த்து) ராம்ஞத்! பால் மணம் மாருத என் பாலகன் உமக்கு என்ன தீங்கிழைத்தான் ?

ராம்ஞத் : (கண்ணீர் கட்டின்றி ஓட — கதறிக் கொண்டே ராஜனின் காலில் விழுந்து) என்னை மன்னித்து விடுங்கள், ராஜன்......மஞ்சுதான் என் கண்களைத் திறந் தாள் என்று நினைத்தேன். ஆனுல், தங்கள் அருமை மைந் தனைக் கழுத்தை நெறித்துக் கொல்லத் துணிந்த என்னை தாங்கள் மனப்பூர்வமாக மன்னித்த மாண்பு என்னைக் குத்தாமல் குத்தி, கொல்லாமல் கொன்றுவிட்டது. 'இன்ஞ செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயஞ் செய்துவிடல்' என்று தெய்வப் புலவன் கூறியதை நான் சொல்லில்மட்டும் கொண்டேன். நீங்களோ செய்தே காட்டிவிட்டீர்கள்.

மஞ்சு, நீ உத்தமி. இனி நீ உன் கரங்களுக்கு சிரமம் கொடுக்க வேண்டாம். இங்கே கொடு அந்தக் கத்தியை. ராஜன் போன்ற மனிதப் புனிதர்கள் சுவாசிக்கும் பரிசுத்தக்

காற்றை, என் போன்ற துரோகிகள் இனிஒரு நிமிஷங்கூட சுவாசிக்கக்கூடாது. (கத்தியைப் பிடுங்க முயல்கிருன். மஞ்சு அதைத் தூர வீசி யெறிகிருள்.)

மஞ்சு : இல்லே. ராம்! புத்தி புகுந்த இடத்தில் கத்தி குடியிருப்பதில்லே.

ராஜன் : மிஸ்டர் ராம்னுத், நேரம் தவறிப்போகிறது. சீக்கிரம் சண்முகத்துக்கு மருந்தை ஊற்றிக் கொடுங்கள்.

*[இந்த எதிர்பாராத உத்தரவு இப்பொழுதுதான் மனம் மாறிய ராம்னுத்தின் உள்ளத்தின் அடித்தளத்தையே உலுக்கி விடுகிறது. கூப்பிய கரங்களுடன், கண்ணீரைத் தங்குதடையின்றி ஓடவிட்டுக்கொண்டே மருந்து மேஜையை நோக்கித் தாவுகிருன். ராஜனும் மஞ்சுவும் ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றனர்.]*

## காட்சி : 24] [கலேயழகன் வீடு

கலேயழகன் : ராஜன்! நீ இன்னும் 'டிரஸ்' பண்ணிக் கலேயா ? மகாமோசத்திலும் மகாமோசம் ! மணி நாலரை ஆயிட்டுதே. வண்டி இதுக்குள்ளே வந்திருக்கணுமே. சேச்சே. மகாமோசம்.........

ராஜன் : (உடுப்பணிந்துகொண்டே) நாலரைஆயிட்டுதா ! இரவெல்லாம் தூக்கமில்லே, பாரு. கொஞ்சம் அசதியா தூங்கிவிட்டேன். உம்ம்......மஞ்சு, குழந்தைக்கு நாலு மணிக்கு மருந்து ஊத்திக் கொடுத்தாயா ?

மஞ்சு : இல்லே. அண்ணு.

ராஜன் : கொடுக்கலியா ?

மஞ்சு : நான் கொடுக்கல்லே. அவருதான் போட்டி போட்டுக் கொண்டு நிற்கிருரே. (நாணுகிருள்.)

ராஜன் : (புன் சிரிப்புடன்) ஓ, மிஸ்டர் ராம்னுத் கொடுத்தாரா!

*[ராம்னுத் வெட்கத்துடன் கடைக்கண்ணுல் மஞ்சுவைப்பார்க்க எல்லோரும் சிரிக்கிருர்கள். அஜீர்ணம் வாசல் பக்கமிருந்து ஓடிவருகிருன்]*

கலையழகன் : என்னடாது? வேட்டை நாய் மாதிரி வீட்டுக்குள்ளே ஓடி வர்ரே? மகாமோச.........

அஜீர்ணம் : (ராஜனிடம்) எசமான், அந்த அம்மா மறுபடியும் வந்துட்டா. விரட்டவா?

ராஜன் : வந்து விட்டாளா?

அஜீர்ணம் : ஆமா எசமான். இப்ப ஓட ஓட வெரட்டியடிக்கிறேன்.

ராஜன் ; (சிரித்துக்கொண்டே) பொறுப்பா. கலைய ழகா, மஞ்சு, ரஜனி வந்துட்டாளாம்.

*(எல்லோரும் வாசலுக்கு ஓடுகிறார்கள். கலங்கிய கண்களுடன் வாசலில் தயங்கி நிற்கிறாள் ரஜனி]*

மஞ்சு : (ஆவலோடு) வாம்மா, ரஜனி. என்ன தயக்கம். உள்ளேவா.

ரஜனி : (ஓடிவந்து மஞ்சுவைக் கட்டிப் பிடித்துக் கொண்டு) என் செல்வம் எப்படி இருக்கிறான், அக்கா?

மஞ்சு : இனி பூரண சுகம் பெற்றுவிடுவான். நீ உள்ளே வாம்மா.

ராஜன் : (ரஜனி உள்ளே வரத்தயங்குவதைக் கண்டு) போ!

ரஜனி : (திடுக்கிட்டு விழிக்கிறாள்.)

ராஜன் : உள்ளே போ என்றேன்.

ரஜனி : (கண்ணீரைத் துடைத்துக்கொண்டே) இப்படியே வரலாமா அல்லது......

ராஜன் : கிழவி வேஷம் தேவையில்லை.

*[ராஜனின் பேச்சைக் காதில் வாங்கிக் கொள்ளாமலே, 'சண்முகம்' என்று தாவியோடிச் சென்று கதறுகிறாள் ரஜனி. எல்லோருக்கும் உணர்ச்சி மேலிட கண்ணீர் விடுகின்றனர். ஆனால்ரஜனியை இப்பொழுதுதான் முதன் முதலாகக்கண்ட கலைழகன் பேயறைந்துவனைப்*

*போல் அப்படியே ஸ்தம்பித்து நிற்கிருன். இதைக் கவ னித்து விடுகிருன் ராஜன்]*

ராஜன் : என்னடா இது ? ஏனிப்படிக் கல்லாய்ச் சமைந்து விட்டாய் ?

கலேயழகன் : இல்லே, ராஜன். எங்கோ......இன்ன தென்று உணர முடியாத ஓர் உணர்ச்சி......பரபரப்பு......, இந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்ததும்......உண்டா யிற்று......பெயர் என்ன என்று சொன்ஞய் ?

ராஜன் : ரஜனி.

கலேயழகன் : ரஜனி !......ரஜனி !!......நான் இதற்கு முன் இந்தப் பெண்ணே எங்கோ பார்த்திருக்க வேண்டும். ......மகாமோசத்திலும்......நிச்சயம் பார்த்திருக்க வேண் டும்.........

ராஜன் : அப்படியாஞல் ரஜனியை உனக்கு முன்ன மயே தெரியுமா ?

கலேயழகன் : நிச்சயமாகச் சொல்ல முடியவில்லே... ஆஞல் அந்த முகம்......அதே கண்கள்...அந்தத் தழும்பு ......ராஜன் என்னேடு கொஞ்சம் வா.

ராஜன் : என்னடா உளறுகிருய் ?

*[ராஜனின் கையைப்பிடித்து இழுத்துக்கொண்டே மாடிக்குச் செல்லுகிருன். தன் பெட்டியைத் திறந்து நான்கு வயதுக் குழந்தையின் புகைப்படம் ஒன்றையும் ஓர் உயிலேயும் எடுத்து ராஜனிடம் காட்டுகிருன். இருவ ரும் அந்தப்படத்தை மாறிமாறிப் பார்க்கிருர்கள்]*

கலேயழகன் : பார்...—கூர்ந்துபார்.........அதே கண் கள். அதேமூக்கு...அதே சாயல்......அதே ஏறு நெற்றி.. எல்லாவற்றையும் விட முக்கியமாக அதே தழும்பு !

ராஜன் : பெயரும்கூட ரஜனி என்றுதானே எழுதப் பட்டிருக்கிறது. அதுசரி, இதெல்லாம் உனக்குக் கிடைத்த தெப்படி ?

கலேயழகன் : உயிலேப் படி.

ராஜன் : (உயிலேப்படிக்கிருன்.)

"......................சோமசுந்தரம் பிள்ளேயாகிய நான் எனது சுமார் நாற்பத்தையாயிரம் ரூபாய் பெறு மதியான சொத்துக்களேயும் (விபரம் கீழே கொடுக்கப் பட்டிருக்கிறது.) உத்தரவாதம் பேங்கில் கிடக்கும் ரூபாய் முப்பத்து இரண்டாயிரத்து ஐநூற்று எழுபத் தைந்தையும் கீழ்வரும் விவரப்படி சாஸனம் செய் கிறேன்.

சொத்திலும், ரொக்கத்திலும் மூன்றில் இரண்டு பாகம் எனது மூத்தபுத்திரன் திருநிறைச் செல்வன் சோ. நல்ல கண்ணுவுக்கும், மீதமுள்ள ஒருபங்கு எனது இளேய புத்திரி திருநிறைச் செல்வி ரஜனிக்கும். தட்டு முட்டுச் சாமான்கள் நல்லகண்ணுக்கும், இரும்புப் பெட்டியிலிருக்கும் என் மனேவியின் நகை கள் யாவும் ரஜனிக்கும் சேரவேண்டியது.

ரஜனி நான்கு வயதுச் சிறுமியாயிருக்கும் போது ஊருக்கு வெளியே டேரா போட்டிருந்த நாடோடிக் கும்பலால் கடத்திச் செல்லப்பட்டு இதுவரை தக வலே தெரியவில்லே.

அவளது அங்க அடையாளங்களாவன:—நல்ல எலுமிச்சம் பழநிறம். சாயலில் என் மகன் நல்ல கண்ணுவைப் போன்றவள். வலது புருவத்திற்கு சற்று மேலே நெற்றியில் ஒரு விரல் நீளமுள்ள தழும்பு ஒன்று பளிச்சென்று தெரியும்.

கடைசிவரை அவள் கண்டு பிடிக்கப்படாவிட் டால் அவளது பாகத்தில் பாதி என் மகன் நல்லகண் ணுவுக்கும், மீதி உள்ளூர் சிவன் கோயிலுக்கும் சேர வேண்டும். குறைந்தது இருபத்தைந்து வருடங்களா வது அவள் வரவை எதிர்பார்க்கவேண்டும்........"

ராஜன் : இவளேதான்! சந்தேகமில்லே.

கலேயழகன் : ஆம், ரஜனி! —என் தங்கை! — கிடைத்து விட்டாள்! என் தங்கை கிடைத்து விட் டாள்!

ராஜன் : கலையழகா......!

கலையழகன் : மகாமோசத்திலும் மகாமோசம். மாப்பிள்ளைன்னு கூப்பிடப்பா.

ராஜன் : மன்னித்து விடு, நண்பா. நாம் என்றும் போல் நண்பர்கள் மாத்திரம்தான். எனக்கு மனைவியாயிருக்கும் உரிமையை ரஜனி என்றோ இழந்து விட்டாள்.

கலையழகன் : ராஜன் !

ராஜன் : ஆம், நண்பா. என்னுடைய மனைவி என்று பறை சாற்றிக்கொண்டே என் அண்ணனோடு கொஞ்சிக் குலவி என்னை வஞ்சித்துவிட்ட குலத்துரோகி அவள் !

குரல் : ராஜன்! உன் அறிவுக்கண்ணை மறைந்திருந்த சந்தேகத் திரை இன்னுமா விலகவில்லை ?

[குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கிறார்கள். கண்ணீர் வழிந்தோட உள்ளே நுழைகிறான் கேசவன்.]

ராஜன் : அண்ணா !......

கேசவன் : ஒவ்வொரு தடவையும் ரஜனியை அழைத்துக்கொண்டு நான்தான் சென்னைக்கு வந்தேன். ஆயினும் தக்க சமயத்தில் உன் சந்தேகப் பேயை விரட்டியடிக்காமல் உன் ஆத்திரத்துக்கு ஆளாகிவிடக்கூடாது என்றே ரஜனியை மட்டும் உன்னிடம் அனுப்பிவிட்டு நான் வெளியே தங்கிவந்தேன். ஆனால் இன்றுதான் அந்தப் பொன்னான சந்தர்ப்பம் கிடைத்தது. உன்னுடைய அழைப்பின்றியே உன் இடத்திற்கு வலிய வந்திருக்கிறேன். அந்த உத்தமி ரஜனியைச் சந்தேகிக்காதேடா, தம்பி. (கண்ணீரைத் துடைத்துக்கொண்டு) அவள் என் அன்புச் சகோதரி — இல்லை, அருமை மகள் ! தம்பி, அவளுக்கும் எனக்கும் நீ மாசு கற்பிப்பது தந்தைக்கும் மகளுக்கும் மாசு கற்பிப்பது தானடா...மகாபாவம்...மன்னிக்கமுடியாத— மன்னிப்பே கிடையாத பாவம் !... (ஏங்கி அழுகிறான்)

ராஜன் : (கும்பிப்போய்) அப்படியானல். நான் என் காதுகளால் கேட்டது ?

மஞ்சு : (நுழைந்து கொண்டே) கபட நாடகம் ...

ராம்னுத் : (வந்துகொண்டே) இந்தக் கயவன் தயாரித்தது !

ராஜன் : எல்லாம் என்ன திட்டம் ?

ராம்னுத் : ராஜன், கதாசிரியனுக என்னிடம் எழுத்துக்கலை இருப்பதை நீங்கள் அறிவீர்கள். உங்கள் 'கம்பெனிக்காக நான் எழுதிய ஒவ்வொரு நாடகமும் மக்களின் மனதைக் கவர்ந்து; அவர்களின் ஏகோபித்த பாராட்டையும் ஆதரவையும் பெற்றுத் தந்து கொண்டே என் கலையை வளர்த்தது. கலை வளர வளர தலையிலே கர்வமும் வளர்ந்தது. உங்கள் மன்றம் நடப்பதே என்னுல்தான் என்ற வீண் பெருமை என்னைக் கவ்விற்று.

விலை மதிக்க முடியாத ரத்தினமாகிய கலையை—மனிதப்பண்பை மக்கள் குலத்திற்கெல்லாம் எடுத்துச் சொல்லும் மாண்புமிக்க கலையை—சென்ற காலத்தின் கன்னிகையாகவும், நிகழ்கால மனைவியாகவும், வருங் காலத் தாயாகவும், சேவை செய்யும் மக்கள் குலப் பணிப் பெண்ணுகிய கலையை, மக்களுக்குச் சொந்தமாக்கி, மக்கள் குல நன்மைக்காக, மக்கள் தம் நல்லாட்சி மலர்வதற்காக, சுரண்டலும், அநீதியுமற்ற ஒரு சொர்க்கபூமியைச் சிருஷ்டிப்பதற்காக, கோழைகள்போல் சாகாமல் செத்து வாழும் ஏழைமக்களின் குளிர்ந்து போன ரத்தத்திலே சூடேற்றி அவர்கள் விதியையே மாற்றி அமைப்பதற்காக, அதற்கென பிணியிலே வெஞ்சிறையில்வெதும்புவதும் புன்னகையோடு தூக்குக் கயிற்றை முத்தமிடவும் அவர்களைத் தயாராக்குவதற்காக ; சமதர்மத்தைப் பரப்பப் போவதாகச் சொல்லிக்கொண்டே சாதிப்பூசல்களைக் கிளப்பிவிடும் வேஷக்காரக்கும்பலின் நாசக் கொள்கைகளை நாடறியச் செய்வதாக—இப்படிப்பட்ட புனிதப் பணிக்கு அர்ப்பணிக்காமல், இந்த அற்பன் அந்த ஒப்பற்ற கலையை காமத்திற்குக் காணிக்கை வைத்தேன்!

பதவிப் பித்துக்குப் படைத்தேன் ! எத்திப் பிழைக்க அதைஏணியாக உபயோகித்தேன்! சந்தேக நஞ்சைச் கக்கும் சச்சரவாக்கினேன் !- தந்தைபோல் எம்மைப் பராமரித்த பண்டிட்டைப் பழிவாங்கும் பாசக்கயிருக் கிறேன் !.........

ராஜன் : (பொறுமையிழந்து) இந்தப் பிரசங்கத்துக் கும் அன்று ரஜனி அண்ணன் கேசவனிடம் குலவிக் கொண்டிருந்ததற்கும் என்ன சம்பந்தம் ?

ராம்ஞத் ; இருக்கிறது. அதைத்தான் சொல்ல வந் தேன். ராஜன்! உங்கள் மனதில் சந்தேகப் புயலைக் கிளப்பி குடும்ப வாழ்க்கையைக் குலைப்பதற்குத் திட்டமிட்டேன். உங்களுக்கும் தெரியாமல் 'சந்தேகம்' என்ற ஒரு நாட கத்தை ரகஸ்யமாகத் தயாரித்தேன்—இல்லை, அதன் ஒரு காட்சியை மட்டும் எழுதினேன். நீங்கள் வெளியே போயிருந்து, கேசவன் ரஜனியைச் சந்திக்க வந்த தக்க சமயம் பார்த்து பிரதியை அவர்களிடம் கொடுத்து ஒரு ஒத்திகை பார்த்து அபிப்பிராயம் சொல்லும்படி சொல்லி விட்டு வந்தேன். அந்த நாடகப் பிரதியைத்தான் அவர் களிருவரும் வாசித்துக் கொண்டிருக்கும்பொழுது நீங்கள் வந்தீர்கள். காதில் விழுந்ததும் உங்கள் கருத்தைக் குரு டாக்கும் வார்த்தைகளில்தான் வசனங்களை அமைத்திருந் தேன். நாங்கள் எதிர்பார்த்த பலன் கிடைத்தது. விசா ரித்து சந்தேகத்தைப் போக்கிக் கொள்ளாமல் உடனே ஊரைவிட்டே கிளம்பி விட்டீர்கள். நீங்கள் மட்டும் என்ன, அந்தச் சூழ்நிலையில் யாரும் செய்திருக்கக் கூடிய தைத்தான் நீங்களும் செய்தீர்கள். இதுதான் என் கலைக்குக் கிடைத்த ஆகக் கீழ்த்தரமான—அருவருக்கத் தக்க விலை !

ராஜன் : (துடி துடித்து) அடப்பாவிகளா ! எங்கள் இன்ப மாளிகையை இடித்துத் தகர்த்து நீங்கள் என்ன சுகம் கண்டீர்கள் ? அன்புத் தேவதைகளாகத் திகழ்ந்த அண்ணன் தம்பி பாசத்திலே துவேஷ விஷயத்தைக் கலந்து நீங்கள் சாதித்ததென்ன ?......... (கேசவனின் காலில் விழுந்து) என்னை மன்னித்துவிடு. அண்ணா மன் ன்னித்து விடு. உன் மாசற்ற குணத்திலும் தோசத்தைக் கண்டேனே மாபாவி ! ஐயோ, தந்தையின் மரணம்கூட சரியாகத் திறக்க வில்லையே என் கண்களை ! அருமை அப்

பாவின் ஆத்மாகூட என்னை மன்னிக்காதே! என்னுடைய ஆனந்தத்தையே பெரிதாகக் கருதி விஷம் குடித்தவன் போல் நடித்து தியாகம் செய்தாயே. அண்ணு, நீ சிந்தையில் வைத்து தியானித்து வந்த ரஜனியை...... மன்னிக்க முடியுமா உன்னால்?.........

கேசவன்: சிந்திப் போன பால் — சிந்தித்துப் பயனில்லை, தம்பி, அதோ பார் உன் அன்பின் சின்னம்!

*[ரஜனியின் தோளில் சாய்ந்து கொண்டு எல்லாவற்றையும் குறுகுறு வென்று பார்த்துக் கொண்டிருக்கும் குழந்தை சண்முகத்தைச் சுட்டிக் காட்டுகிறான். ஆனந்தக் கண்ணீர் அலைமோதிப் பாய்ந்துவர அன்பே உருவாக அசையாமல் நிற்கும் ரஜனியிடம் தாவுகிறான் ராஜன்.]*

ராஜன்: (நாத்தழுக்க) ரஜனி, மன்னிக்கக் கூடியதா நான் செய்த மகத்தான துரோகம்? உன் மாசற்ற குணத்தால் இந்த மாபாவியையும் நீ மன்னித்து விடுவாய் தான். என்ன இரும்பு இதயம் படைத்தவன் நான்! குழந்தையைக் காணத் துடிதுடித்த உன் உள்ளம்—அள்ளி யெடுத்தணைத்து ஆர்ப்பரிக்கத் துடித்த உன் கரங்கள்—ஆசிமொழி பேசி, அன்பு முத்தங்களைப் பொழியத் துடித்த உன் அதரங்கள்......சபித்திருக்காதா இந்தச் சண்டாளனை? (தலையில் அடித்துக் கொள்கிறான்.)

ரஜனி: ஸ்வாமி, விஷயம் புரியாமல் குழந்தை மிரள மிரள விழிப்பதை பாருங்கள்.

ராஜன்: (குழந்தையைப் பிடுங்கிக் கொண்டே) என் செல்வமே, நீ கூட இரக்கங் காட்டக் கூடாத அரக்கனடா உன் அப்பன்! பாவமறியாத உன்னை பெற்றதாயிடமிருந்து பிரித்து வைத்தேனே பாதகன்! மன்னிப்பும் உண்டாடா, கண்ணே, எனக்கு? (அழுகிறான்.)

சண்முகம்: அப்பா, அழாதேப்பா.

ராஜன்: இல்லேடா, கண்ணு.

மஞ்சு: சாந்தி தேவதை தவழ்ந்து விளையாடிய குடும்பத்திலே சந்தேகப் பேயைக் குடியேற்றி, பொரு

மைப் பூதத்தைப் புகுத்தி நாசத்திற்கு நல்வாழ்த்துக் கூறிய இந்த மோசக்காரி யாருடைய மன்னிப்பைக் கோருவாள் ? அண்ணு !...ராஜன் !...ரஜனி !...சண்முகம் !......

ராம்ணுத் : யாராவது மன்னிப்புக் கேட்டு மன்ருடி நிற்க வேண்டு மென்ருல், அது கலையைக் காமத்துக்கும் பொருமைக்கும் நாசத்திற்கும் விலையாக்கிய இந்தக்கயவன் தான்! புனிதமான கலையை—நாடகக் கலையை, சினிமாக் கலையை, பேச்சுக் கலையை, எழுத்துக் கலையை, இசைக் கலையை—சாதித் துவேஷத்திற்கும் தேச பக்தி சிரோன் மணிகளை, பெரியோர்களை அறிவாளிகளை நிந்திப்பதற்கும், வர்க்க பேதம் பெற்று குடியாட்சிகளை ஒன்று சேர்ந்து அணி திரண்டு. சமதர்மப் பாதையிலே வெற்றி நடை போடும் விவசாயிகளை தொழிலாளிகளை, ஜாதி குலப் பெய ரால் சீர் குலைத்துச் சின்ன பின்னப் படுத்துவதற்கும் உப யோகிக்கிற பிற்போக்குக் கும்பல் என்னைப் பார்த்த பிறகாவது திருந்திக் கொள்ளட்டும்.

[*தரையில் விழுந்து கும்பிடுகிருன். ராஜன் தூக்கி எடுக்கிருன்.*]

கலையழகன் : மகா மோசத்திலும், மகா மோசம். எல்லோருக்கும் ஒரு முக்கியமான—ஆனந்தமான—சமாச் சாரத்தைச் சொல்ல நான் எவ்வளவு நேரமாக ஆவலோடு காத்துக் கிடக்கிறேன்.........(ராஜனைப் பார்த்து கண்ணைச் சிமிட்டிக் கொண்டே) மகா மோசத்திலும் மகா மோசம். யாராவது சொல்லூண்ணு கேட்கக் கூடாதா ? சரி, இதோ கேளுங்கள் :

சௌபாக்கியவதி ரஜனி—அதாவது திருமதி ராஜன்—இன்று முதல் திரண்ட செல்வத்திற்கு எஜமானி. அத்தோடு கலையழகன் என்ற இந்த சாக்ஷாத் நல்ல கண்ணுப்பிள்ளை யின்—உடன் பிறந்த—சொந்த—ஆருயிர்த் தங்கை.

எல்லோரும் : (ஆச்சரியத்துடன்) என்ன !

ராஜன் : உண்மைதான். ரஜனி, கலையழகனின் சொந்தத் தங்கைதான். இதோ போட்டாவும், உயிலும்!

[எல்லோரும் பரபரப்புடன் போட்டாவையும் உயிலையும் வாங்கிப் பார்க்கிறார்கள். ஆனந்தம் அலை மோதுகிறது.]

ரஜனி : அண்ணா !

கலையழகன் : மகா மோசத்திலும் மகா மோசம் ! சின்னப் பிள்ளையாயிருக்கும் போது கூப்பிடுவாயே, அப்படி 'நல்லண்ணா'ன்று கூப்பிடு.

ரஜனி : நல்லண்ணா ! (எல்லோரும் சிரிக்கிறார்கள். (குழந்தையிடம்) மாமாவைப் பாருடா, ராஜா !

கலையழகன் : மகா மோசத்திலும் மகா மோசம்...

மஞ்சு : ஏன் கலையண்ணா......மன்னிக்கணும்...... நல்லண்ணா, அப்படி என்ன நீங்க அவ்வளவு மோசம் ? (சிரிப்பு.)

ராஜன் : இது நம்ப மாப்பிள்ளைக்கு ரொம்பப் பழகிப் போன ஒரு சொல்லு.

கலையழகன் : ஆமா. நிறுத்தவே முடியலே. மகா மோசத் (விரலைக் கடித்து நிறுத்துகிறான். எல்லோரும் சிரிக்கிறார்கள்.) அஜீர்ணம், டேய், அஜீர்ணம்......மகா மோசத்...(அஜீர்ணம் வருகிறான்.) இன்னிக்கி நீ சமைக்கிற சாப்பாடு நெசம்மாவே அஜீர்ணத்தை உண்டு பண்ணணும் ஆமா. போடா, பிரமாதமான விருந்துக்கு ஏற்பாடு செய், போ.

ராஜன் : (கேசவனிடம்) சற்று சிரமப் பரிகாரம் செய்துகொள், அண்ணா.

கேசவன் : தம்பி, சிரமம்—அதுவும் பரிகாரம் கூட கிடைக்குமா என்ன பகலிரவாக ஏங்கி நின்று ரத்தக் கண்ணீர் வடிக்கச் செய்த சிரமம் இன்று பறந்தோடிப் போய் விட்டதப்பா. உண்மையில் அப்பாவின் ஆவி இன்றுதான் சாந்தியடைந்திருக்கும்.........நாளைக்கே நாம் புறப்பட வேண்டும். கலாதேவி சேவிப்பாரின்றி கண்கலங்கி நிற்கிறாள். நாமெல்லோரும் முதலில் கலா தேவியின் மன்னிப்பைப் பெற வேண்டும்.

காட்சி: 25] [நந்த வனம்

*[ராஜனும் ரஜனியும் உலவி வருகிருர்கள். குழந்தை சண்முகம் ஒரு கையில் காகிதத்தை வைத்துக் கொண்டு, தனக்குத் தானே பேசிக்கொண்டே தளிர் நடைபோடுகிருன்.]*

ராஜன்: ரஜனி. நாடகக் கலைக்கே அர்ப்பணித்து விட்ட நம் குடும்பத்தின் வாழ்க்கை நிகழ்ச்சிகளே ஒரு அருமையான நாடகம் போலல்லவா நடந்து விட்டது!

ரஜனி: ஆமாம். ஆசிரியர் ராம்னுத்தின் கற்பனையும் திட்டங்களும்தானே இந்த நாடகத்தையும் உருவாக்கிற்று?

ராஜன்: ஆனால் கதை எழுதுவதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் இந்த நாடகத்தில் அவர் வில்லனாகக் கனகச்சிதமாய் நடித்தும் விட்டாரே!

ரஜனி: இந்த நாடகத்தில் ஒரு புதுமுகம் தோன்றி அபாரப் புகழ்பெற்று விட்டதே, பார்த்தீர்களா ?

ராஜன்; ஒன்றல்ல. இரண்டு!

ரஜனி: ஆமாம். சண்முகமும் நல்லண்ணுவும்.

வேதாந்தம்: ஆண்டவனே, இதோ பாருங்க. ஆண்டவனே. பேபி ஆண்டவன் எழுதக்கூட படிச்சிக் கிட்டுதே. ஆண்டவனே!

*[ஒரு காகிதத்தில் 'குப்பிப் பாட்டி, குப்பிப் பாட்டி' என்று எழுதப்பட்டிருக்கிறது. பார்த்துவிட்டு ராஜனும் ரஜனியும் சிரிக்கிருர்கள்)*

ரஜனி: யாருடா கண்ணு இதை எழுதிக் கொடுத்தா ?

குழந்தை: மஞ்சு மாமி!.........அப்பா எப்பப்பா குப்பிப் பாட்டி வருவா ?

*[ராஜனும், ரஜனியும் மீண்டும் சிரிக்கிருர்கள்]*

குழந்தை: சொல்லுப்பா......எப்பப்பா வருவா ?

ராஜன்: (ரஜனியிடம்) சொல்லட்டுமா குப்பி மாமி? (சிரிக்கிறார்கள்) சண்முகம், அண்ணிக்கு குப்பிப் பாட்டி மாதிரி வந்தது யாரு தெரியுமா ?

குழந்தை: குப்பிப் பாட்டி !

ராஜன்: அதுதான் உங்கம்மா !

குழந்தை: நிஜம்மாவா, அம்மா ? நீயா குப்பிப் பாட்டி ?......

ரஜனி: ஆமாண்டா ராஜா.

குழந்தை: எம்மா கெழவி மாதிரி வந்தே ?

ராஜன்: உன்னையும் என்னையும் ஏமாற்றத்தாண்டா..

குழந்தை: எப்பிடியம்மா, நீ கெழவி ஆயிட்டே ?

ரஜனி: வேஷம் போட்டுண்டேன்,

குழந்தை; அப்போ நீ அம்மா இல்லே. வேஷக்காரி (சிரிக்கிறான்)

ரஜனி: சரியாச் சொன்னேடா. குழந்தை. நிஜம்மா நான் வேஷக்காரியே தான்.

வேதாந்தம்: ஆண்டவனே, அடுத்த நாடகம் எதை நடத்துரதுண்ணு பெரிய ஆண்டவன் கேட்டுட்டு வரச் சொன்னுங்க.

ராஜன்: என்ன ரஜனி ?

ரஜனி: நமது வாழ்க்கை நாடகத்தையேதான் !

ராஜன்: சபாஷ் ! தத்ரூபமாக நடிக்கலாம். உணர்ச்சிக்குப் பஞ்சமே இருக்காது! என்ன பெயர் வைக்கலாம்?

ரஜனி: அதுதான் அன்றைக்கு ராம்னுத் கதறினரே என் 'கலையின் விலை ! கலையின் விலை'ன்னு!

ராஜன், ஆம் கலையின் விலை. போய்ச் சொல்லுடா வேதாந்தம்.

வேதாந்தம்: (தலையை ஆட்டிக் கொண்டே) கலையின் விலை! கலையின் விலை !! கலையின் விலை !!! (போகிறான்.)

**திரை விழுகிறது.**

## புரட்சிப் பூங்காவில் மற்றொரு புது மலர்!

இன்றையத் தமிழகத்திலே, புனிதமான கலையை—எழுத்துக் கலையை, பேச்சுக் கலையை, நாடகக் கலையை, சினிமாக் கலையை—தனது இழி தொழிலுக்கு விலை கூறி நிற்கிறது ஒரு வெத்து வேட்டுக் கூட்டம்! சென்றகாலக் கன்னியாகவும், நிகழ்கால மனைவியாகவும், வருங்காலத் தாயாகவும் பணிபுரியும் கலை..........

இன்று...

காமத்திற்குக் காணிக்கையாக வைக்கப்படுகிறது! கன்னியரின் கற்புக்குக் கன்னக்கோலாக்கப்படுகிறது! ஜாதித் துவேஷத்தைத் தூண்ட வீதிதோறும் விலை கூறப்படுகிறது! இடிந்து, தகர்ந்து, சரிந்துகொண்டிருக்கும் பணநாயகப் பந்தனுக்கு சுமைதாங்கியாக்கப்படுகிறது!

இந்த இழி தொழில் புரியும் அறிஞர்களை இழுத்து வந்து மக்கள் மன்றத்திலே நிறுத்துகிறது

எம். ஏ. அப்பாஸ் எழுதியுள்ள

# கலையின் விலை